# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව - 2020
# வருடாந்த செயற்திறன் அறிக்கை - 2020
# Annual Performance Report - 2020



කම්කරු දෙපාර්තමේන්තුව
தொழில் திணைக்களம்
Department of Labour

# 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்றிறன் அறிக்கை

## தொழில் திணைக்களம்

## செலவினத்தலைப்பு இல:221

**பொருளடக்கம்**

**பக்கம்**

**முதலாம் அத்தியாயம் :**
**நிறுவன சுயவிபரம் / செயற்படுத்து வதற்கான சுருக்கம்** **01**

1.1 அறிமுகம் 02

1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் 02

1.3 பிரதான செயற்பாடுகள் 03

1.4 திணைக்களத்தின் கட்டமைப்பு 04

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் 05

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிதியங்கள் 15

**இரண்டாம் அத்தியாயம் :**

**முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு** **16**

2.1. பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்காக கைத்தொழில் அமைதியினை பாதுகாத்தல் 17

2.2 விசேட விசாரணைகள் 22

2.3 தொழில் தரங்களைப் உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்துதல் 22

2.4 ஊழியரின் தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்புக்காக கண்ணியமான/சீரிய பணிசூழலை உறுதிப்படுத்துதல் 23

2.5 பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் உழைப்பினை இல்லாதொழித்தல 25

2.6 ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பு 29

2.7 ஊழியர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு 32

2.8 நிர்வாகம் 33

2.9 நிதி முகாமைத்துவம் 35

2.10 திணைக்களத்தின் பணிகளை மேற்பார்வை செய்வதன்மூலம் இலக்குகளை நோக்கி வழிநடாத்துதல் மற்றும் மனிதவள அபிவிருத்தி 36

2.11 புள்ளிவிவர நடவடிக்கைகள் 41

2.12 சேவைகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல 42

2.13 உள்ளகக் கணக்காய்வு 44

2.14 விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள **44**

**மூன்றாவது அத்தியாயம் :**

**2020 டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்றிறன்** **49**

3.1 நிதிச்செயற்றிறன் அறிக்கை 50

3.2 நிதிநிலை சம்பந்தமான அறிக்கை 51

3.3 நிதிப்புழக்கம் தொடர்பான அறிக்கை 52

3.4 நிதி அறிக்கைக் குறிப்புகள் 53

3.5 வருமானம் சேகரிக்கும் செயற்றிறன் 54

3.6 ஒதுக்கீட்டினை பயன்படுத்தும் செயற்றிறன் 54

3.7 நி.பி.208 இன் படி பிற அமைச்சு/திணைக்களங்களின் பிரதிநிதியாக திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வளங்கள் 55

3.8 நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கை செய்யும் செயற்றிறன் 56

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 57

**நான்காவது அத்தியாயம் :**

**செயற்றிறன் குறிகாட்டி** **63**

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) 64

**ஐந்தாவது அத்தியாயம் :**

**நிலையாதார அபிவிருத்தி இலக்குகளை (SDG) நிறைவேற்றும் செயற்றிறன்** **65**

5.1 இனங்காணப்பட்ட பொருத்தமான நிலையாதார அபிவிருத்தி இலக்கு 66

5.2 நிலையாதார அபிவிருத்தி இலக்கினை நிறைவேற்றும் வெற்றியும் சவால்களும் 70

**ஆறாவது அத்தியாயம் :**

**மனிதவள விபரங்கள்** **71**

6.1 ஊழியர் எண்ணிக்கை பிரமாணம் 72

6.2 நிறுவனத்தின் செயல்திறனை உன்னித்து மனித வள பற்றாக்குறை அல்லது மேலதிகமாகுவதற்கு அழுத்தம் கொடுக்கும் வழிகள் 72

6.3 மனித வள அபிவிருத்தி 73

**ஏழாவது அத்தியாயம் :**

**இணக்க அறிக்கை** **77**

**விளக்கப் படங்கள்**

வரைபடம் – 2.1 பருவகால பரிசோதனைகள் - 2019 ஆம் ஆண்டின் முன்னேற்றத்திற்கு ஒப்பீடாக 2020 இன் முன்னேற்றம் 19

வரைபடம் – 2.2 - 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் கைத்தொழில் பிணக்குகள் மற்றும் நியதிச்சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளமை மற்றும் தீர்க்கப்பட்டுள்ளமை 20

வரைபடம் – 2.3 – கூட்டு ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்படுதல் – 2020 21

வரைபடம் 2.4 - அனுகூலங்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறுதல் மற்றும் தீர்மானக் கடிதங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படுதல் – 2020 31

வரைபடம் 2.5 – அனைத்து மாவட்ட அலுவலகங்களினாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்றும் தீர்க்கப்பட்டுள்ள வழக்குகள் – 2020 33

வரைபடம் 2.6 - கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை (2020 ஆம் ஆண்டுக்காக தற்போது கிடைத்துள்ள முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் தகவல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன) 38

வரைபடம் 2.7 - தொழில் பரிசோதனைகளின் தரம் - 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகள் (2020 ஆம் ஆண்டுக்காக தற்போது கிடைத்துள்ள முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் தகவல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன) 38

வரைபடம் 2.8 - ஊழியர் சேமலாப நிதி அனுகூலங்களைச் செலுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள காலம் – 2017,2018,2019 மற்றும் 2020 ஆண்டுகள 39

**அட்டவணைகள்**

அட்டவணை 2.1 – மனித வள அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் - 2020

அட்டவணை் – 2.2 - 2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் 20

அட்டவணை 2.3 - வேலை பகிஷ்கரிப்புகள் தொடர்பாக பதிவாகிய தரவுகள் – 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டு 21

அட்டவணை 2.4 – தொழில் உரிமைகளை தரப்படுத்தும் செயற்பாடுகள் - 2020 23

அட்டவணை 2.5 - பணியிடங்களின் சுகாதாரப் பாதுகாப்பினை பரிசோதனைக்கு 23
உட்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் - 2020

அட்டவணை 2.6 - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பனவற்றை 25
மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட விழிப்பூட்டல் செயலமர்வுகள் - 2020

அட்டவணை 2.7 - தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்கள் 26
தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டங்களை செயற்படுத்துதல் - 2020

அட்டவணை 2.8 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிகளுக்கான மேற்பார்வையின் 32
முன்னேற்றம் - 2020

அட்டவணை 2.9 நீதிமன்றங்கள் வாரியாக வழக்குகளின் செயலாற்றுகை - 2020 33

அட்டவணை 2.10 – 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்
36

அட்டவணை 2.11 திணைக்களத்தினால் உத்தியோகத்தர்களுக்காக ஒழுங்கு 40
செய்யப்பட்டு நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2020

அட்டவணை 2.12 - வெளி பயிற்சி நிறுவனங்களில் பயிற்சிக்காக 40
உத்தியோகத்தர்களுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்படுதல் - 2020

அட்டவணை 2.13 - ஆற்றல் விருத்தி செயற்பாடுகளுக்காக 2020.12.31 ஆம் 41
திகதியில் மொத்த செலவினம் - 2020

அட்டவணை 2.14 கண்ணியமான/சீரிய பணி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் - 2020 42

அட்டவணை 2.16 – 2020 இல் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடந்த 74
நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியோர்

**புகைப்படங்கள்**

புகைப்படம் 2.1 – சமூக கலந்துரையாடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட தொழில்தருநர் 18
தொழிலாளர் தரப்பினர்களை விழிப்பூட்டுவதற்கான நிறுவனமட்ட நிகழ்ச்சி

புகைப்படம் 2.2 - சமூக கலந்துரையாடல் மற்றும் வேளைத்தள ஒத்துழைப்பு பற்றிய 18
போட்டித்தொடரின் விருது வழங்கும் விழா 2019

புகைப்படம் 2.3 –சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச தினக் கொண்டாட்டம் 2020 27

# முதலாம் அத்தியாயம்

## தொழில் திணைக்களத்தின் நிறுவன தோற்றப்பாடு/செயற்படுத்தல் சுருக்கம்

# தொழில் திணைக்களத்தின் நிறுவன தோற்றப்பாடு/செயற்படுத்தல் சுருக்கம்

## 1.1 அறிமுகம்

தனியார் துறையிலும் பகுதியளவு அரச துறையிலும் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் தொழில்சார் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் சமூகப் பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்குமாக இயங்கி வரும் அரச நிறுவனமே தொழில் திணைக்களமாகும். அதன் பிரகாரம் தொழில் என்னும் விடயம் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தேவையான மேம்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பவற்றுக்காக திணைக்களத்தினால் நாடு தழுவிய ரீதியில் தொழில் அலுவலகங்கள் பேணப்பட்டு அதற்கென ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு நிறைவேற்றப்படுகின்றது.

இலங்கையானது பிரித்தானியாவின் காலனித்துவ நாடாக அமைந்திருந்த காலப்பகுதியில் பிரித்தானிய ஆட்சியாளர்களினால் வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கையின் கீழ் கோப்பி மற்றும் தேயிலை பயிர்ச் செய்கைக்காக இந்நாட்டுக்கு தருவிக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர்களுக்கான நலன்புரி வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இந்திய குடிவரவு தொழிலாளர் கட்டளைச்சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. அக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இந்திய குடிவரவுத் தொழிலாளர்களுக்கான கட்டுப்பாட்டாளர் திணைக்களமானது தொழில் திணைக்களத்தின் ஆரம்பமாகும். தற்போது தொழில் திணைக்களம் தொழில்தருநர், தொழிலாளர் மற்றும் அரசாங்கம் ஆகிய முத்தரப்புகளின் தொடர்பினை வலுவாக பேணுவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தினை வலுப்படுத்தும் பணியை நிறைவேற்றி வருகின்றது.

## 1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

### 1.2.1 நோக்கு

“சர்வதேச ரீதியில் போட்டிமிகு பொருளாதாரத்தின் நிமித்தம் நீடித்த தொழிற்துறை அமைதிகொண்ட நாடு.”

### 1.2.2 செயற்பணி

“தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, உறுதிப்படுத்தப்பட்ட தொழிற்துறை அமைதியுடன்கூடிய கண்ணியமான பணிச் சூழலின் ஊடாக இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு நல்குதல்.”

### 1.2.3 நோக்கங்கள்


- தனியார் மற்றும் பகுதியளவு அரச துறையிலுள்ள சேவை நிறுவனங்களில் நிலையான தொழிற்துறை அமைதியை உறுதிப்படுத்துதல்.
- கண்ணியமான பணிச் சூழலை உருவாக்குதல் மற்றும் தொழில் நியமங்களை உருவாக்குவதன் மூலம் ஊழியர்களின் சேவை அந்தஸ்தினை மேம்படுத்துதல்.
- ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

- பெண்கள் மற்றும் இளம் ஆட்களின் தொழில்சார் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் சிறுவர் உழைப்பினை இல்லாதொழித்தல்.
- ஊழியர்களின் சுகாதார நிலைமைகளுக்கு சாதகமானதும் ஆபத்துக்கள் இல்லாததுமான பணிச் சூழலை உருவாக்குதல்.

## 1.3 பிரதான செயற்பாடுகள்

- நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் தொழில்தருநர்களுக்கும் இடையிலான உரையாடலை மேம்படுத்துதல்.
- தொழில் சட்டங்களை செயற்படுத்தல், சமூக உரையாடலை மேம்படுத்துவதன் மூலம் கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுவதனைத் தடுத்தல் மற்றும் ஏற்பட்டுள்ள பிணக்குகளைத் தீர்த்தல்.
- பயனுள்ள வகையில் சமகால விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதன் பொருட்டு திணைக்கள உத்தியோகத்தர்களுக்குத் தேவையான அறிவினை தொடர்ந்து இற்றைப்படுத்துவதன் மூலம் ஊழியர்களின் சட்ட முறையான உரிமைகளை உறுதிப்படுத்துதல்.
- தொழில் சட்டங்கள் தொடர்பாக தொழிலாளர் - தொழில்தருநர் ஆகிய இருதரப்பினர்கள் கொண்டுள்ள அறிவினையும் புரிதலையும் மேம்படுத்துவதன் மூலம் தொழில்துறை அமைதியை உறுதிப்படுத்துதல்.
- தேசிய பொருளாதாரக் கட்டமைப்பின் மாற்றங்களுக்கு ஏற்ப பொருத்தமாக அமைகின்ற தொழில் நியமங்களை சர்வதேச நியமங்களின் பிரகாரம் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- ஊழியர் சேமலாப நிதியத்தினை சிறந்த முறையில் நிர்வகிப்பதன் ஊடாக உரித்துடையோருக்கு அனுகூலங்கள் உரிய முறையில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல் மற்றும் அதே வகையில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு முறை தொடர்பான நிருவாகம்.
- பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான தொழில் சட்டங்கள் உட்பட சகல தொழில் சட்டங்களையும் சாதகமான முறையில் நடைமுறைப்படுத்துதல்.
- பணியிடத்தில் சுகாதார பாதுகாப்பு உள்ளமை மற்றும் ஆபத்தின்மை தொடர்பாக ஊழியர்களை அறிவூட்டுதல் மற்றும் சுகாதார பாதுகாப்பினையும் ஆபத்தின்மையையும் உறுதிப்படுத்துதல்.
- மேற்படி செயற்பாடுகளின் பொருட்டு தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான புள்ளிவிபரத் தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.
- இலங்கையினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமவாயங்களை சட்டத்தின் மூலமும் பயன்பாட்டின் மூலமும் வலுப்பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சிறுவர் உழைப்பு மற்றும் ஆபத்தான சிறுவர் உழைப்பு என்பவற்றை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 1.4 திணைக்களத்தின் கட்டமைப்பு



## 1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

சர்வதேச ரீதியில் போட்டித் தன்மைமிகு பொருளாதாரத்தின் பொருட்டு நீடித்து நிலைத்திருக்கக்கூடிய தொழில்துறை அமைதியுடன்கூடிய ஒரு நாட்டினை உருவாக்குவதற்காக பங்களிப்பு நல்குவது திணைக்களத்தின் நோக்கு என்பதால் தொழில்துறை அமைதியைப் பேணுவது திணைக்களத்தின் அடிப்படை மற்றும் அத்தியாவசிய செயற்பாடாகும். இதற்காக தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய தரப்புகளுக்கு மத்தியில் உரையாடலைப் பேணிச் செல்லல், வேலைத்தளங்களைப் பரிசோதித்தல், நியதிச்சட்ட உரிமைகள் இழக்கப்படுதல் தொடர்பான முறைப்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் தொழில் பிணக்குகளைத் தீர்த்தல், வேலைத்தளத்தில் ஆபத்தின்மையை உறுதிப்படுத்துதல், தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பிரதான செயற்பாடுகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்றன.

அதன் பிரகாரம் தொழில் திணைக்களத்தின் தலைமையகத்துடன் இணைந்ததாக பின்வரும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1.5.1. தொழில் உறவுகள் பிரிவு

1.5.2. மனிதவள அபிவிருத்திப் பிரிவு

1.5.3. விசேட புலனாய்வுப் பிரிவு

1.5.4. தொழில் தரப் பிரிவு

1.5.5. கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு

1.5.6. தொழில் சுகாதாரப் பிரிவு

1.5.7. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு

1.5.8. ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு

1.5.9. சட்ட அமுலாக்கப் பிரிவு

1.5.10. நிர்வாகப் பிரிவு

1.5.11. நிதிப் பிரிவு

1.5.12. திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

1.5.13 புள்ளிவிபரவியல் பிரிவு

1.5.14. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இவற்றுடன், நாடு தழுவியரீதியில் காணப்படுகின்ற தொழிலாளர் சமுதாயத்தினருக்கு எதிர்பார்க்கப்படும் சேவை வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 11 வலயத் தொழில் அலுவலகங்களும், 40 மாவட்டத் தொழில் அலுவலகங்களும், 17 உப தொழில் அலுவலகங்களும், 10 மாவட்ட தொழிற்சாலை ஆய்வுப் பொறியியலாளர் அலுவலகங்களும் தொழில் திணைக்களத்தின் செயற்பாடுகளை பன்முகப்படுத்துவதன் கீழ் நாடு தழுவியரீதியில் நிறுவப்பட்டு சேவைகள் வழங்கப்படுகின்றன.

மேற்படி ஒவ்வொரு பிரிவிற்குமான செயற்பாடுகள் பின்வருமாறு அமைகின்றன.

### 1.5.1. தொழில் உறவுகள் பிரிவு

ஊழியர்களின ் உரிமைகளைப் பாதுகாத்து நாட்டில் தொழில்துறை அமைதியை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புநல்கும் பொறுப்பினைதொழில் உறவுகள் பிரிவுஏற்றுள்ளது. இதற்காகதொழில் உறவுகள் பிரிவின் கீழ் தொழில் முடிவுறுத்தல் பிரிவுமற்றும் தொழிற்சங்கப் பிரிவு இயங்கிவருவதோடுகைத்தொழில் நீதிமன்றத்தின் இணைப்பாக்கநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதனபிரகாரம், பொருளாதார ஆக்கவிளைவினை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில்துறை அமைதியை ஏற்படுத்துதல், தொழில் சட்டதிட்டங்களின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவை நிபந்தனைகள் மற்றும் சேவை நிலைமைகளைப் பாதுகாத்தல், கூட்டு ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல் மற்றும் மேம்படுத்துதல், வேலை பகிஷ்கரிப்புகள் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைக் குறைத்தல் மற்றும் தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் என்பன இப்பிரிவின் பிரதான நோக்கங்களாகும்.

இப்பிரிவினால் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன.

- 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம்
- 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்துதல் சட்டம்
- 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தொழிற்சங்கங்கள் கட்டளைச் சட்டம்

### 1.5.2. மனிதவள அபிவிருத்திப் பிரிவு

நாடு தழுவிய ரீதியில் பரந்து காணப்படுகின்ற பகுதியளவு அரச நிறுவனங்களினதும் தனியார் துறை நிறுவனங்களினதும் உச்ச மட்ட ஆக்கவிளைவினையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்காக இரு தரப்புகளுக்கு மத்தியில் தொழில்துறை அமைதி உறுதிபடுத்தப்படுகின்ற பணிச் சூழலை உருவாக்குவதன் செயன்முறை நிறைவேற்றுவது மனித வள அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் இப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.5.2.1. சமூககலந்துரையாடலை மேம்படுத்துவதற்கான கொள்கைகளையும் உபாய மார்க்கங்களையும் அறிமுகம் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மூலம் நிறுவன மட்டத்தில் வேலைத்தள ஆதரவினைக் கட்டியெழுப்புதல்.

1.5.2.2.கூட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்காக வசதி வழங்குநராக செயற்பட்டு தொழிற்துறை அமைதியை உருவாக்குதல்.

1.5.2.3.ஆரோக்கியமான பணிச் சூழலை உருவாக்குவதற்காக பகுதியளவு அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரையும் தொழில் சட்டங்கள் தொடர்பாக அறிவூட்டுதல்

(இதற்காக நிறுவன மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முகாமையாளர்களுக்கும் முதலாளிமார்களுக்குமான நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும்.)

1.5.2.4. தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரினதும் பிரதி/உதவி தொழில் ஆணையாளர்களினதும் பங்கேற்பில் பிரதேச தொழில் அலுவலகங்கள் ஊடாக தொழில் திணைக்களத்தின் முத்தரப்பு தொடர்பினை உருவாக்குதல் மற்றும் கொள்கை வகுத்தலுக்குத் தேவையான தகவல்களை திரட்டுவதற்காக வலய ஆலோசனைச் சபைகளை நடாத்துதல்.

1.5.2.5. அறிவினை பரிமாறிக் கொள்வதற்கும் தொழில்தருநர் தொழிலாளர் தரப்புகளுக்கு மத்தியில் தொழில் சட்டங்கள் தொடர்பாக காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் வலய கலந்துரையாடலை நடாத்துதல்.

1.5.2.6. கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுவதைத் தடுப்பதன் பொருட்டு அறிவுவிருத்தியை ஏற்படுத்துவதற்கு கலந்துரையாடல் சஞ்சிகையை வெளியிடுதல்.

1.5.2.7. சமூக கலந்துரையாடல் எவ்வளவு தூரம் நிறுவனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பாக வருடாந்தம் உற்பத்தி, சேவைகள், ஆடை மற்றும் பெருந்தோட்ட துறையை பிரதிநித்துவம் செய்கின்ற வகையில் சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவில் நாடு தழுவிய ரீதியில் சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள ஆதரவு தொடர்பாக போட்டியொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதற்கு ஒருங்கமைவாக சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள ஆதரவு பற்றிய கட்டுரை மற்றும் கவிதை (சிங்களம்/ தமிழ்), சித்திரம், சுவரொட்டிகள் மற்றும் குறும் வீடியோ ஆக்கங்களின் போட்டியை நடத்துதல்.

### 1.5.3. விசேட புலனாய்வுப் பிரிவு

வழக்கமாக மேற்கொள்ளப்படுகின்ற தொழில்சார் பரிசோதனைகள் மற்றும் முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகளுக்கு மேலதிகமாக ஏதேனும் முறைப்பாட்டு விசாரணை அல்லது ஏதேனுமொரு நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு விசாரணை இடம்பெற்ற விதம் தொடர்பில் திருப்தியடையாத ஒருவரால் சுயாதீன விசாரணை ஒன்றை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்திடம் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தேவையின் பிரகாரம் விசேட புலனாய்வுப் பிரிவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன. தொழில் ஆணையாளர் நாயகத்தின் கட்டளையின் பேரில் இலங்கையின் எந்தவொரு இடத்திலும் விசாரணைகளை மேற்கொள்வதற்கான தத்துவத்தினை இப்பிரிவு கொண்டுள்ளது. அதேவேளை அவசர மற்றும் துரித விசாரணைகள் மற்றும் விசேட விசாரணை கடமைகளில் ஈடுபடுவதனால் இப்பிரிவு திணைக்களத்தில் உள்ள ஒரு விசேட பிரிவாகவும் காணப்படுகின்றது.

### 1.5.4. தொழில் தரப் பிரிவு

தனியார் துறை ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் மீது தாக்கம் ஏற்படுத்துகின்ற சம்பளம், சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான தரநியமங்களைத் தயாரித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் அவற்றுக்கு சட்ட அந்தஸ்தினை வழங்குதல் திணைக்களத்தின் இடையறாத ஒரு செயற்பாடாகும். சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகளுக்குரியதாக எழுகின்ற சிக்கல்

நிலைமைகளைத் தீர்ப்பதன் பொருட்டு அது சம்பந்தமான தெளிவுபடுத்தல்களை வழங்குவதும் தர நியமங்களை நடைமுறைப்படுத்துவதிலான முன்னேற்றம் மற்றும் மேற்பார்வைப் பணியினையும் நிறைவேற்றுவதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது இச்செயன்முறையின் இன்றியமையாத ஒரு பகுதி என்பதோடு ஒட்டுமொத்த பொறுப்பினை நிறைவேற்றுவது திணைக்களத்தின் தொழில் தரப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இப்பிரிவின் மூலம் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன.

- 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
- 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் (சேவை மற்றும் சம்பளம் முறைசார்படுத்தல்) சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஊழியர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம்
- 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேசிய குறைந்த சம்பளச் சட்டம்
- 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஊழியர்களின் வரவு செலவுத் திட்ட நிவாரணப் படிச் சட்டம்.

### 1.5.5. கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு

தொழிற்சாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு பௌதீக ரீதியில் உடல்ரீதியான சேதங்கள், மின்சாரம், வெப்பம், காற்றழுத்தம், அதிக ஒளி மற்றும் இரைச்சல் என்பன மூலம் உடல்ரீதியான சேதங்கள் ஏற்படுவதற்கான அல்லது மரணங்கள்கூட சம்பவிப்பதற்கான அச்சுறுத்தல் உள்ளது. எனவே விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைப்பது தொழில் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாகும். இலங்கையில் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பல் தொடர்பான பிரதான சட்டரீதியான சாதனம் 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலை கட்டளைச்சட்டம் மற்றும் அதற்கு அமைவாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் என்பனவாகும். ஆபத்துக்களற்ற பணிச் சூழலை உருவாக்குவதன் மூலம் ஆபத்துத் தொடர்பான அச்சமின்றி பணியாற்றக்கூடிய பாதுகாப்பான ஊழியர் படையணியை உருவாக்குவதன் ஊடாக பணியிடங்களில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் அதன்மூலம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கப்படுகின்ற பங்களிப்பினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒட்டுமொத்த இலங்கையும் உள்வாங்கப்படுகின்ற வகையில் மாவட்ட கைத்தொழிற்சாலை ஆய்வுப் பொறியியலாளர் அலுவலகங்கள் 10 இல் சேவையில் ஈடுபட்டுள்ள 31 பொறியியலாளர்களினால் தொழிற்சாலைகள் பரிசோதிக்கப்பட்டு இப்பணி நிறைவேற்றப்படுவதோடு தொழில் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் பரிசோதனைகளின் போது இனங்காணப்படுகின்ற ஆபத்து நிலைமைகள் மாவட்ட தொழிற்சாலை ஆய்வுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படுவதனால் அத்தகவல்களும் பயன்படுத்தப்பட்டு ஊழியர்களிற்கு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

தொழில்சார் பாதுகாப்பினை வழங்குவதற்காக பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

1.5.5.1 புதிய தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல்

1.5.5.2 கட்டிட வரைபடங்களைப் பரிசோதித்தல் மற்றும் அங்கீகரித்தல்

1.5.5.3 தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல்

1.5.5.4 ஆபத்துக்களை புலனாய்வு செய்தல் மற்றும் அபாயகரமான சம்பவங்களை புலனாய்வு செய்தல்

1.5.5.5 சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

1.5.5.6 அதிக ஆபத்துடன்கூடிய இயந்திர சாதனங்களுக்கான பரிசோதனையை ஒழுங்குபடுத்துதல்

1.5.5.7 முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

1.5.5.8 விழிப்பூட்டல் செயலமர்வுகளை நடாத்துதல்

1.5.5.9 தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களுக்கு இலக்காவோரை தொழில் நட்டுஈட்டு ஆணையாளர் மற்றும் சிரம வாசனா நிதியத்திற்கு ஆற்றுப்படுத்துதல்

1.5.5.10 ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

1.5.5.11 தொழில் திணைக்களத்தினதும் அமைச்சினதும் பொறியியல் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

### 1.5.6. தொழில் சுகாதாரப் பிரிவு

நடைமுறையிலுள்ள தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களின் சுகாதார நிலைமை பாதுகாக்கப்படுகின்ற வகையில் பணியிடச் சூழலை உருவாக்குவது தொழில் தருநரின் கட்டாயமான பொறுப்பாக அமைவதோடு பாதுகாப்பான பணிச்சூழலில் சேவையாற்றுவதற்கான உரிமை ஊழியர்களின் அடிப்படை உரிமையாகும்.

தொழிலில் ஈடுபடும்போது பணியிடச் சூழலில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக ஊழியர்கள் நோய் நிலைமைகளுக்கு உள்ளாவதற்கான அச்சுறுத்தல் மற்றும் திடீர் விபத்துகளுக்கு உள்ளாகுதல் என்பவற்றைத் தடுப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய உயர்மட்ட உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக நலனோம்பலுடன்கூடிய சூழலொன்றை பணியிடத்தில் ஏற்படுத்த வேண்டும். அதற்குத் தேவையான கல்வியறிவை வழங்குவதும் சேவை நிலையத்தில் உள்ள நிலைமைகளை பரிசோதனைக்கு உட்படுத்துவதும் தொழில் சுகாதாரப் பிரிவின் தொழிற்பாட்டுச் செயன்முறையாகும்.

அடிப்படையில் பணிச்சூழலின் சில பலவீனங்களின் காரணமாக உடனடியாக அல்லது நீண்டகால ரீதியில் ஊழியர்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பாக விஞ்ஞானரீதியான முறையியல்களின் கீழ் கண்டறிதல், அதன்மூலம் ஏற்படக்கூடிய சுகாதார சிக்கல்களை அளவுசார் மற்றும் தரம்சார்ரீதியில் அளவிடுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞானரீதியான முறையியல்களின் கீழ் மேற்கொள்ளல், மேற்படி விபத்துக்களைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் தடுப்பதன் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்பூட்டுதல் நடைமுறை ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

அடிப்படையில் தொழில் சுகாதாரப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.5.6.1 பணியிடங்களில் காணப்படுகின்ற சுகாதாரப் பாதுகாப்பினை பரிசோதித்தல்

1.5.6.2 பணியிடங்களில் காணப்படுகின்ற சுகாதாரப் பாதுகாப்பினை பாதுகாப்பதற்குத் தேவையான கல்வியை வழங்குதல்

1.5.6.3 மருத்துவச் சபை தீர்மானங்களை வழங்குதல்

1.5.6.4 தொழிற்சுகாதார விடயங்களின் அடிப்படையில் நட்டஈடு கோருகின்ற நபர்கள் தொடர்பாகவும் நோய்நிலைமை ஏற்படுதல் மற்றும் பணியிடத்தின் நிலைமைகள் தொடர்பாகவும் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தல்.

1.5.6.5 ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து நிதி கோருகின்ற, சேவையாற்றுவதற்கு முடியாத வகையில் நோய் வாய்ப்பட்டுள்ள தொழிலாளர்களின் நோய் நிலைமைகளை மதிப்பிடுதல்.

**1.5.7. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு**

இலங்கையின் உழைப்பாளர் படையில் பெண்களின் பங்களிப்பினை மேம்படுத்துதல் மற்றும் சிறுவர் உழைப்பினை முழுமையாக இல்லாதொழித்தல் இலங்கை அரசாங்கத்தின் இன்றியமையாத ஒரு பொறுப்பாக காணப்படுவதுடன் இந்தப் பொறுப்பானது மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய பிரிவின் பணிகளில் அடிப்படையான இருவகைப் பொறுப்புக்களாக அமைந்துள்ளன.

அதன் பிரகாரம், வேலைத்தளத்தில் பெண்கள் உள்வாங்கப்படுகின்ற போது அவர்களிற்கான தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், குறித்த சட்டங்களை காலத்திற்கேற்ப மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை விதப்புரை செய்வதன்மூலம் ஆக்கவிளைவுடன் கூடிய பெண்களின் உழைப்புப் பங்களிப்பினை நாட்டுக்கு பெற்றுக்கொடுப்பது இப்பிரிவின் முதன்மையான ஒரு பொறுப்பாகும்.

அதேவேளை, அனைத்துத் தரப்பினர்களினதும் பங்களிப்புடன் சிறுவர் உழைப்பினை இல்லாதொழித்தல், 18 வயதுக்குக் குறைந்த நபர்களுக்கான தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நடைமுறையிலுள்ள சட்டத்தினைத் திருத்தி இன்றைய சமூகப் பிரச்சினைகளுக்கு ஏற்ற வகையில் நடைமுறையில் உள்ள சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை விதப்புரை செய்தல் இப்பிரிவின் முதன்மையான பொறுப்பாகும்.

அதன் பிரகாரம் இப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

1.5.7.1 தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் மற்றும் இளம் ஆட்கள் தொடர்பில் ஏற்புடையதாக அமைகின்ற சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்காக வலய மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களை நெறிப்படுத்துதல்.

1.5.7.2 பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நாடு தழுவிய ரீதியில் நடாத்துதல்.

1.5.7.3 தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்புடையதாக அமைகின்ற சட்டங்களைப் பயின்று பலவீனங்களையும் குறைபாடுகளையும் இனங்கண்டு சட்டத்தினை வலுப்படுத்துவதற்காக விதப்புரைகளை முன்வைத்தல்.

1.5.7.4 தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் நடத்தப்படுகின்ற சிறுவர் அபிவிருத்திக் குழுக்களின்போது பயனுள்ள பங்களிப்பினை வழங்குதல்.

1.5.7.5 தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களுக்காக சுதந்திர வர்த்தக வலயங்களில் நிறுவப்பட்டுள்ள தொழில் திணைக்களத்திற்குரிய மகளிர் விடுதிகளை பராமரித்தல்.

அதேவேளை, இப் இப்பிரிவினால் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றன.

- 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுதல் பற்றிய சட்டம்
- 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மகப்பேற்று கட்டளைச்சட்டம்

**1.5.8. ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு**

இலங்கையின் தனியார் துறை மற்றும் பகுதியளவு அரச துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஆரோக்கியமான பொருளாதார நிலைமையுடன் கூடிய இளைப்பாறல் வாழ்க்கைக் காலத்தை பெற்றுக்கொடுக்கும் அடிப்படை நோக்கத்தை முதலாகக் கொண்டு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்திற்கான நிர்வாகம் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு அதன் நிதி முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. காலத்திற்குகாலம் திருத்தப்பட்ட இச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் பின்வருமாறு அமைகின்றன.

1.5.8.1 ஊழியர் சேமலாப நிதியத்திற்காக தொழில்தருநர்களைப் பதிவு செய்தல்

1.5.8.2 ஊழியர் சேமலாப நிதியத்திற்காக அங்கத்தவர்களை பதிவுசெய்தல்

1.5.8.3 பங்களிப்புத் தொகை செலுத்தாத தொழில்தருநர்களிடமிருந்து பங்களிப்புத் தொகைகளை அறவிடுதல்.

1.5.8.4 அங்கத்தவர்களுக்கு மீளளிப்பு தொகைகளை செலுத்துவதற்கு செலுத்தல் கட்டளைகளை வழங்குதல்.

1.5.8.5 ஊழியர் சேமலாப நிதியஅங்கத்தவரின் கணக்கு நிலுவையின் அடிப்படையில் வீடமைப்புக் கடன் வழங்குதல்

1.5.8.6 அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதிக்கான மேற்பார்வை.

**1.5.9. சட்ட அமுலாக்கப் பிரிவு**

தொழில் சட்டங்களை நாடு தழுவிய ரீதியில் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் தொழில்துறை அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தொழில் திணைக்களத்தின் சட்ட அமுலாக்கப் பிரிவு இயங்கி வருகின்றது. அதன் பிரகாரம் தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்ட ஏற்பாடுகள் நாடு தழுவிய ரீதியில் ஒரே வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அச் சட்டங்களை மீறுகின்றவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படுவதும் அதன்மூலம் தொழில்தருநர் தொழிலாளர் உரிமைகளை பாதுகாத்து தொழில்தருநர் தொழிலாளர் ஒத்துழைப்பினை மேம்படுத்துவதும் திணைக்களத்தின் சட்ட அமுலாக்கப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் பிரகாரம் சட்ட அமுலாக்கப் பிரிவின் பிரதான செயற்பாடுகளை பின்வரும் வகையில் எடுத்துக் காட்ட முடியும்.

1.5.9.1 நியதிச்சட்ட தொழில் சட்டங்கள் மீறப்படும்போது அதற்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் குறிப்பிட்ட வழக்குகளை நெறிப்படுத்துதல்.

1.5.9.2 வணிக மேல் நீதிமன்றத்தில், மாகாண மேல் நீதிமன்றத்தில், மேல் நீதிமன்றத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்லது உயர் நீதிமன்றத்தில் தொழில் திணைக்களத்திற்கு எதிராக அல்லது தொழில் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் போது அவ்வழக்கு நடவடிக்கைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவசியமான இணைப்பாக்கத்தினை பேணுதல்.

1.5.9.3 வலய அலுவலகங்களின் கண்காணிப்பின் கீழ் மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நீதித்துறைசார் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் நீதித்துறைசார் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைப் பரிசோதித்தல்.

1.5.9.4 வலயத்திலுள்ள மாவட்ட/உபதொழில் அலுவலகங்களில் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டிய சந்தர்ப்பங்களில் மற்றும் செயலிழந்துள்ள வழக்குகளை செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவரும் செயல்முறையின் போது தேவையான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் திணைக்களம் சார்பாக வழக்குகளை நெறிப்படுத்துதல் வலய அலுவலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள சட்ட அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**1.5.10. நிர்வாகப் பிரிவு**

நிர்வாக பிரிவு 04 கிளைகளைக் கொண்டுள்ளது. அவையாவன நிர்வாகக் கிளை, தாபனக்கிளை கட்டிடப்பராமரிப்பு அலகு மற்றும் நூலகம் என்பனவாகும்.

இவற்றில் திணைக்களத்தின் அனைத்து சேவைகள் மற்றும் வழங்கல்களை நிர்வாகக்கிளை கையாள்கின்றது. இதன்கீழ், திணைக்களத்தின் கட்டீங்கள் அமைப்பதுடன் தொடர்புடைய தேவைகளுக்கு நிலத்தினை அடையாளங்காணல் மற்றும் கட்டிடம் அமைப்பதுடன் தொடர்பான நடவபிக்கைகளுக்கு வழிகாட்டுதல், கட்டிடங்களைப் புணர்நிர்மாணித்தல் மற்றும் கட்டிடங்களை மேம்படுத்துதல், தேவைக்கேற்ப கட்டிடங்களை வாடகைக்கு விடல், திணைக்களத்தின் வாகனங்களை நிர்வகித்தல், திணைக்களத்தின் வலய மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்குத் தேவையான உள்ளகக் கட்டமைப்புக்களை வழங்குதல்,மூலதனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கையாள்தல்,மேலதிக நேர வேலை கொடுப்பனவு, விடுமுறைநாள் வேலைக்கான கொடுப்பனவு, அக்ரகாரா காப்புறுதி,இடர்கடன் போன்றவற்றிற்கு அனுமதியளித்தல் போன்றன செய்யப்படுகின்றன.

துாபனக்கிளையானது திணைக்களத்தின் மனிதவளத் தேவையை அடையாளங்கண்டு, தேவைக்கு ஏற்ப ஆட்களை ஆட்சேர்ப்புச் செய்வதுடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள். அலுவலர்களின்பதவி உயர்வு,வினைத்திறன் காண்தடைப் பரீட்சை. செயற்றிறனை மதிப்பீடு செய்தல்,சம்பள உயர்வுகளை வழங்குதல்,இடமாற்ற நடைமுறைகளை செயல்படுத்துதல்,ஓய்'தியம் தாமதமின்றி தயாரித்து அளித்தல்,ஊழியர்களின்விடுமுறைகளை அனுமதித்தல்,அலுவலர்களின் ஒழுக்கம் என்பவற்றை கையாளுதல்போன்ற பணிகளைச் செய்கின்றது.

கட்டிடப்பராமரிப்பு அலகானது,வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் திணைக்களத்தின் கட்டுமானப்பணி மற்றும் 'கட்டிடங்களைப் புணர்நிர்மாணம் செய்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான கொள்வனவத் திட்டம் என்பவற்றைத் தயாரிப்பதற்கு உதவுதல், கட்டிடங்கள் திணைக்களம் மற்றும் கட்டிடங்கள் அமைத்தலுடன் தொடர்புடைய பிற நிறுவனங்கள்என்பவற்றை ஒருங்கிணைத்தல், கட்டிடப்புணர் 'நிர்மாணம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள், திணைக்கள தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் என்பவற்றையும். மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளைச் செய்கின்றது.

தொழில் துறை தொடரடபான சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள், பத்தகங்கள் மற்றும் பிரசுரிப்புகள் என்பவற்றிற்கான இலங்கையின் பிரதான நூலகமாக இது உள்ளது.தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் அமைச்சின் உத்தியோகத்தர்கள், தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கும் அதே போல் தொழில்சட்டம் தொடர்பான நூல்களை வாசிக்கும் பொது மக்களுக்கும் இநநூலகம் உதவுகின்றது.

இந்நூலகமானது 180,000 புத்தகங்கள், பிரசுரிப்புகள் மற்றும் சஞ்சிகைகள் என்பவற்றை கொண்டுள்ளது. இங்குள்ள இந்த தொகுப்புக்களை சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், தொழில்சட்டங்களுடன் தொடர்புடைய பிரசுரிப்புகள், சர்வதேச அமைப்பின் பிரசுரிப்புகள், ஐக்கியநாடுகளின் பிரசுரிப்புகள். சிறுவர் தொழில் தொடர்பான பிரசுரிப்புகள் போன்றன என வகைப்படுத்த முடியும்.

### 1.5.11 நிதிப் பிரிவு

தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காகவும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்காகவும் பௌதீக வளங்கள் மற்றும் நிதி வளங்கள் என்பன இன்றியமையாத காரணிகளாகும். அதன்படி வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி வளத்தினை அரச கொள்கைகளுக்கு அமைவாக வினைத்திறனாகவும் பயன்மிக்கதாகவும் சிக்கனமாகவும் நிர்வகித்தல் நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

திணைக்களத்தின் நிதி நிர்வாகத்தினை வினைத்திறன் மிக்க வகையிலும் வெளிப்படையாகவும் மேற்கொள்வதற்காக நிதிப்பிரிவு பின்வரும் வகையில் செயற்படுகின்றது.

1.5.11.1 திணைக்களத்தின் பெறுகை திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துதல்

1.5.11.2 பெறுகை செயன்முறையின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்களையும் சேவைகளையும் உரிய முறையில் பகிர்ந்தளித்தல்

1.5.11.3. பிராந்திய அலுவலகங்களுக்கான சில்லறைத் தொகைகளை வழங்குதல் மற்றும் அந்த அலுவலகங்களின் நிதிசெயற்பாடுகளின் மேற்பார்வை

1.5.11.4 மாதாந்த, அரை வருட மற்றும் வருடாந்த கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் உரிய தரப்புகளுக்கு குறித்த தினத்தில் சமர்ப்பித்தல்

1.5.11.5 வெளித்தரப்பினரிடமிருந்து கிடைக்கின்ற அனைத்து வரவுகள் மற்றும் செலவுகள் பற்றிய நடவடிக்கைகளை சட்ட விதிகளின் பிரகாரம் நெறிப்படுத்துதல்

1.5.11.6 திணைக்களம் கொண்டுள்ள மூலதன சொத்துக்களை மீளாய்வு செய்தல் மற்றும் அகற்றல் நடவடிக்கைகள்

1.5.11.7 திணைக்கள அலுவலர்களுக்கான சம்பளம், கடன் முற்பணம் மற்றும் செலுத்தல்களை மேற்கொள்ளுதல்

**1.5.12. திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு**

திணைக்களத்தின் வருடாந்த செயல் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம் தயாரித்தல் மற்றும்திணைக்களத்தின் சாதனைக் குறிக்கோள்களை அடைவதற்கு திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் பிராந்திந்திய அலுவலகங்களின் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல், திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் பற்றிதொழில் ஆணையாளர்கள விவாதிப்பதற்கானமாதாந்த கூட்ட செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், அதே போல தொழில் மற்றும் பிற அமைச்சுக்களால் மாதாந்தம் நடாத்தப்படும் முகாமைத்துவ குழுக்கூட்டத்தை ஒருங்கிணைத்தல் என்பன திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்ச்சி மற்றும் வெளியீட்டு பிரிவின் திட்டமிடல் மற்றும் முன்னேற்ற மீள்ளாய்வு விடயங்களின் பொறுப்பாகும்.

திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் முன்னேற்ற மதிப்பாய்வு செய்தல் இப்பிரிவின் பொறப்பாகும். இதன்கீழ், பிராந்திய அலுவலகங்களின் வருடாந்த முன்னேற்ற மதிப்பாய்வு திட்டங்களை தயாரித்தல் மற்றும் கண்காணிப்பும் இப்பிரிவினால் செய்யப்படுகின்றன.அங்கு, வலயங்களுக்குப் பொறுப்பாக உள்ள பிரதித் தொழில் ஆணையாளர்கள் ஒவ்வொரு வலயத்திற்குமான முன்னேற்ற மதிப்பாய்வை செய்கிறார்கள். ஓவ்வொரு அலுவலகத்தினதும் முன்னேற்றத்தினை சரிபார்த்துக் கண்காணிக்கும் குழுவிற்கும் இப்பிரிவு வழிகாட்டுகின்றது

இதன் பிரகாரம், இந்த பிரிவானது அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்கள் அதே போல்திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளையும்அவற்றின் முன்னேற்றத்தின் நியதிகளின்படி மேற்பார்வை செய்கின்றது என்பதுடன் திணைக்களத்தின் தொலை நோக்கு மற்றும் இலக்குகளை அடையும் நோக்குடன் உரிய வருடாந்த குறிக்கோள்களை நோக்கி கவனம் செலுத்துகின்றது.இங்கு, திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் மாவட்ட உப அலுவலகங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதும், அதிலிருந்து பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதும்,வலயமட்டத்திலான முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களை நடாத்துவது மற்றும் மேலும் முன்னேற்றத்தை மேம்படுத்தத் தேவையான பரிந்துரைகளைஉரிய அலுவலகங்களுக்கு வழங்குவதும் ஆகும்.

திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் தேவையான பயிற்சியளித்தல், வெளி நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளுக்கு உத்தியோகத்தர்களை வழிநடத்துதல், பல்கலைக்கழக பட்டங்கள்

மற்றும் முதுகலை பட்டதாரிகளுக்கு நிதி ஏற்பாடுகளை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சிக்கு தேவையான பயிற்சியை ஒருங்கிணைத்தல். இந்த பிரிவால் மேற்கொள்ளப்படும் மனித வள மேம்பாட்டு பஙகளிப்பாகும்.

மேலும், தொழில் சட்டங்கள், கட்டளைச்சட்டங்கள் மற்றும் சம்பளச் சபையின் முடிபுகள் என்பவற்றை திணைக்கள அலுவலர்களின் தேவைக்கேற்ப அச்சிடுதல் மற்றும் வழங்குதல், தொழில் அலுவலர்களின் களவேலைப் பாவனைக்குத் தேவையான பொது படிவங்களையும் அதே போல தொழில் அலவலர்களின் தொழில் பரிசோதனை அறிக்கைகள் மற்றும் மாதாந்தக் குறிப்பேடுகளை அச்சிடுதல் போன்ற பணிகள் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.5.13. புள்ளிவிபரவியல் பிரிவு

இலங்கையில் தொழில் துறையினை சரியாகப் புரிந்துகொள்வதற்கும், கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும், தற்போதுள்ள தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை திருத்துவதன் அவசியத்தை அடையாளம் காணவும், அந்தத் துறையின் எதிர்காலத்தை கணிக்கவும் தொழில் துறை தொடர்பான தரவுகளை சேகரித்து பகுப்பாய்வு செய்வது புள்ளிவிவர பிரிவின் பிரதான பணிகளாகும். இப்பிரிவு திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டு பிரிவின் தொழில் ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது.

### 1.5.14. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

ஏனைய அனைத்து அரச நிறுவனங்கள் போலவே தொழில் திணைக்களமும் அதன் அனைத்து செயற்பாடுகளையும் நிதிப் பிரமாணங்கள், அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளின் பிரகாரம் முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும். அதன் பிரகாரம் மேற்படி நடவடிக்கைகள் வளங்களின் உச்சப் பயன்பாட்டுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் உயர் மட்டத்திலும் இடம்பெறுவதை மேற்பார்வை செய்வதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்தின் நேரடியான கண்காணிப்பின் கீழ் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

## 1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிதியங்கள்

இலங்கையின் தனியார் துறையில் மற்றும் பகுதியளவு அரச துறையிலுள்ள ஊழியர்களுக்கு சாதகமான பொருளாதார நிலைமையுடன்கூடிய இளைப்பாறும் காலத்தினை பெற்றுக்கொடுக்கும் அடிப்படை குறிக்கோளை முதலாகக் கொண்டு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்திற்கான நிர்வாகம் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு அதன் நிதி முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.மேற்படி நிதியம் பற்றிய மேலதிக விபரங்கள் இதன் மேல் 01 ஆம் அத்தியாயத்தின் 1.5.8 இன் கீழும் 02 அத்தியாயத்திலும் தரப்பட்டுள்ளன.

# இரண்டாம் அத்தியாயம்

## முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

# முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## 2.1 பொருளாதார அபிவிருத்தியின் மேம்பாட்டுக்காக தொழில்துறை அமைதியைப் பேணிப் பாதுகாத்தல்

சர்வதேசரீதியில் போட்டித் தன்மையுடன்கூடிய பொருளாதாரத்திற்காக நீடித்து நிலைத்திருக்கும் தொழில்துறை அமைதியுடன்கூடிய ஒரு நாட்டினை உருவாக்குவதன் பொருட்டு பங்களிப்பு வழங்குவது திணைக்களத்தின் நோக்காக அமைந்துள்ளதால் தொழில்துறை அமைதியைப் பேணுவது திணைக்களத்தின் அடிப்படை மற்றும் இன்றியமையாத பணியாகும்.

இதற்காக தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய இருதரப்பினர்களுக்கு மத்தியில் கலந்துரையாடலைப் பேணிவருதல், ஒருங்கிணைந்த தொழில் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல், நியதிச்சட்ட உரிமைகள் மற்றும் இழப்புகள் பற்றிய முறைப்பாடுகளை தீர்த்தல் மற்றும் தொழில் பிணக்குகளைத் தீர்த்தல், ஊழியர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய 04 பிரதான பணிகளின் கீழ் திணைக்களம் செயற்படுகின்றது.

### 2.1.1 தொழில்தருநர் தொழிலாளர் தரப்பினர்களிற்கிடையில்கலந்துரையாடலை பேணிவருதல்

நாடு தழுவிய ரீதியில் பரந்துள்ள தனியார் மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களின் உச்சமட்ட ஆக்கவிளைவினையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்காக தொழில்தருநர் தொழிலாளர்களுக்கு மத்தியில் தொழில்துறை அமைதியை உறுதிப்படுத்தப்படுகின்ற பணிச்சூழலை உருவாக்கும் செயன்முறையினை நிறைவேற்றுவதற்காக 2020 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2.1.1.1. ஆரோக்கியமான பணிச்சூழலை உருவாக்குவதற்காக தனியார் மற்றும் பகுதியளவு அரச துறையைச் சேர்ந்த நிறுவனங்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய இருதரப்பினருக்கும் தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பின்வரும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படுதல்.

| தொ இ. | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் |
|---|---|---|
| 01 | மனிதவளங்கள் அபிவிருத்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தொழில்தருநர் தொழிலாளர் தரப்புகளை விழிப்பூட்டுவதற்கான நிறுவன மட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 37 |
| 02 | மனிதவளங்கள் அபிவிருத்தப் பிரிவின மேற்கொள்ளப்பட்ட பகுதியளவு அரச நிறுவனங்களில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 06 |
| 03 | நிறுவனங்களைப் பரிசோதித்தல் | 424 |
| 04 | நிறுவனங்களின் கோரிக்கைகளின் பேரில் வளவாளர்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் | 21 |

அட்டவணை 2.1 – மனித வள அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் - 2020

2.1.1.2. சமூக கலந்துரையாடல் எவ்வளவு தூரம் நிறுவனத்தில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பாக வருடாந்தம் உற்பத்தி, சேவைகள், ஆடை மற்றும் தோட்டப் பிரிவு என்பன பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற வகையில் சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவில் நாடு தழுவிய ரீதியில் சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள ஒத்துழைப்புப் பற்றிய ஒரு போட்டித்தொடர் வருடாந்தம் நடத்தப்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டுக்காக இப்போட்டியின் பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு விருது வழங்கும் விழா 2020.01.16 ஆம் திகதி கௌரவ அமைச்சரின் தலைமையில் நடத்தப்பட்டது.



புகைப்படம் 2.1 – சமூக கலந்துரையாடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட தொழில்தருநர் தொழிலாளர் தரப்பினர்களை விழிப்பூட்டுவதற்கான நிறுவனமட்ட நிகழ்ச்சி




புகைப்படம் 2.2 –சமூக கலந்துரையாடல் மற்றும் வேளைத்தள ஒத்துழைப்பு பற்றிய போட்டித்தொடரின் விருது வழங்கும் விழா 2019

கோவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக நாட்டில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சிகளை வரையறுக்க வேண்டி ஏற்பட்டது.

**2.1.2 பருவகால பரிசோதனைகளை நடாத்துதல்**

பருவகால பரிசோதனைகளை நடத்துவதன் முக்கியமான நோக்கம் வேலைத்தளத்தில் ஊழியர்களின் நியதிச் சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் உரிய முறையில் நடைமுறைபடுத்தப்படுகின்றனவா என்பதனை பரிசோதித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் தொழில்தருநர் தொழிலாளர் தரப்பினர்களுக்கு இடையில் பிணக்குகள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தி நட்புறவான தொடர்பினை ஏற்படுத்துவதாகும். இப்பணியை நிறைவேற்றுவதற்காக 11 வலய தொழில் அலுவலகங்களும் அதன்கீழ் 40 மாவட்ட தொழில் அலுவலகங்களும் 17 உப தொழில் அலுவலகங்களும் 10 மாவட்டதொழிற்சாலை ஆய்வுப் பொறியியலாளர் அலுவலகங்களும் ஒட்டுமொத்த இலங்கையையும் உள்வாங்கப்படும் வகையில் தாபிக்கப்பட்டுள்ளதோடு தலைமையகத்தில் உள்ள பிரிவுகளும் உட்பட 2020.12.31 ஆம் திகதியில் திணைக்களத்தில் பணியாற்றும் மொத்த தொழில் அலுவலர்களின் எண்ணிக்கை 488 ஆகும். 2020 ஆம் ஆண்டில் தொழில் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த பருவகால விசாரணைகளின் எண்ணிக்கை 64 இ 708 ஆகும்.





வரைபடம் – 2.1 பருவகால பரிசோதனைகள் - 2019 ஆம் ஆண்டின் முன்னேற்றத்திற்கு ஒப்பீடாக 2020 இன் முன்னேற்றம்

2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. அதற்கான காரணம் யாதெனில் 2020 ஆம் ஆண்டில் நிலவிய கோவிட்-19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக தொழில்சார் பரிசோதனைகளை மேற்கொள்வது வருடத்தின் சில மாதங்களில் முழுமையாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது வரையறுக்கப்பட்டிருந்தமை ஆகும்.

### 2.1.3. நியதிச்சட்ட உரிமைகள் மீறப்படுதல் பற்றிய முறைப்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்

நியதிச் சட்டங்கள் மீறப்படுதல், கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் வேலை பகிஷ்கரிப்புகள் என்பன பற்றிய முறைப்பாடுகளை தலைமையகத்திற்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் உப அலுவலகங்களுக்கும் ஆற்றுப்படுத்துவது ஊழியர்களினால் அல்லது தொழிற்சங்கங்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. மாவட்ட அலுவலகங்கள், வலய அலுவலகங்கள் மற்றும் தலைமையகத்தின் தொடர்புடைய பிரிவுகள் மூலமும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அம்முயற்சிகள் தோல்வியடையும் பட்சத்தில் குறிப்பிட்ட கைத்தொழில் பிணக்குகள் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நடுத்தீர்ப்பாளருக்கு அல்லது கைத்தொழில் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு தீர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் கைத்தொழில் பிணக்குகள் மற்றும் நியதிச்சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளமை மற்றும் தீர்க்கப்பட்டுள்ளமை பின்வருமாறு அமைகின்றன.




வரைபடம் – 2.2 - 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் கைத்தொழில் பிணக்குகள் மற்றும் நியதிச்சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளமை மற்றும் தீர்க்கப்பட்டுள்ளமை

கோவிட் 19 நோய் நிலைமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மற்றும் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஒப்பீட்டு ரீதியில் குறைந்த எண்ணிக்கையைக் கொண்டிருப்பதனை அவதானிக்க முடியும்.

அதேவேளை, 2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாககிடைக்கப்பெற்றமுறைப்பாடுகளின் எண்ணிக்கை | | வருடத்தில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | அந்த முறைப்பாடுகளுடன் தொடர்புடைய ஊழியர்களின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | அந்த முறைப்பாடுகளுடன் தொடர்புடைய ஊழியர்களின் எண்ணிக்கை |
| 2262 | 8913 | 1044 | 4850 |


வரைபடம் – 2.3 - 2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்

ஓர் கைத்தொழில் பிணக்கு வேலை பகிஷ்கரிப்பு வரை வளர்ச்சியடையக்கூடிய நிலைமைகள் அவதானிக்கப்படுமாயின் திணைக்கள அலுவலர்கள் உடனேயே அந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்வதோடு வேலை பகிஷ்கரிப்பு ஏற்படும் பட்சத்தில் அது தொடர்பில் தேவையான தலையீடுகளை மேற்கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள வேலை பகிஷ்கரிப்புகளின் எண்ணிக்கையில் சிறிதளவு அதிகரிப்பு காணப்படுகின்றது.

| வருடம் | சம்பவம் | பெருந்தோட்டம் | நிர்மாணம் | உற்பத்தி | சுரங்க அகழ்வு | தங்குமிடம் மற்றும் உணவு வழங்கல் | பகுதியளவு அரச | ஏனைய சேவைகள் | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2019 | பதிவாகிய வேலை பகிஷ்கரிப்புகள் | 8 | 1 | 11 | - | - | - | 1 | 21 |
| | பங்கேற்ற ஊழியர் எண்ணிக்கை | 1952 | 100 | 4701 | - | - | - | 16 | 6769 |
| | இழக்கப்பெற்ற மனித நாட்களின் எண்ணிக்கை | 28218 | 200 | 26403 | - | - | - | 16 | 54837 |
| 2020 | பதிவாகிய வேலை பகிஷ்கரிப்புகள் | 13 | - | 12 | - | 2 | - | 1 | 28 |
| | பங்கேற்ற ஊழியர் எண்ணிக்கை | 1936 | - | 4040 | - | 64 | - | 85 | 6125 |
| | இழக்கப்பெற்ற மனித நாட்களின் எண்ணிக்கை | 9375 | - | 12806 | - | 324 | - | 85 | 22590 |

அட்டவணை 2.3 - வேலை பகிஷ்கரிப்புகள் தொடர்பாக பதிவாகிய தரவுகள் – 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டு

கைத்தொழில் பிணக்குகளுக்கான மத்தியஸ்தத்தின்போது கூட்டு ஒப்பந்தங்களுக்கு வருவதன் மூலம் தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய தரப்பினர்களுக்கு மிகவும் நிலையான தீர்வுகள் கிடைக்கப்படுதல் மட்டுமன்றி தொழில் சட்டவிதிகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் விட அதிகமான சிறப்புரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும். அதேவேளை, சமூக கலந்துரையாடல் ஊடாக கூட்டு ஒப்பந்தங்களின் பால் தூண்டுவதற்கு திணைக்களத்தினால் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். 2020 இல் ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 15 கூட்டுஒப்பந்தங்கள் உள்ளடங்கலாக148 கூட்டுஒப்பந்தங்கள் 2020.12.31 ஆம் திகதியில் செயற்பாட்டில் உள்ளன.




வரைபடம் – 2.3 – கூட்டு ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்படுதல் – 2020

### 2.2 விசேட விசாரணைகள்

வழக்கமாக இடம்பெறுகின்ற தொழில் பரிசோதனைகள் மற்றும் முறைப்பாடுகளுக்கான விசாரணைகளுக்கு மேலதிகமாக ஏதேனும் முறைப்பாடு பற்றிய விசாரணை அல்லது ஏதேனும் நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை இடம்பெற்ற விதம் தொடர்பாக திருப்தியடையாத ஒருவர் சுயாதீன விசாரணையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்திடம் முன்வைக்கும் கோரிக்கைகள் தேவைக்கேற்ப மீண்டும் விசாரிக்கப்படும்.

அதன் பிரகாரம், 2020 ஆம் ஆண்டில் அலுவலக மற்றும் கள முறைப்பாட்டு விசாரணைகள் 198 மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அதன்மூலம் கணிப்பிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவைப் பெறுமதி 5,767,050.00 ரூபா என்பதுடன் கணிப்பிடப்பட்ட நிலுவை நியதிச்சட்ட கொடுப்பனவின் பெறுமதி 12,055,291.00 ரூபாவாகும். அதேவேளை, பகுதியளவு அரச நிறுவனங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் 19 இவ்வருடத்தில் நடத்தப்பட்டுள்ளன.

### 2.3 தொழில் தரங்களைப் உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்துதல்.

தனியார் துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் மீது தாக்கம் ஏற்படுத்துகின்ற சம்பளம், சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக தர நியமங்களைத் தயாரித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் அவற்றுக்கு சட்டரீதியான தன்மையை வழங்குதல் திணைக்களத்தின் முதன்மை செயற்பாடாகும்.

அதன்படி, 2020 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | நிகழ்ச்சித்திட்டம்/செயற்பாடு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | காலம் முடிவடையும் சம்பளச் சபைகளுக்கு பிரதிநிதிகளை நியமித்தல் | 15 |
| 2 | 05 நாட்களிலான வேலை வாரத்தில் கிடைக்கும் கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல் | 197 |
| 3 | கொக்கோ, ஏலக்காய் மற்றும் மிளகு பயிற்செய்கை மற்றும் உற்பத்திக் கைத்தொழில் பற்றிய சம்பளச் சபையின் ஆகக் குறைந்த சம்பளங்களை மாதாந்தம் பகிரங்கப்படுத்தல் | 10 |
| 4 | கூட்டு ஒப்பந்தங்களின் சட்ட ரீதியான செல்லுபடித் தன்மையினைப் பரிசோதித்தல் | 36 |
| 5 | 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் கீழ் தெளிவுபடுத்தல் மற்றும் சட்ட ரீதியான பொருள்கோடல்களை வழங்குதல் | 07 |
| 6 | சம்பளச் சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் தெளிவுபடுத்தல்களையும் சட்டரீதியான பொருட்கோடல்களையும் வழங்குதல் | 24 |
| 7 | கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ் தெளிவுபடுத்தல்களையும் சட்டரீதியான பொருட்கோடல்களையும் வழங்குதல் | 14 |
| 8 | சம்பளச் சபை கட்டளைச் சட்டம், கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின்கீழ் சம்பளத்திலிருந்து கழிப்பதற்காக கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல் | 23 |
| 9 | சம்பளச் சபை கட்டளைச் சட்டம், கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின்கீழ் தண்டப் பண நிதியங்கள் தாபிக்கப்படுதல் மற்றும் தண்டப் பண நிதியத்திலிருந்து செலவு செய்வது தொடர்பாக கிடைக்கின்ற கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல் | 02 |

| | | |
|---|---|---|
| 10 | சம்பளச் சபை தொடர்பான விசேட விடுமுறை நாட்கள் மற்றும் தேர்தல் விடுமுறை நாட்கள் செய்தித்தாள்களின் மூலம் அறிவிக்கப்படுதல். | 01 |
| 11 | தொழில் தரப் பிரிவினால் வெளியிடப்படுகின்ற வர்த்தமானி அறிவித்தல்கள், சட்டத் திருத்தங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின் மென் பிரதிகள் திணைக்களத்தின் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுதல். | 44 |
| 12 | பாதுகாப்புச் சேவை நிறுவனங்களுக்கு வருடாந்த அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்குரிய தடை நீக்கச் சான்றிதழ்களை வழங்குதல் | 22 |

அட்டவணை 2.4 – தொழில் உரிமைகளை தரப்படுத்தும் செயற்பாடுகள் - 2020

## 2.4 ஊழியரின் தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்புக்காக கண்ணியமான/சீரிய பணிசசூழலை உறுதிப்படுத்துதல்

### 2.4.1 தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தொழிலாளர்களின் சுகாதார நிலைமை பாதுகாக்கப்படும் வகையில் பணியிடத்தின் சூழலை அமைப்பது தொழில் தருநரின் கட்டாயமான பொறுப்பாக அமைவதோடு பாதுகாப்பான பணிச் சூழலில் பணியாற்றுவதற்குள்ள உரிமை இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

#### 2.4.1.1 பணியிடங்களில் சுகாதாரப் பாதுகாப்பினை பரிசோதனைக்கு உட்படுத்துதல்.

பணியிடமொன்றில் சுகாதாரப் பிரச்சினைகள்/விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்பதனை பரிசோதிப்பதற்காக சுற்றாடல் தர கண்காணிப்பு, உயிரியல் கண்காணிப்பு, இரைச்சல் அளவீட்டுப் பரிசோதனைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு அமைகின்றன.

| | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடுகள் | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சுற்றாடல் அளவீடுகள் | 78 |
| 2 | உயிரியல் கண்காணிப்புகள் | 1525 |
| 3 | தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கணக்காய்வுகள் | 183 |

அட்டவணை 2.5 - பணியிடங்களின் சுகாதாரப் பாதுகாப்பினை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் - 2020

#### 2.4.1.2. பணியிடங்களில் சுகாதார பாதுகாப்பினை பேணுவதற்குத் தேவையான அறிவினை வழங்குதல் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

சேவை புரியும் இடங்களின் ஊழியர்களின் உடல்நலம் குறித்த உயர்ந்த மட்டத்தில் முகாமையாளர் முதல் மிகக் குறைந்த நிலை ஊழியர் வரை ஒவ்வொரு மட்டத்திற்கும் ஏற்ற வகையில் கல்வி நிகழ்சித்திட்டங்கள் நடைபெற்றன. 2020 ஆம் ஆண்டில், இதுபோன்ற 137 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை திணைக்களம் நடாத்தியுள்ளது.இதற்கு மேலும், கொவிட் - 19 சர்வதேச தொற்றுக் நிலைமையின் கீழ் எவ்வாறு தொழிற்சாலைகளை .இயக்கவேண்டும் என்ற தொனிப் பொருளின் கீழ் தொழிற்சாலை மட்டத்தில அதன் முகாமைத்துவத்திற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

#### 2.4.1.3. மருத்துவச் சபையின் தீர்மானங்களை வழங்குதல்

மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து பணம் கோரும் விண்ணப்பதாரிகள் சார்பாக 16 மருத்துவச் சபைகள் நடத்தப்பட்டு தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

#### 2.4.2. ஆபத்துக்கள் அற்ற பணிச் சூழலை உறுதிப்படுத்துதல்

தொழிற்சாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு மின்சாரம், வெப்பம், காற்றழுத்தம், அதிக வெளிச்சம் மற்றும் இரைச்சல் மூலம் அல்லது வேறு வகையில் அல்லது உடல்ரீதியான சேதம் அல்லது மரணம்கூட சம்பவிக்கக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதோடு அவற்றை குறைப்பது திணைக்களத்தின் ஒரு பிரதான பணியாகும்.

முழு இலங்கையும் உள்வாங்கப்படும் வகையில் தாபிக்கப்பட்டுள்ள மாவட்ட தொழிற்சாலை ஆய்வு பொறியியல் அலுவலகங்கள் 10 காணப்படுவதோடு அவற்றில் சேவையில் ஈடுபட்டுள்ள தகுதிவாய்ந்த பொறியியலாளர்களினால் தொழிற்சாலைகள் பரிசோதிக்கப்பட்டு இப்பணி நிறைவேற்றப்படுகின்றது.

#### 2.4.2.1. புதிய தொழிற்சாலைகளைப் பதிவு செய்தல்

புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்போது அல்லது பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட தொழிற்சாலைகள் உரிய தர நியமங்களைப் பின்பற்றுகின்றனவா என்பதனை பரிசோதித்து அவ்வாறு இல்லையெனில் அவற்றை சரிசெய்து கொள்வதற்கு ஆலோசனைகளை வழங்குவதுடன் உரிய தர நியமங்களும் தரங்களும் பின்பற்றப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். 2020 ஆம் ஆண்டு முடிவடையும்போது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 31,833 ஆகும். இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள புதிய கைத்தொழிற்சாலைகள் 738 இதில் உள்ளடங்கும்.

#### 2.4.2.2. கட்டிட வரைபடங்களை பரிசோதித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல்

தொழிற்சாலைகளுக்கென கட்டிடங்களை நிர்மாணிக்கும்போது அவை தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக உள்ளனவா என்பதனை பரிசோதித்தல் மற்றும் அதனை உறுதிப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் 106 கட்டிட வரைபடங்கள் பரிசோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

#### 2.4.2.3. தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல்

மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகங்ளின் அவற்றின் பிரதேசங்களில் உள்ள அனைத்து தொழிற்சாலைகளையும் பரிசோதனை செய்து, விபத்துக்கள் ஏற்படும் நிலைமை உள்ளதா என சரிபார்த்து, சரிசெய்தல் குறித்து உரிய அலுவலர்களுக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.2020 ஆம் ஆண்டில் 2130 தொழிற்சாலைகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

#### 2.4.2.4. விபத்துக்கள் பற்றிய விசாரணைகள் மற்றும் அபாயகரமான சம்பவங்கள் பற்றிய விசாரணைகள்

2020 ஆம் ஆண்டில் மரணங்களை ஏற்படுத்திய விபத்துக்கள் 71ம் மரணங்களை ஏற்படுத்தாத விபதுக்கள் 1,116ம் திணைக்களத்தில் பதிவாகியுள்ளன. இந்த விபத்துகள் தொடர்பாக விசாரித்து உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதும் விபத்திற்கான காரணங்களை கண்டறிவதன் மூலம் அத்தகைய விபத்துக்கள் மீண்டும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு தொழில்தருநர்களை விழிப்பூட்டும் செயற்பாடுகளும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி 2020 ஆம் ஆண்டில் கைத்தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் மீறப்படுகின்ற வகையில் செயற்பட்ட தொழில்தருநர்களுக்கு எதிராக 70 வழக்குகள் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

#### 2.4.2.5. அதி அபாயகரமான இயந்திரங்களைப் பரிசோதித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்டு பரிசோதனை அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய கைத்தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற நீராவி கொதிகலன்கள், நீராவி பெறுதல்கள், ஏயார் ரிசீவர்ஸ், தூக்கிகள், மின்தூக்கி இயந்திரங்கள் உட்பட அதி அபாயகரமான இயந்திரங்களைப் பரிசோதிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் அத்தகைய பரிசோதனைகள் 9,034 நடத்தப்பட்டுள்ளன.

### 2.4.2.6. விழிப்பூட்டல் செயலமர்வுகளை நடாத்துதல்

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் மேம்படுத்தப்படும் நடவடிக்கைகளின்போது சட்ட விதிகளை நடைமுறைப்படுத்தல் போலவே தொழில்தருநர் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரினதும் அறிவினை மேம்படுத்துவது முதன்மையான ஒரு பணியாகக் கருதி 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட செயலமர்வுகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | சம்பந்தப்பட்ட பிரிவு | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்ற பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | நிர்மாணம் | 06 | 850 |
| 02 | ஆடை | 09 | 600 |
| 03 | ஏனைய | 17 | 2250 |
| 04 | மொத்தம் | 96 | 9400 |

அட்டவணை 2.6 - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட விழிப்பூட்டல் செயலமர்வுகள் - 2020

### 2.4.2.7 **தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களுக்கு இலக்காகும் நபர்கள் தொழில் நட்டுஈட்டு ஆணையாளர் மற்றும் சிரமவாசனா நிதியத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுதல்**

2020 ஆம் ஆண்டில் பதிவாகிய 237 விபத்துக்களை தொழில் நட்டஈட்டு ஆணையாளருக்கு ஆற்றுப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்கள் மீது தங்கிவாழ்வோருக்கும் நட்டஈடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த கல்வி பயிலும் 71 சிறுவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கு உரிய தகவல்களை சிரமவாசனா நிதியத்திற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.4.2.8. **உலக பாதுகாப்பு தினத்தைக் கொண்டாடுதல் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய வாரம்**

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 28ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற உலக பாதுகாப்பு தினம் சார்பாக தொழில் திணைக்களத்தினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற தேசிய கருத்தரங்கு கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட முடியவில்லை. அதன் காரணமாகவே தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய வாரமும் நடத்தப்பட முடியவில்லை என்பதோடு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான “நாம் பயணிப்பது எப் பாதையில்” எனும் ஆவணப்பட நிகழ்ச்சியை 2020.12.20 ஆம் திகதி பி.ப.7.00 மணி தொடக்கம் பி.ப 7.30 மணி வரை தேசிய ரூபவாஹினி ஊடாக ஒளிபரப்பு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், 2020 ஆம் ஆண்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்காக 1900 கையேடுகளும் 19800 துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் அச்சிடப்பட்டு எதிர்வரும் காலத்தில் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## 2.5 **பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் உழைப்பினை இல்லாதொழித்தல்**

வேலைத்தளத்தில் பெண்களின் தொழில்சார் உரிமைகள் உள்வாங்கப்பட்டுள்ள தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சட்டங்களை காலத்திற்கேற்ப மதிப்பாய்வு செய்து தேவையான திருத்தங்களை

விதப்புரை செய்வதன்மூலம் ஆக்கவிளைவுடன்கூடிய உழைப்புப் பங்களிப்பினை நாட்டுக்கு பெற்றுக்கொடுப்பது திணைக்களத்தின் முதன்மையான ஒரு பொறுப்பாகும்.

அதேவேளை, அனைத்துத் தரப்பினரினதும் பங்களிப்பின் மூலம் இலங்கையில் சிறுவர் உழைப்பினை இல்லாதொழிப்பதற்கான செயன்முறையின் பிரதான பணியினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது மட்டுமன்றி 18 வயதிற்குக் குறைந்த சிறுவர்களுக்கான தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் பெண்கள் இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது தொடர்பான சட்டதிட்டங்களை காலத்திற்கேற்ற வகையில் திருத்துவதற்காக விதப்புரைகளை முன்வைத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதும் திணைக்களத்தின் முதன்மையான பொறுப்பாகும்.

### 2.5.1 தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், இளம்ஆட்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டங்களை செயற்படுத்தியதன் மூலம் 2020 ஆம் ஆண்டின் முன்னேற்றம்.

| தொ.இ. | தொகுதி | எண்ணிக்கை | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| 01 | நாளாந்த பரிசோதனைகள் | 123 | கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக காலத்திற்கேற்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது இடை நிறுத்தப்பட்டிருந்தது. |
| 02 | இரவுநேர பரிசோதனைகள் | 66 | கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக வருடத்தின் முதலாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 03 | சிறுவர் உழைப்பு பற்றிய பரிசோதனைகள் | 132 | 104 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு கோப்புகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றில் 06 முறைப்பாட்டு விசாரணைகளின்போது சிறுவர் உழைப்பு பற்றிய விடயங்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளதனால் அவை தொடர்பில் வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| 04 | பெண்கள் சம்பந்தமான சேவை நிபந்தனைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் | 23 | 06 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு கோப்புகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. |
| 05 | பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துவதற்காக அனுமதி வழங்குதல் | 652 | மாவட்ட அலுவலகங்களின் மூலம் 631 அனுமதிகளும் உப அலுவலகங்களின் மூலம் 21 அனுமதிகளும் என்ற வகையில் பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை இரவு நேர முறை மாற்று வேலைக்கான கோரிக்கைகளை இணையவழியின் மூலம் திணைக்களத்திற்கு முன்வைப்பதற்கு தொழில் தருநர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. |
| 06 | ஆபத்தான சிறுவர் உழைப்பு மற்றும் சிறுவர் உழைப்பு பற்றிய விசேட குழு பரிசோதனைகள் | 58 | 290 நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டதோடு ஆபத்தான சிறுவர் உழைப்பு பதிவாகவில்லை. |
| 07 | பெண் தொழிலாளர்கள் பற்றிய விசேட குழுப் பரிசோதனைகள் | 124 | 607 நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டன |
| 08 | தொழில் சட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விழிப்பூட்டல்கள் | 02 | கடற்றொழில் மற்றும் நீரக வள திணைக்களத்தின் நிறைவேற்று பணியாட்தொகுதி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்கு, பெண்கள் மற்றும் சிறுவர்கள் பற்றிய சட்டம் தொடர்பாக விழிப்பூட்டலை மேற்கொள்ளப்பட்டது. |

அட்டவணை 2.7 - தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டங்களை செயற்படுத்துதல் - 2020

### 2.5.2. தொடர்புடைய பிரதான கொண்டாட்ட தினங்களை கொண்டாடுதல் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

#### 2.5.2.1. தொடர்புடைய பிரதான கொண்டாட்ட தினங்களை கொண்டாடுவதன் மூலம் விழிப்பூட்டல்

##### 2.5.2.1.1. சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம்

2020ஆம் ஆண்டு மகளிர் தினத்தை அடிப்படையாகக் கொண்டு தனியார் துறையின் பல்வேறுபட்ட நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்களுக்கான பிரசவ விடுமுறை வழங்கப்படுதல் மற்றும் தாய்ப்பால் வழங்குவதற்கான ஓய்வு நேரம் உரிய முறையில் வழங்கப்படுகின்றதா என்பதனை பரிசோதிப்பதற்காக ஒட்டுமொத்த நாடும் உள்வாங்கப்படும் வகையில் கூட்டுப் பரிசோதனை தொடர் நடத்தப்பட்டது.

##### 2.5.2.1.2. சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச தினக் கொண்டாட்டம்

இலங்கை சிறுவர்கள் சிறுவர் தொழில் மற்றும் ஆபத்தான சிறுவர் தொழிலில் ஈடுபடுவதனை தடுப்பதற்குத் தேவையான தலையீட்டினை மேற்கொள்வதையும் சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் இலக்காகக் கொண்டு 2020 ஆம் ஆண்டில் சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச தினக் கொண்டாட்டம் 2020.06.12 ஆம் திகதி கௌரவ அமைச்சரின் தலைமையில் தொழில் திணைக்களத்தின் 10 மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

அதன்போது தொழில் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ Youtube அலைவரிசை ஆரம்பிக்கப்படுதல் மற்றும் அடையாளமாக தொழில் சட்டம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கையேடு கையளிக்கப்படுதல் இடம்பெற்றது. அதேவேளை, 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் பிரதேச தொழில் அலுவலகங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சிறுவர் தொழில் பற்றிய முறைப்பாடுகளை தாமதமின்றியும் வெற்றிகரமாகவும் கையாள்வதன் மூலம் சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கும் தேசிய பொறுப்பிற்கு தனித்துவமான பங்களிப்பை வழங்கிய தொழில் அலுவலகங்களாக இனங்காணப்பட்ட களுத்துறை, கண்டி தெற்கு மற்றும் அனுராதபுர மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் நாவுல உப தொழில் அலுவலகம் என்பன நினைவுப் பலகைகள் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டன.





புகைப்படம் 2.3 –சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச தினக் கொண்டாட்டம் 2020

**2.4.2.1.3 உலக சிறுவர் தினக் கொண்டாட்டம்**

2020 ஆம் ஆண்டில் உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடுவதற்காக கடற்றொழில் திணைக்களம் சார்ந்ததாக ஓர் கூட்டுப் பரிசோதனைத் தொடர் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐந்து நாட்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து அனைத்து பலநாள் படகுகளும் அப்படகுகள் நங்கூரமிடப்பட்டிருந்த மீன்பிடி துறைமுகங்களில் வைத்து கூட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதேவேளை, பரிசோதனையின் இடைநடுவில் மீனவ சமுதாயம் மற்றும் இணைந்த நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்கள் என்போரை விழிப்பூட்டுவதற்காக சிறுவர் தொழில் மற்றும் ஆபத்துமிகு சிறுவர் தொழில் பற்றிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதோடு மீன்பிடித் துறைமுகங்களில் விளம்பரப் பலகைகளில் காட்சிப்படுத்துவதற்காக ஒரு சுவரொட்டியும் வழங்கப்பட்டது.

**2.5.2.2. சிறுவர் உழைப்பினை இல்லாதொழித்தல் பற்றிய தேசிய தொழிற்பாட்டுக் குழு**

2022 ஆம் ஆண்டளவில் இலங்கையிலிருந்து சிறுவர் உழைப்பினை இல்லாதொழிப்பதற்காக இலங்கை அரசு உறுதிமொழி வழங்கியுள்ளது. அதன்படி சிறுவர் உழைப்பினையும் அபாயகரமான சிறுவர் உழைப்பினையும் நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்காக சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களினதும் கூட்டு முயற்சிகளை மேலும் வலுவூட்ட வேண்டியது இன்றியமையாததாகும். சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் உரிய இலக்குகள் கூட்டு முயற்சியின் மூலம் அடைந்துகொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக சிறுவர் உழைப்பினை இல்லாதொழித்தல் பற்றிய தேசிய தொழிற்பாட்டுக் குழு (NSC) தாபிக்கப்பட்டது.

2020.07.20 ஆம் திகதி தொடர்புடைய நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்த 26 பேரின் பங்கேற்புடன் சிறுவர் உழைப்பினை இல்லாதொழித்தல் பற்றிய தொழிற்பாட்டுக் குழு தொழில் திணைக்களத்தின் 04 ஆம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

அதேவேளை, மேற்படி தினம் நடத்தப்பட்ட குழுவில் முன்மொழியப்பட்டவாறு தொழில்நுட்பக் குழுவானது சம்பந்தப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த 11 அலுவலர்களின் பங்கேற்புடன் 2020.12.08 ஆம் திகதி தொழில் திணைக்களத்தின் 04 ஆம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

2.5.2.3. ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு சார்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகளின்போது திணைக்களம் பின்வரும் வகையில் பங்களிப்பு நல்கி உள்ளது.

ஏற்பட்டிருந்த கோவிட் 19 தொற்று நோய் நிலைமையின் மத்தியில்கூட தொழில் உத்தியோகத்தர்கள் நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட மாவட்ட/பிரதேச சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் 19 இல் பங்கேற்றதோடு அங்கு குழு அங்கத்தவர்கள் ‘‘சிறுவர் உழைப்பு” தொடர்பாக விழிப்பூட்டப்பட்டனர். அதேவேளை, 2021 சிறுவர் உழைப்பினை இல்லாதொழிக்கும் சர்வதேச வருடம் தொடர்பாக தொழில் ஆணையாளர் நாயகத்தினால் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களும் விழிப்பூட்டப்பட்டதோடு 2021 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

**2.5.2.4. ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள்**

- ❖ இலங்கையில் சிறுவர் உழைப்பினை இல்லாதொழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் - விசேட பரிசோதனைகள் மற்றும் முற்றுகைத் தொடர்

இலங்கையில் சிறுவர் உழைப்பு மற்றும் ஆபத்தான தொழில் வாய்ப்புகளை குறைப்பதன் மூலம் சிறுவர் சந்ததியினருக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கும் நோக்கத்தை முதலாகக் கொண்டு ஒட்டுமொத்த நாடும் உள்வாங்கப்படும் வகையில் அனைத்து மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்களையும் இணைப்பாக்கம் செய்து முற்றுகைத் தொடரொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்போது வருடத்தின் முதலாம் காலாண்டில் 14 முற்றுகைகளும் நான்காம் காலாண்டில் 44 முற்றுகைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### 2.5.2.5. நடைமுறையிலுள்ள தொடர்புடைய சட்ட முறைமையை திருத்துவதற்கான நடவடிக்கைகளின் முன்னேற்றம்

1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்களையும் இளம் ஆட்களையும் சிறுவர்களையும் சேவையில் ஈடுபடுத்துதல் பற்றிய சட்டத்தின் 24ஆம் இலக்க திருத்தத்தின்படி சட்டத்தின் 20 (அ) பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதியின் கீழ் 18 வயதுக்குக் குறைந்த எந்தவொரு நபரும் ஆபத்தான தொழில்களில் அல்லது தொழிலில் ஈடுபடுத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் ஆபத்தான தொழில் வாய்ப்புகள் பற்றிய பட்டியலைத் திருத்தி 18 வயதுக்குக் குறைந்த நபர்களின் உடல் மற்றும் உள ரீதியான சுகாதார மற்றும் பாதுகாப்புக்குப் பாதகமான தொழில் வாய்ப்புகளை இனங்கண்டு "புதிய ஆபத்தான தொழில் வாய்ப்புகள் பற்றிய ஒழுங்கு விதி" வரைவு செய்யப்பட்டு அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த வரைவு நகல் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு முதலாம் வரைவுக்காக தொழில் திணைக்களத்தின் அவதானிப்புகளை சமர்ப்பிப்பதற்கும் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்தக்கூடிய ஆகக்குறைந்த வயதினை 14 தொடக்கம் 16 வரை அதிகரிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற 5 சட்டங்களுக்கான வரைவுகள் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.6. ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பு

இலங்கையில் தனியார் துறை மற்றும் பகுதியளவு அரசுத்துறையில் சேவையில் ஈடுபடுகின்ற ஊழியர்களுக்கு சாதகமான பொருளாதார நிலைமையுடன்கூடிய இளைப்பாறல் காலப்பகுதியைப் பெற்றுக்கொடுக்கும் அடிப்படை நோக்கத்தினை முதலாகக் கொண்டு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. அதன் நிதி நிர்வாகம் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு நிதி முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2019.12.31ஆம் திகதியில் இந் நிதியத்தின் பெறுமதி 2,540,438 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதோடு நிதியத்தின் உயிரோட்டமான உறுப்பினர்களின் எண்ணிக்கை 18.9 மில்லியன் ஆகும்.

### 2.6.1 ஊழியர் சேமலாப நிதியத்தில் சேவை நிறுவனங்களைப் பதிவு செய்தல்

ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின்கீழ் உள்வாங்கப்படுகின்ற அனைத்துத் தொழில் தருநர்களும் நிதியத்தில் தம்மை பதிவு செய்து கொள்ளல் வேண்டும். அதன்படி 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழில் தருநர்களின் எண்ணிக்கை 1453 ஆகும். 2020 ஆம் ஆண்டில் நிதியத்தில் பங்களிப்புத் தொகை வரவு வைத்துள்ள செயற்பாட்டில் உள்ள தொழில்தருநர்களின் எண்ணிக்கை 94,171 ஆகும். வருடத்தில் நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகை 125,366.65 மில்லியன் ரூபாவாகும்.


### 2.6.2. ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்தவர்களைப் பதிவு செய்தல்

ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் உள்வாங்கப்படுகின்ற அனைத்து ஊழியர்களுக்கும் அங்கத்துவ இலக்கம் வழங்கி அவர்களை நிதியத்தில் பதிவு செய்ய வேண்டியது தொழில்தருநரின் பொறுப்பாகும் என்பதோடு அது தொழில் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. அதன்படி 2020 ஆம் ஆண்டில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை 167,352 ஆகும். இன்றளவில் தொழிற்பாட்டிலுள்ள அங்கத்தவர்களுக்கான கணக்குகளின் எண்ணிக்கை 2.91 மில்லியன் ஆகும்.

பங்களிப்புத் தொகை செலுத்தத் தவறும் தொழில்தருநர்களிடமிருந்து அத்தொகையை அறவிடுவதற்காக முதலாவது அறிவித்தல் மற்றும் சிவப்பு அறிவித்தல்கள் விநியோகிக்கப்படுவதோடு அதற்குப் பதில் வழங்காத பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த பங்களிப்புத் தொகை மற்றும் தண்டப்பணம் அறவிடப்பட்டு கணக்கில் வைப்பீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2020 ஆம் ஆண்டில் அத்தகைய முதலாம் அறிவித்தல்கள் 12,232 அனுப்பப்படுவதன் மூலம் 5,065 மில்லியன் ரூபாவும் 9,253 சிவப்பு அறிவித்தல்கள் அனுப்பப்படுவதன் மூலம் 3,941 மில்லியன் ரூபாவும் அறவிட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

### 2.6.3 ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்கள் செலுத்தப்படுதல்

திணைக்களத்தின் தலைமையகத்திலிருந்தும் நாடு தழுவிய ரீதியில் அமைந்துள்ள 35 மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் 12 உப அலுவலகங்களிலிருந்தும் 10 வலய தொழில் அலுவலகங்களிலிருந்தும் அங்கத்தவர்களுக்கு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு 2020 ஆம் ஆண்டில் அவ்வாறு அனுகூலங்களைப் பெற்றுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு அமைகின்றது.




வரைபடம் 2.4 - அனுகூலங்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறுதல் மற்றும் தீர்மானக் கடிதங்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படுதல் – 2020

### 2.6.4. அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிகளுக்கான மேற்பார்வை

2020.12.31 ஆம் திகதியில் ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதி காணப்படுகின்ற 117 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு ஒட்டுமொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 186,743ஆகும். மேற்படி நிதியங்களுக்கான பங்களிப்புத் தொகை வரவு வைக்கப்படுதல், அனுகூலங்கள் செலுத்தப்படுதல் உள்ளிட்ட செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டு உரிய முறையில் இயங்கிவராத நிதியங்கள் தொழில் ஆணையாளர் நாயகத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

| | |
|---|---|
| 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 52 |
| 2020 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக் கோவைகளின் எண்ணிக்கை | 40 |
| 2020 ஆம் ஆண்டில் கள உத்தியோகத்தர்களினால் மேற்பார்வை செய்யப்பட்ட த.ஊ.சே.நி. தொடர்பான அறிக்கைகளின் எண்ணிக்கை | 72 |
| 2020 ஆம் ஆண்டில் மேற்பார்வை செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 72 |

அட்டவணை 2.8 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிகளுக்கான மேற்பார்வையின் முன்னேற்றம் - 2020

### 2.6.5. நிதியத்தினால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுகூலங்கள்

2.6.5.1. ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்துவ கணக்கு நிலுவையை பிணையாக வைத்து வீடமைப்புக் கடன் வழங்கப்படுதல்

அங்கத்தவர்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்தும் நோக்கத்துடன் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்துவ கணக்கு நிலுவையை பிணையாக வைத்து 75% வீதமான உச்சம் வரை வீடமைப்புக் கடன் பெற்றுக்கொள்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி 2020 ஆம் ஆண்டில் 6591 வீடமைப்புக் கடன் விண்ணப்பப்படிவங்களுக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டுள்ள தொகை 3.43 பில்லியன் ரூபாவாகும்.


### 2.6.5.2.ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

தொழில்தருநர் தொழிலாளர் தரப்புகளிடம் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக உள்ள அறிவினை மேம்படுத்துதல் மற்றும் பதிவினை விரிவாக்கும் நோக்கத்துடன் 03 நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் ரத்கம, போத்தல மற்றும் ஹோமாகம ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட்டன.

2.6.5.3.தலைமையகத்தினால் வழங்கப்பட்ட சேவைகள் பிரதேச அலுவலகங்கள் வரை பன்முகப்படுத்தப்பட்டதன் மூலம் அங்கத்தவர்களுக்கு முன்பிருந்ததை விட அதிகளவான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.7. ஊழியர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு

ஊழியர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக திணைக்களத்தினால் பல வகையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதற்கமைய தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய குறிப்பிட்ட சட்டங்களின் ஏற்பாடுகள் நாடு தழுவிய ரீதியில் ஒரே வகையாக நடைமுறைபடுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அச்சட்டங்களை மீறுவோருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அதனூடாக தொழில்தருநர் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்து தொழில்தருநர் தொழிலாளர் ஒத்துழைப்பினை மேம்படுத்துவதும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.




வரைபடம் 2.5 – அனைத்து மாவட்ட அலுவலகங்களினாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மற்றும் தீர்க்கப்பட்டுள்ள வழக்குகள் – 2020

| **நீதிமன்றம்** | 2020ஆம் ஆண்டிற்கு முன்னெடுத்துவரப்பட்ட நிலுவை | 2020ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள் |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 114 | 8 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 160 | 17 |
| மேல்நீதிமன்றம் | 120 | 30 |
| மாவட்ட நீதிமன்றம் மற்றும் வணிக நீதிமன்றம் | 216 | 21 |

அட்டவணை 2.9 நீதிமன்றங்கள் வாரியாக வழக்குகளின் செயலாற்றுகை - 2020

## 2.8 நிர்வாகம்

### 2.8.1. நிர்வாகம்

நிர்வாக பிரிவு 04 கிளைகளைக் கொண்டுள்ளது. அவையாவன நிர்வாகக் கிளை, தாபனக்கிளை கட்டிடப்பராமரிப்பு அலகு மற்றும் நூலகம் என்பனவாகும்.

இவற்றில் திணைக்களத்தின் அனைத்து சேவைகள் மற்றும் வழங்கல்களை நிர்வாகக்கிளை கையாள்கின்றது. இதன்கீழ், திணைக்களத்தின் கட்டிங்கள் அமைப்பதுடன் தொடர்புடைய தேவைகளுக்கு நிலத்தினை அடையாளங்காணல் மற்றும் கட்டிடம் அமைப்பதுடன் தொடர்பான நடவபிக்கைகளுக்கு வழிகாட்டுதல், கட்டிடங்களைப் புணர்நிர்மாணித்தல் மற்றும் கட்டிடங்களை மேம்படுத்துதல், தேவைக்கேற்ப கட்டிடங்களை வாடகைக்கு விடல், திணைக்களத்தின் வாகனங்களை நிர்வகித்தல், திணைக்களத்தின் வலய மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்குத் தேவையான உள்ளகக் கட்டமைப்புக்களை வழங்குதல், மூலதனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கையாள்தல்,மேலதிக நேர வேலை கொடுப்பனவு, விடுமுறைநாள் வேலைக்கான கொடுப்பனவு, அக்ரகாரா காப்புறுதி,இடர்கடன் போன்றவற்றிற்கு அனுமதியளித்தல் போன்றன செய்யப்படுகின்றன.

துாபனக்கிளையானது திணைக்களத்தின் மனிதவளத் தேவையை அடையாளங்கண்டு, தேவைக்கு ஏற்ப ஆட்களை ஆட்சேர்ப்புச் செய்வதுடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள். அலுவலர்களின்பதவி உயர்வு,வினைத்திறன் காண்தடைப் பரீட்சை. செயற்றிறனை மதிப்பீடு செய்தல்,சம்பள உயர்வுகளை வழங்குதல்,இடமாற்ற நடைமுறைகளை செயல்படுத்துதல்,ஓய்ூதியம் தாமதமின்றி தயாரித்து அளித்தல்,ஊழியர்களின்விடுமுறைகளை அனுமதித்தல்,அலுவலர்களின் ஒழுக்கம் என்பவற்றை கையாளுதல்போன்ற பணிகளைச் செய்கின்றது.

வழக்கமாக மேற்கொள்ளப்படுகின்ற இந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக நிர்வாக நடவடிக்கைகளை மேலும் வினைத்திறன்மிக்கதாக ஆக்குவதற்கு 2020 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- திணைக்களத்தின் உள்ளக தொடர்பாடலுக்காக ஸ்லெக் செயலியை (Slack Application) அறிமுகம் செய்தல்
- கோவிட் 19 பரவலைத் தடுப்பதற்காக நாடுபூராகவும் அனைத்து தொழில் அலுவலகங்களுக்கும் மாவட்ட தொழிற்சாலைகள் பொறியியல் அலுவலகங்களுக்கும் தலைமையகத்தின் அனைத்து கிளைகளுக்கும் வழிகாட்டல்கள் வழங்கப்படுதல்.
- திணைக்களத்தின் அலுவலர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதல்
- கோவிட் 19 தொற்றுநோய் காலப்பகுதியில் கடமைக்குச் சமூகமளிப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு சேவை முறை மாற்று முறையொன்றை அறிமுகம் செய்தல்.

### 2.8.2 நிர்மாணிப்புகள்

கட்டிடப்பராமரிப்பு அலகானது, வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் திணைக்களத்தின் கட்டுமானப்பணி மற்றும் கட்டிடங்களைப் புணர்நிர்மாணம் செய்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான கொள்வனவத் திட்டம் என்பவற்றைத் தயாரிப்பதற்கு உதவுதல், கட்டிடங்கள் திணைக்களம் மற்றும் கட்டிடங்கள் அமைத்தலுடன் தொடர்புடைய பிற நிறுவனங்கள்என்பவற்றை ஒருங்கிணைத்தல், கட்டிடப்புணர் நிர்மாணம் மற்றும் மேம்பாட்டு நடவபிக்கைகள், திணைக்கள தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் பராமரிப்பு நடவபிக்கைகள் என்பவற்றையும். மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளைச் செய்கின்றது.

அதன்படி 2020 ஆம் ஆண்டில் கீழே தரப்பட்டுள்ள அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

| 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு( ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை)(ரூ.மி.) | திட்டமிடப்பட்ட செயற்பாடுகள்/ கருத்திட்டங்கள்(பிரதான) | 2020.12.31 ஆம் திகதியில் நிதிசார் முன்னேற்றம் | 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு(ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை)(ரூ.மி.) |
|---|---|---|---|
| 22 | குருநாகல் தொழில் அலுவலகம் நிர்மாணிக்கப்படுதல்(தீயணைப்பு பாதுகாப்பு முறைமை) | 22 | 20% |
| - | அம்பலாங்கொடை தொழில் அலுவலகம் நிர்மாணிக்கப்படுதல் | - | கட்டம்II (95%) |
| 53.70 | பதுளை தொழில் அலுவலகம் நிர்மாணிக்கப்படுதல் | 53.70 | கட்டம்I (52%) |
| 19.53 | நாவுல தொழில் அலுவலகம் நிர்மாணிக்கப்படுதல் | 19.53 | கட்டம்II (100%) |
| 62 | ஹட்டன் தொழில் அலுவலகம் நிர்மாணிக்கப்படுதல் | 62 | கட்டம்I (62%) |

அதேவேளை, கடந்த வருடம் திறந்து வைக்கப்பட்ட “மெஹவர பியச” கட்டிடத்தில் திணைக்களத்தின் பிரிவுகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

### 2.8.3. நூலகம், அருங்காட்சியகம் மற்றும் தகவல் சேவை

தொழில் துறை தொடரடபான சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள், பத்தகங்கள் மற்றும் பிரசுரிப்புகள் என்பவற்றிற்கான இலங்கையின் பிரதான நூலகமாக இது உள்ளது.தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் அமைச்சின் உத்தியோகத்தர்கள், தொழில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கும் அதே போல் தொழில்சட்டம் தொடர்பான நூல்களை வாசிக்கும் பொது மக்களுக்கும் இநநூலகம் உதவுகின்றது.

இந்நூலகமானது 180,000 புத்தகங்கள், பிரசுரிப்புகள் மற்றும் சஞ்சிகைகள் என்பவற்றை கொண்டுள்ளது. இங்குள்ள இந்த தொகுப்புக்களை சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், தொழில்சட்டங்களுடன் தொடர்புடைய பிரசுரிப்புகள், சர்வதேச அமைப்பின் பிரசுரிப்புகள், ஐக்கியநாடுகளின் பிரசுரிப்புகள். சிறுவர் தொழில் தொடர்பான பிரசுரிப்புகள் போன்றன என வகைப்படுத்த முடியும்.

நூலகத்தினால் நூல்கள் இரவல் வழங்கப்படும் சேவை, உசாத்துணை சேவை, நிழற் பிரதி சேவை, செய்தித்தாள் கட்டுரைத் தொகுப்பு, உள்ளடக்க பக்கச் சேவை மற்றும் நூலகங்களுக்கு இடையிலான இரவல் சேவை ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டில் நூலகத்திற்காக 30 நூல்களும், 13 வெளிநாட்டு சஞ்சிகைகளும் கொள்வனவு செய்யப்பட்டதோடு அங்கத்தவர்களுக்கு 2870 நூல்கள் இரவலாக வழங்கப்பட்டுள்ளன. 507 வெளி வாசகர்களுக்காகவும் உசாத்துணை சேவை வழங்கப்பட்டுள்ளது.

தொழில் என்னும் துறையுடன் பிணைந்துள்ள பழைய சட்டங்கள் மற்றும் தொழில் துறையுடன் பிணைந்துள்ள ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக தொழில் திணைக்களத்தினால் அருங்காட்சியகமொன்றும் பேணப்பட்டு வருகின்றது. இலங்கையில் தொழில்துறையானது ஆரம்பத்திலிருந்து இதுவரை பரிணாமம் அடைந்த விதத்தினை மேற்படி அருங்காட்சியகம் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

### 2.9 நிதி முகாமைத்துவம்

2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி வளம் அரச கொள்கைகளுக்கு அமைவாக வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுள்ள வகையிலும்

உரிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட மீண்டெழும் ஏற்பாடுகளில் 94.6% வீதமும் மூலதன நிதி ஏற்பாடுகளில் 93.14% வீதமும் இதற்காக பயன்படுத்தி நிதி முகாமைத்துவ இலக்குகள் அடையப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | ஒதுக்கீடு(ரூ) | 2,051,750,000 |
| | செலவினம் (ரூ) | 1,941,023,284 |
| மீண்டெழும் செலவினம் | ஒதுக்கீடு(ரூ) | 1,053,800,000 |
| | செலவினம் (ரூ) | 981,560,511 |

அட்டவணை 2.10 – 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்

## 2.10 திணைக்களத்தின் பணிகளை மேற்பார்வை செய்வதன்மூலம் இலக்குகளை நோக்கி வழிநடாத்துதல் மற்றும் மனிதவள அபிவிருத்தி

### 2.10.1 திணைக்களத்தின் பணிகளை மேற்பார்வை செய்வதன்மூலம் இலக்குகளை நோக்கி வழிநடாத்துதல்

திணைக்களத்தின் வருடாந்த செயல் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம் தயாரித்தல் மற்றும்திணைக்களத்தின் சாதனைக் குறிக்கோள்களை அடைவதற்கு திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் பிராந்திந்திய அலுவலகங்களின் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல், திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் பற்றிதொழில் ஆணையாளர்கள விவாதிப்பதற்கானமாதாந்த கூட்ட செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், அதே போல தொழில் மற்றும் பிற அமைச்சுக்களால் மாதாந்தம் நடாத்தப்படும் முகாமைத்துவ குழுக்கூட்டத்தை ஒருங்கிணைத்தல் என்பன திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்ச்சி மற்றும் வெளியீட்டு பிரிவின் திட்டமிடல் மற்றும் முன்னேற்ற மீள்ளாய்வு விடயங்களின் பொறுப்பாகும்.

திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் முன்னேற்ற மதிப்பாய்வு செய்தல் இப்பிரிவின் பொறப்பாகும். இதன்கீழ், பிராந்திய அலுவலகங்களின் வருடாந்த முன்னேற்ற மதிப்பாய்வு திட்டங்களை தயாரித்தல் மற்றும் கண்காணிப்பும் இப்பிரிவினால் செய்யப்படுகின்றன.அங்கு, வலயங்களுக்குப் பொறுப்பாக உள்ள பிரதித் தொழில் ஆணையாளர்கள் ஒவ்வொரு வலயத்திற்குமான முன்னேற்ற மதிப்பாய்வை செய்கிறார்கள். ஒவ்வொரு அலுவலகத்தினதும் முன்னேற்றத்தினை சரிபார்த்துக் கண்காணிக்கும் குழுவிற்கும் இப்பிரிவு வழிகாட்டுகின்றது

இதன் பிரகாரம், இந்த பிரிவானது அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்கள் அதே போல்திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளையும்அவற்றின் முன்னேற்றத்தின் நியதிகளின்படி மேற்பார்வை செய்கின்றது என்பதுடன் திணைக்களத்தின் தொலை நோக்கு மற்றும் இலக்குகளை அடையும் நோக்குடன் உரிய வருடாந்த குறிக்கோள்களை நோக்கி கவனம் செலுத்துகின்றது.இங்கு, திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் மாவட்ட உப அலுவலகங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதும், அதிலிருந்து பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதும்,வலயமட்டத்திலான

முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களை நடாத்துவது மற்றும் மேலும் முன்னேற்றத்தை மேம்படுத்தத் தேவையான பரிந்துரைகளைஉரிய அலுவலகங்களுக்கு வழங்குவதும் ஆகும்.

திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் தேவையான பயிற்சியளித்தல், வெளி நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளுக்கு உத்தியோகத்தர்களை வழிநடத்துதல், பல்கலைக்கழக பட்டங்கள் மற்றும் முதுகலை பட்டதாரிகளுக்கு நிதி ஏற்பாடுகளை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சிக்கு தேவையான பயிற்சியை ஒருங்கிணைத்தல். இந்த பிரிவால் மேற்கொள்ளப்படும் மனித வள மேம்பாட்டு பஙகளிப்பாகும்.

மேலும், தொழில் சட்டங்கள், கட்டளைச்சட்டங்கள் மற்றும் சம்பளச் சபையின் முடிபுகள் என்பவற்றை திணைக்கள அலுவலர்களின் தேவைக்கேற்ப அச்சிடுதல் மற்றும் வழங்குதல், தொழில் அலுவலர்களின் களவேலைப் பாவனைக்குத் தேவையான பொது படிவங்களையும் அதே போல தொழில் அலவலர்களின் தொழில் பரிசோதனை அறிக்கைகள் மற்றும் மாதாந்தக் குறிப்பேடுகளை அச்சிடுதல் போன்ற பணிகள் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2.10.1.1. மாவட்ட/உபதொழில் அலுவலகங்களுக்கான மேற்பார்வை

இதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட முறையியலை 2020 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் பிரதானமாக பின்வரும் பிரிவுகளின் கீழ் மாவட்ட/உபதொழில் அலுவலகங்களின் முன்னேற்றம் மேற்பார்வை செய்யப்பட்டது.

01. தொழில் அலுவலர்களின் வெளிக்கள பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள்

02. நிலுவையாகவுள்ள ஊழியர் சேமலாப நிதியை அறவிடுவதற்கான செயன்முறை மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களை செலுத்துவதற்கான நடவடிக்கைகள்

03. திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற கைத்தொழில் பிணக்குகள் மற்றும் நியதிச்சட்ட உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகளை வினைத்திறன்மிக்க வகையில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள்

04. அலுவலகங்களின் நிர்வாக நடவடிக்கைகள்

அதன் பிரகாரம், மேற்படி பிரிவுகளின் கீழ் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக, 2020 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய இலக்குகள் தயாரிக்கப்பட்டதோடு அந்த இலக்குகளை அடைய வேண்டிய விதம் மற்றும் இலக்குகளை அடைய வேண்டிய காலப்பகுதி தொடர்பாக வலயங்களுக்குப் பொறுப்பான அனைத்து பிரதித் தொழில் ஆணையாளர்களும் அழைக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதேவேளை, தமது வலயத்தில் உள்ள அனைத்து மாவட்ட/ உப தொழில் அலுவலகங்களை உரிய இலக்குகளை நோக்கி வழிநடாத்துவதன் பொறுப்பு வலயங்களுக்குப் பொறுப்பான தொழில் ஆணையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.


2020 ஆம் ஆண்டின் இறுதியில் அடையப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு அமைகின்றது.

01. தொழில் அலுவலர்களின் வெளிக்கள பரிசோதனை நடவடிக்கைகள்

வெளிக்கள பரிசோதனை நடவடிக்கைகளைத் திட்டமிடுதல் மற்றும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல், அதற்காக நிறுவனங்களைத் தெரிவு செய்யும்போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்கள் உதவித் தொழில் ஆணையாளரினால் வழங்கப்படுதல், வெளிக்கள பரிசோதனைகளின் தரத்தினை வகைப்படுத்துதல், தொழில் அலுவலர்களினால் அறிக்கைகள் உரிய தினங்களில் பெற்றுக்கொடுக்கப்படுதல் மற்றும் குறிப்பிட்ட அறிக்கைகளின்

விதப்புரைகளை நடைமுறைப்படுத்தும் வினைத்திறனும் மேற்பார்வை செய்யப்பட்டதோடு அதன் முன்னேற்றம் பின்வருமாறு அமைகின்றது.


2016 தொடக்கம் 2019 வரையிலான கடந்த 4 வருட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை முறையாக அதிகரித்துள்ள போதிலும் 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக தொழில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது வருடத்தின் சில மாதங்களில் முழுமையாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை மற்றும் வரையறுக்கப்பட்டிருந்தமை காரணமாக 2020 ஆம் ஆண்டில் பரிசோதனைகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளை விடகுறைவடைந்துள்ளது..




வரைபடம் 2.6 - கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை (2020 ஆம் ஆண்டுக்காக தற்போது கிடைத்துள்ள முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் தகவல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன)

ஆயினும், தொழில் அலுவலர்களினால் வழங்கப்பட்டுள்ள பரிசோதனை அறிக்கைகளின் தரத்தினை பரிசோதிக்கும்போது, மேற்பார்வை முறையியல் ஆரம்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டின் அறிக்கைகளின் தரத்தில் கோடிட்டுக் காட்டும் அளவிலான முன்னேற்றம் காணப்படுகின்றது. அதன்படி உயர் தரத்திலான A மற்றும் B அறிக்கைகள் 2.8 வரைபடத்தின் பிரகாரம் 36% தொடக்கம் 79% வரை சாதகமாக வளர்ச்சியடைந்துள்ளது.

2018 தொடக்கம் 2020 வரையிலான ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தொழில் பரிசோதனைகளின் தரம் ஒப்பீட்டு ரீதியாக





வரைபடம் 2.7 - தொழில் பரிசோதனைகளின் தரம் - 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகள்(2020 ஆம் ஆண்டுக்காக தற்போது கிடைத்துள்ள முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் தகவல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன)

02. நிலுவை ஊழியர் சேமலாப நிதி அறவிடப்படுவதற்கான செயன்முறை மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்கள் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள்

நிலுவை ஊழியர் சேமலாப நிதியை அறவிட்டுக்கொள்வதற்காக அறிவித்தல்களை அனுப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள காலப்பகுதிகளை ஊழியர் சேமலாப நிதியத்தின் மேற்பார்வை முறைமையின் ஊடாக பெற்றுக்கொண்டு பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஒவ்வொரு அலுவலர் மற்றும் அலுவலக மட்டத்தில், தாமதங்களுக்கான காரணங்களை இனங்கண்டு, அவற்றை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேவேளை, நிலுவைகள் கணக்கிடப்பட்டுள்ள போதிலும் இதுவரை அறிவித்தல்கள் அனுப்பப்படாதமைக்கான காரணங்களை பரிசோதித்து குறிப்பிட்ட நிலுவைத் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அதேவேளை, அனுகூலங்களைச் செலுத்துவதற்காக பொறுப்பேற்கப்பட்டுள்ள கோப்புகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்காக எடுக்கப்பட்டுள்ள காலப்பகுதி மாதாந்தம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, துரிதமாக அனுகூலங்களைச் செலுத்த முடியாமற்போனமைக்கு காரணங்களை இனங்கண்டு, வினைத்திறன் மிக்க வகையில் அனுகூலங்களைச் செலுத்துவதற்கான நடவடிக்கைமுறையொன்றினை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.




வரைபடம் 2.8 - ஊழியர் சேமலாப நிதி அனுகூலங்களைச் செலுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள காலம் – 2017,2018,2019 மற்றும் 2020 ஆண்டுகள்

அதன்படி, 2017 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 07 நாட்களில் அனுகூலங்கள் செலுத்தப்பட்ட சதவீதம் 21% தொடக்கம் 47% வரை அதிகரித்துள்ளது. அதன்படி அனுகூலங்களைச் செலுத்துவதன் வினைத்திறன் அதிகரித்துள்ளது.

**04. மனுக்கள் பற்றிய நடவடிக்கைகள்**

அந்தந்த மாவட்ட மற்றும் உப அலுவலகங்களுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான செயன்முறை மற்றும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ள கடிதக் கோப்புகளின் எண்ணிக்கையை இனங்கண்டு அவை தொடர்பில் துரித நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஆலோசனைகளும் விதப்புரைகளும் வழங்கப்பட்டன.

அதேவேளை, அனைத்து மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக வலய மட்டத்தில் பிரதி தொழில் ஆணையாளர்களால் தமது வலய மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதேவேளை, பிரதேச தொழில் அலுவலகங்களுக்குப்

பொறுப்பான அலுவலர்களின் 2020 ஆம் ஆண்டின் முதலாவது முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் Slack நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்தி தொழில் ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் நடத்தப்பட்டது. அதேவேளை, கௌரவ அமைச்சரின் தலைமையில் கூட்டம் ஒன்றை நடத்தி திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.10.2. மனிதவள அபிவிருத்தி

திணைக்கள உத்தியோகத்தர்கள் தமது பணி தொடர்பாக கொண்டுள்ள அறிவு மற்றும் நடைமுறை ரீதியில் செயற்படுவதற்கு கொண்டுள்ள புரிந்துணர்வு என்பவற்றை மேம்படுத்தி திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களின் ஆற்றல் விருத்தி இன்றியமையாத ஒரு செயற்பாடாகும். அதன் பிரகாரம் திணைக்களத்தினால் பயிற்சி வழங்கப்படும்போது உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு அதன்படி உரிய பயிற்சியினை வழங்குவதன் மூலமும் வெளிக் கல்வி நிறுவனங்களினால் நடத்தப்படுகின்ற பாட நெறிகளில் பங்கேற்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குவதன் மூலமும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு ஆற்றுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றபோது அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் மற்றும் இணைப்பாக்கம் மேற்கொள்ளப்படுவதன் மூலம் இந்த பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது நிர்வாகச்சுற்றறிக்கை இல. 02 / 2018 இன் பிரகாரம் தீணைக்களத்திற்கான அடுத்துவரும் இரு வருடங்களுக்கான மனிததவள அபிவிருத்தி திட்டம் 2020 இல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஏன்பதுடன் இதன் பபிஅடுத்துவரும் இரு வருடங்களில் பயிற்சித் திட்டங்களை நடாததுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது

| தொ.இ. | நிகழ்ச்சித்திட்டம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் எண்ணிக்கை | பங்கேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | புததாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவைஅலுவலர்களுக்கான சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 02 | 97 |
| 2 | ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 02 | 68 |
| 3 | நடுத்தீர்ப்பாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு | 01 | 78 |
| 4 | சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அனுசரணையில் நடத்தப்பட்ட நிகழ்நிலைபயிற்சிச் செயலமர்வு | 02 | 40 |
| | மொத்தம் | **07** | **283** |

அட்டவணை 2.11 திணைக்களத்தினால் உத்தியோகத்தர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2020

| தொ.இ. | நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பட்டப்பின் படிப்பு | 12 |
| 2 | சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் | 10 |
| | மொத்தம் | **22** |

அட்டவணை 2.12 - வெளி பயிற்சி நிறுவனங்களில் பயிற்சிக்காக உத்தியோகத்தர்களுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்படுதல் - 2020

| செலவு த்தலைப்பு | 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள் (ரூ) | 2020.12.31 ஆம் திகதியில் செலவு(ரூ) | 2020.12.31 ஆம் திகதியில் நிலுவை (ரூ) | செலவானது நிதி ஏற்பாடுகளின் சதவீதமாக% |
|---|---|---|---|---|
| 221-01-01-2401 | 100,000.00 | 92,725.00 | 7,956.00 | 92.73% |
| 221-02-02-2401 | 200,000.00 | 200,000.00 | 0.00 | 100.00% |
| 221-02-03-2401 | 200,000.00 | 200,000.00 | 0.00 | 100.00% |
| 221-02-04-2401 | 500,000.00 | 492,394.00 | 7,606.00 | 98.48% |
| மொத்தம் | **1,000,000.00** | **985,119.00** | **15,562.00** | **98.51%** |

அட்டவணை 2.13 - ஆற்றல் விருத்தி செயற்பாடுகளுக்காக 2020.12.31 ஆம் திகதியில் மொத்த செலவினம் - 2020

### 2.11 புள்ளிவிவர நடவடிக்கைகள்

இலங்கையில் தொழில் துறையினை சரியாகப் புரிந்துகொள்வதற்கும், கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும், தற்போதுள்ள தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை திருத்துவதன் அவசியத்தை அடையாளம் காணவும், அந்தத் துறையின் எதிர்காலத்தை கணிக்கவும் தொழில் துறை தொடர்பான தரவுகளை சேகரித்து பகுப்பாய்வு செய்வது புள்ளிவிவர பிரிவின் பிரதான பணிகளாகும். இப்பிரிவு திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டு பிரிவின் தொழில் ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது.

அதன்படி, 2020ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.10.3.1 தொழில் புள்ளிவிவரங்கள் 2018 (வருடாந்த அறிக்கை) தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் வெளியீட்டுக் குழுவின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல்

2.10.3.2. தொழில் புள்ளிவிவரங்கள் 2019 (வருடாந்த அறிக்கை) அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்படுதல்

2.10.3.3. வேலை செய்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில் கிரயம் பற்றிய மீளாய்வு 2020 ஆம் ஆண்டுக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அட்டவணைகளை தபால் செய்து தகவல்களை ஒன்று திரட்டுதல்

2.10.3.4. தொழிலாளர் சஞ்சிகைக்குத் தேவையான தரவுகளை வழங்குதல்

2.10.3.5. ஊழியர் சேமலாப நிதியத்திற்கான புதிய பதிவு செய்தல்களை கணினி மயப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள தரவு முறைமையில் தரவுகளை பதிவேற்றல்.

2.10.3.6. சம்பளச் சபைகளின் பிரகாரம் உரிய காலப்பகுதிகளுக்காக மாதாந்த சம்பள சுட்டிகள் தயாரிக்கப்பட்டு அத்தகவல்கள் இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படுதல்.

2.10.3.7. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தர நியமங்களுக்கு உட்பட்டதாக இலங்கையின் தொழில் சந்தைக்கான பிரதான சுட்டிகள் (Key Indicators of Labour Market - KILM) 14 தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல்.

### 2.10.4. கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டம்

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஓர் அங்கத்துவ நாடாகிய இலங்கை அவ்வமைப்பின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மதிப்பளித்து ஐக்கிய நாடுகளின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய அடிப்படை சமவாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கடமை கொண்டுள்ளது. அதேவேளை, இலங்கை அரசாங்கம் கைத்தொழில் அமைதி மற்றும் தேசிய ஆக்கவிளைவு என்பவற்றை இந் நாட்டின் பொருளாதார சமூக மேம்பாட்டுக்கு இன்றியமையாத காரணிகளாகக் கருதுகின்றது. அதன் பிரகாரம் ஆரோக்கியமான தொழில் வாய்ப்புக்களை ஊக்குவித்து சுதந்திரம், நியாயம், பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் ஆகிய நிலைமைகளில் பயனுள்ள வகையில் வேலைகளைப் பெறுவதற்கும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்ணியமான/சீரிய பணி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான 04 தூண்கள்

i. வேலைவாய்ப்பு உருவாக்கம், மேம்பாடு மற்றும் தேசிய ஆக்க விளைவு
ii. வேலைத் தளத்தின் உரிமை
iii. சமூகப் பாதுகாப்பு
iv. சமூகக் கலந்துரையாடல்

கண்ணியமான/சீரிய பணி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு 1,500,000.00 ரூபாவிலான நிதி ஒதுக்கீடு திணைக்களத்திற்கு 2020 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டதோடு பின்வரும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| கருத்திட்டதை மேற்கொண்ட பிரிவு | தேறிய ஒதுக்கீடு (ரூ) | செலவு(ரூ) | செலவு வீதம் (%) |
|---|---|---|---|
| சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள ஒத்துழைப்பு அலகு | 700,000.00 | 529,305.80 | 75.62% |
| மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய பிரிவு | 500,000.00 * | 456,979.00 | 91.39% |
| முழு மொத்தம் | 1,200,000.00 | 986,284.80 | 65.75% |

அட்டவணை 2.14 கண்ணியமான/சீரிய பணி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் -2020

குறிப்பு - மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய பிரிவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 800,000.00 ரூபா நிதி ஒதுக்கீட்டில் 300,000.00 ரூபா ஒதுக்கீடு அமைச்சினால் மீண்டும் பெறப்பட்டுள்ளது.

### 2.12. சேவைகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

சேவைபெறுநர்களுக்கு வினைத்திறன் மிக்க சேவையை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் சேவைகளை வழங்குவதற்கான வசதிகளை முன்னேற்றுவது தொடர்பில் திணைக்களம் அதன் தீவிரமான கவனத்தை செலுத்தியுள்ளது. இன்றளவில் திணைக்களம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான மேற்பார்வை முறைமையை, மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கணனித் தரவு முறைமையுடன் இணைத்து செயற்படுத்தி வருகின்றது.

அதேவேளை, திணைக்களத்தின் உள்ளக தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக ஸ்லெக் செயலி (Slack Application) 2020 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதோடு அதன்மூலம் உள்ளக தொடர்பாடல் நடவடிக்கைகள் துரிதமாகவும் கடதாசி பாவனையை குறைத்தும் மேற்கொள்வதற்கு சாத்தியம் கிடைத்துள்ளதோடு உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பங்களில் அந்த நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொள்வதற்கும் இயலுமை கிடைத்துள்ளது.

இது தவிர பொதுமக்களுக்கு சேவைகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்கள், மாதிரிப் படிவங்கள் மற்றும் தொழில் கட்டளைச் சட்டங்கள், தொழில் தருநர்களால் கவனம் செலுத்தப்பட வேண்டிய சம்பள சபைகளின் முடிவுகள் போன்ற அவசியமான ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய வகையில் திணைக்களத்தின் வலைதளத்தில்

வெளியிடப்பட்டுள்ளதோடு அவற்றை நிதமும் இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன்படி, 2020 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் வலைதளம் ஊடாக வழங்கப்பட்டுள்ள சேவைகள் பின்வருமாறு அமைகின்றன.

| தொ. இ. | செயலி | சேவை | இலக்குக் குழு |
|---|---|---|---|
| 01 | திணைக்களத்தின் வலைதளம் | பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய வகையில் தகவல்களை வெளியிடுதல்<br>▪ அனைத்து மாதிரிப் படிவங்களும் (பாதுகாப்புச் சேவைகளுக்கான தடைநீக்கச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் போன்ற)<br>▪ புள்ளிவிபரத் தகவல்கள்(தொழில் புள்ளிவிபரங்கள், வருடாந்ததொழில்வாய்ப்பு மீளாய்வுகள், வருடாந்த அறிக்கைகள், கோவிட் 19 மீளாய்வு அறிக்கை – 2020 மே போன்றவை) | உள்ளக மற்றும் வெளிவாரி சேவை பயனர்கள் |
| 02 | திணைக்களத்தின் வலைதளம் | வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தகவல்களை இற்றைப்படுத்துதல்<br>• தலைமையகத்தில் உள்ள பிரிவுகளின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகள்<br>• அனைத்து தொழில் அலுவலகங்களுக்குமான அழைப்புத் தகவல்கள் | உள்ளக மற்றும் வெளிவாரி சேவை பயனர்கள் |
| 03 | திணைக்களத்தின் வலைதளம் | தகவல்களை வெளியிடுதல்<br>▪ ஊடக அறிவித்தல்கள்<br>▪ வெளிநாட்டு புலமைப்பரிசில்கள்<br>▪ விலை மனுக் கோரல்கள்<br>▪ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்<br>▪ ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகள்<br>▪ தொழில் சட்டங்கள் மற்றும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள்<br>▪ திணைக்கள சுற்றறிக்கைகள்<br>▪ திணைக்கள உத்தியோகத்தர்களின் மூப்புரிமைப் பட்டியல்<br>▪ செயல் முனைப்பான தொழிற்சங்க பதிவேடு<br>▪ கைத்தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதிகாரம் வாய்ந்த நபர்களாக பொதுவாக தொழிற்படும் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழைக் கொண்டுள்ள நபர்களின் பட்டியல் | உள்ளக மற்றும் வெளிவாரி சேவை பயனர்கள் |
| 04 | திணைக்களத்தின் வலைதளம் | பணியாட்தொகுதியின் அறிவித்தல்களை வெளியிடுதல்<br>• திறந்த மற்றும் வரையறுக்கப்பட்ட பரீட்சைத் தகவல்கள் மற்றும் பெறுபேறுகள்<br>• வினைத்திறன் காண் தடைதாண்டி பரீட்சைகள் பற்றிய அறிவித்தல்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள்<br>• இடமாற்றங்கள் பற்றிய தகவல்கள் | திணைக்கள உத்தியோகத்தர்கள் |
| 05 | திணைக்களத்தின் வலைதளம் | ஊழியர் சேமலாப நிதியத்திற்கான அனுகூலங்களைச் செலுத்துவதற்குரியதாக விண்ணப்பப் படிவங்களை கையளிப்பதற்காக இணையவழி முறையின் ஊடாக நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு வாய்ப்பளித்தல். | உள்ளக மற்றும் வெளிவாரி சேவை பயனர்கள் |
| 06 | திணைக்களத்தின் வலைதளம் | பெண்களை இரவுநேர சேவையில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை இணையவழி ஊடாக அனுப்புவதற்கு வாய்ப்பளித்தல் | உள்ளக மற்றும் வெளிவாரி சேவை பயனர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 07 | Slack பயன்பாடு | Covid-19 நிலைமையின் காரணமாக வீட்டிலிருந்து கடமை புரியும் போது திணைக்களத்தின் உள்ளக செய்தி பரிமாற்ற ஊடகமாக Slack செயலியை பயன்படுத்துதல் | திணைக்கள உத்தியோகத்தர்கள் |
| 08 | வீடியோ கருத்தரங்கு வசதி | Covid - 19 நிலைமையின் காரணமாக உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்து கடமை புரியும் போது தேவையான கலந்துரையாடல் நடவடிக்கைகளுக்கு வசதி வழங்குதல்(வருடத்தில் 15 வீடியோ கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன) | திணைக்கள உத்தியோகத்தர்கள் |
| 09 | திணைக்களத்தின் உத்தியோகபூர்வ YouTube அலைவரிசை | திணைக்களத்தில் உத்தியோகபூர்வ Youtube அலைவரிசையில் தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தொழில் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் தொடர்பாக, தொழில் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக, தேவையான ஆவணங்களை Download செய்வதற்கான Link, தேவையான ஆவணங்களை சரியாக பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள், தொழில் அமைச்சுடன் இணைந்ததாக நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணி தொடர்பாக விழிப்பூட்டப்படும் 18 வீடியோக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | உள்ளக மற்றும் வெளிவாரி சேவை பயனர்கள் |

**2.13 உள்ளகக் கணக்காய்வு**

ஏனைய அனைத்து அரச நிறுவனங்களைப் போலவே தொழில் திணைக்களமும் அதன் அனைத்து செயற்பாடுகளையும் நிதிப் பிரமாணங்கள், அரசாங்கத்தினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் மற்றும் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் பிரகாரம் முறையாக மேற்கொள்ளல் வேண்டும். அதன்படி இந் நடவடிக்கைகள் வளங்களின் உச்சப் பயன்பாட்டுடன் வெளிப்படைத் தன்மையுடனும் பாராட்டத்தக்க வகையிலும் இடம்பெறுகின்றனவா என்பதனை மேற்பார்வை செய்வது தொழில் ஆணையாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் இடம்பெறுகின்றது. அதன்படி 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வருடத்திற்குரியதாக தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின்படி மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் தலைமையகத்தின் பிரிவுகள் உள்வாங்கப்படும் வகையில் 07 கணக்காய்வு விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

அரசாங்க கணக்காய்வுப் பிரிவின் மூலம் திணைக்களத்தின் பல்வகைப்பட்ட அலுவலகங்களை பரிசோதித்து வெளியிடப்பட்டிருந்த 12 கணக்காய்வு விசாரணைகளுக்காக பதில்கள் வழங்கப்பட்டன.

வருடத்தில் காலாண்டு ரீதியிலான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் 03 நடத்தப்பட்டன.

**2.14 விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்**

**2.14.1. விசேட வெற்றிகள்**

உலக போக்குகளை கருத்திற்கொண்டு இலங்கையில் ஆரோக்கியமான பணிச் சூழலை உருவாக்குவதற்காக செயற்படுவது தொழில் திணைக்களத்தின் சமகால பொறுப்பாகும். அதன்படி, பாட்டாளி மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து நடைமுறையிலுள்ள சட்டங்கள், சட்ட விதிகள் என்பவற்றை இன்றைய பணிச் சூழலுக்கு உகந்த வகையில் திருத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கின்றது. அதன் பிரகாரம் திணைக்களத்தினால் 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பின்வரும் பணிகள் தனித்துவமிக்கவைகளாக அமைகின்றன.

I. தொழில் பரிசோதனை அறிக்கைகளுக்கான மாதிரி திருத்தப்படுதல்

தமது களப் பரிசோதனைக்கான விவரங்களை அறிக்கையிடுவதற்காக தொழில் அலுவலர்கள் இன்றளவில் பயன்படுத்துகின்ற தொழில் பரிசோதனை மாதிரியை எளிமைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு அது 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கள நடவடிக்கைகளின்போது பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கொள்கை வகுத்தல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முக்கியமாக அமைவதினால் இப்புதிய மாதிரியின் மூலம் நிறுவனம் தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

II. தொழில் சட்டங்கள் மீறப்படுவது தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்காக மாதிரிப் படிவமொன்று அறிமுகம் செய்யப்படுதல்

தொழில் சட்டங்கள் மீறப்படுவது தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு அது திணைக்களத்தின் வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

III. கைத்தொழில் பிணக்குகளைத் தீர்க்கும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கை முறை (Standard Operating Procedure) தயாரிக்கப்படுதல்

அனைத்துத் தொழில் அலுவலகங்களிலும் தொழில் பிணக்குகள் தீர்க்கப்படுதல் ஒருங்கிணைக்கப்படுதல் மற்றும் தீர்க்கப்படும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்காக தொழில் பிணக்குகளைத் தீர்க்கும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கை முறையொன்று தயாரிக்கப்பட்டதோடு அது 2021 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்படவுள்ளது.

IV. திணைக்களத்தின் வலைத்தளத்தின் ஊடாக ஊ.சே.நி. உரித்துக்கான விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டது.

தொழில் அலுவலகங்களுக்கு வருகை தராமல் திணைக்களத்தின் வலைத்தளத்தின் ஊடாக ஊ.சே.நி. உரித்துக்கான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது.

V. திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக மக்களுக்கு மத்தியில் அறிவினை மேம்படுத்துவதற்காக யூடியுப் அலைவரிசையொன்று ஆரம்பிக்கப்பட்டதோடு அது இடையறாது முன்னெடுத்துச் செல்லப்படும்.

திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக மக்களுக்கு மத்தியில் விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கு வீடியோ காட்சிகள் பல உள்ளடங்கிய யூடியூப் அலைவரிசை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

VI. மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்களை கடுமையாக மேற்பார்வை செய்தல்

அனைத்து மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்களுக்கு துல்லியமான காலப்பகுதியில் அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகள் வழங்கப்பட்டதோடு அவற்றின் முன்னேற்றம் இடையறாது மேற்பார்வை செய்யப்பட்டது. அதன் பெறுபேறாக,

- தொழில் பரிசோதனைகளின் தரத்தினை மேம்படுத்துதல்
- ஊ.சே.நி. நிலுவைத் தொகைகளை விணைத்திறன்மிக்க வகையில் கணிப்பீடு செய்தல்
- ஊ.சே.நி. உரித்துக்களை செலுத்துவதற்கான நாட்களின் எண்ணிக்கையின் சராசரி குறைவடைதல் இடம்பெற்றது.

VII. பின்வரும் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் கீழ் சட்ட ஆவணங்களைத் தயாரிப்பதற்கான தத்துவம் திணைக்களத்தின் வலய தொழில் அலுவலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டது.

- 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்

- 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல்(திருத்தச்) சட்டம்
- 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
- 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டம்
- 2016ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஊழியர்களின் தேசிய ஆகக்குறைந்த சம்பளச் சட்டம்
- 2016ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப் படிகள் சட்டம்

VIII. சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தக்கூடிய ஆகக்குறைந்த வயதினை 14 தொடக்கம் 16 வரை அதிகரிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை உள்ளடக்கிய வகையில் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு 5 சட்ட வரைபுகள் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளன.

IX. சர்வதேச தொழிலாளர் அமைப்புடனான ஒத்துழைப்புடன் "இலங்கையின் ஆரோக்கியமான சமூக பொருளாதார மீட்சி - ஐநாவின் பல்தரப்பு நம்பிக்கை பொறுப்பு நிதிய கருத்திட்டம்"(Healthy and Social Economic recovery of Sri Lanka - UN Multi partner Trust Fund Project) ஆரம்பிக்கப்பட்டது.

X. சர்வதேச தொழிலாளர் அமைப்புடனான ஒத்துழைப்புடன் இலங்கையின் சிறுவர் தொழிலாளர்களை இல்லாதொழிப்பதற்கான நோக்கத்துடன் "முகாமைத்துவம், விழிப்புணர்வு மற்றும் கொள்கை ஈடுபாடு கருத்திட்டம்" (Management, Awareness and Policy Engagement (MAP 16) project) முன்னெடுக்கப்பட்டது.

Xi. கோவிட் 19 தொற்றுநோய் காலப்பகுதியில் தொழில் அமைதியை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அ. கோவிட் 19 தொற்றுநோய் பரவியதன் காரணமாக சேவை முடிவுறுத்தப்படுதல் பற்றிய முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றை வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுள்ள வகையிலும் தீர்ப்பதற்காக பொறிமுறையொன்று நிறுவப்பட்டுள்ளது.

ஆ. இரவுநேர முறைமாற்று சேவைகளில் பெண்களை ஈடுப்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்படுதல் முறைசார்படுத்தப்பட்டதோடு இரவுநேர முறைமாற்று சேவைகளுக்கான தமது கோரிக்கைகளை இணையவழி மூலம் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தொழில் தருநர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன் மூலம் இரவு நேர சேவைகளுக்கு அனுமதி வழங்கும் முறையியல் மிகவும் வினைத்திறன் மிக்கதும் நெகிழ்ச்சியானதுமாக ஆக்கப்பட்டுள்ளது.

இ. எதுவித மிகைக் கட்டணமோ தாமதக் கட்டணமோ செலுத்தப்படாமல் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகைகளை செலுத்துவதற்காக தொழில்தருநர்களுக்கு ஆறு மாத கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஈ. ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள இரவு நேர அனுமதிகளை 2020 ஜுன் மாதம் இறுதிவரை நீடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கோவிட் 19 தொற்றுநோய் காணப்பட்ட காலப்பகுதியில் பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக காணப்பட்ட தடைகள் குறைக்கப்பட்டுள்ளன.

உ. கோவிட் 19 தொற்றுநோய் காணப்பட்ட காலப்பகுதியில் கர்ப்பிணித் தாய்மார்கள் அல்லது தாய்ப்பால் வழங்கும் பெண்களை சேவையில் ஈடுபடுத்தும் போது பின்பற்றவேண்டிய பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்கள் தனியார் துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதோடு கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையில் பொருளாதார ரீதியில் மிகவும் செயலூக்கம் அடைவதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

ஊ. இலங்கையின் தொழில் சந்தையின் மீதான கோவிட்- 19 தாக்கம் தொடர்பில் தனியார் துறை நிறுவனங்களில் இலத்திரனியல் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது.

எ. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டுக்காக ஆவணப்பட நிகழ்ச்சியொன்று தேசிய தொலைக்காட்சியின் வாயிலாக ஒளிபரப்பு செய்யப்படுதல்.

2020 ஏப்ரல் மற்றும் மே மாத காலப்பகுதியில் திணைக்களத்தினால் "கோவிட் - 19 மற்றும் அதற்கு அப்பால் - இலங்கையின் தொழில் சந்தையின் மீதான தாக்கம்" எனும் பெயரில் இலத்திரனியல் மீளாய்வொன்று நடத்தப்பட்டது. இந்த மீளாய்வின் நோக்கம் கோவிட் -19 காரணமாக பாதிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் தொடர்பாக தகவல்களை திரட்டுவது என்பதோடு அத்தகவல்கள் அரசாங்கத்தினால் பயனுள்ள, இலக்காகக் கொள்ளப்பட்ட மற்றும் சிறப்பாக திட்டமிடப்பட்ட கொள்கைகளுக்கு பதிலளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும். முறையான தனியார் துறையின் 2,764 நிறுவனங்கள் இலத்திரனியல் முறைகளைப் பயன்படுத்தி மீளாய்வுக்குப் பதிலளித்தன.

தொழில்தருநர்களின் நிதிச் சுமைக்கென சலுகை வழங்குவதற்கான மீளாய்வின் குறுகியகால பரிந்துரைகளை பின்வரும் வகையில் சாராம்சப்படுத்த முடியும்.

- வியாபாரங்களுக்கு மிகவும் குறைந்த வட்டிவீதத்திற்கு தொழிற்பாட்டு மூலதனத்தை வழங்குவதற்காக கடன் வழங்குவதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல்.

- தொழிற்சங்கங்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களின் அங்கீகாரத்துடன் எதிர்காலத்தில் "தொழிலின்றி இழக்கப்பட்ட சம்பளங்கள் செலுத்தப்பட்ட மணித்தியாலங்களில்" ஒரு பகுதியை மீண்டும் அறவிட்டுக் கொள்வதற்கு தொழில்தருநர்களுக்கு இடமளித்தல்.

- வேலை இல்லாமை/குறுகியகால தொழில் இன்மை உபாய மார்க்கங்களின் காரணமாக வீட்டில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டுள்ள நபர்களுக்காக குறைக்கப்பட்ட சம்பளத்துடன் தொழில் வாய்ப்புகளைத் தக்கவைத்துக் கொள்ளல். அதன்மூலம் அவர்களின் சேவையை முடிவுறுத்துவதற்குப் பதிலாக சம்பளத்தில் ஒரு சதவீதத்தை செலுத்துவதுடன் ஆறு மாத காலப்பகுதியில் சேவைக்கான முழுநேர பதவிகளுக்கு மீண்டும் வருகை தருவது உறுதிப்படுத்தப்படும். சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி இக்காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பன தொடர்ச்சியாக செலுத்தப்படும்.

- வியாபார வாய்ப்புகள் இழக்கப்படுதல்/சமூக இடைவெளியைப் பேணுவதன் தேவை காரணமாக ஒரு ஊழியர் குறைந்த மணித்தியாலங்கள் பணியாற்றுவாராயின் ஒவ்வொரு ஊழியரும் பணியாற்றும் மணித்தியாலங்களின் பிரகாரம் விகித அடிப்படையில் செலுத்தல்களை மேற்கொள்வதற்கு நிறுவனங்களுக்கு இடமளித்தல்

- தொழில் உறவுகள் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சட்டங்கள் அல்லது திருத்தங்கள்/சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக அவசியமான தகவல்களை/ அவதானிப்புகளை வழங்குதல்.

### 2.14.2. சவால்கள்

- கோவிட் 19 தொற்றுநோய் காலப்பகுதியில் அன்றாட அலுவலக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன. அதேவேளை, தொழில் பரிசோதனைகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான பரிசோதனைகளை தற்காலிகமாக வரையறுக்க வேண்டி ஏற்பட்டதோடு அது திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளின் மீதும் எதிர்மறையான தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

- திணைக்களம் கொண்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட நிதி மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி திணைக்களத்தின் நோக்கு அடையப்படுதல்.

- நடைமுறையில் உள்ள தொழில் சட்டங்களை, சடுதியாக மாற்றமடைந்து வரும் சமூகப் பொருளாதார சூழலுக்கு உகந்த வகையில் இற்றைப்படுத்துதல் மற்றும் சிக்கலான தன்மைகளை அகற்றி எளிமைப்படுத்துதல்.

- ஊழியர் சேமலாப நிதியத்தின் தழுவல் எல்லையை விரிவுபடுத்ததல்

- காலத்தின் தேவையாக அமைந்துள்ள தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான கலாச்சாரத்தினை (Occupational Safety and Health Culture) அனைத்து சேவை நிலையங்களிலும் உருவாக்குதல்.

- கோவிட் - 19 தொற்றுநோய் காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குதல்.

### 2.14.3. எதிர்கால இலக்குகள்

நடப்பு அரசாங்கத்தின் கொள்கைச் சட்டகமான “நாட்டைக் கட்டியெழுப்பும் சுபிட்சத்தின் நோக்கு” பிரகடனத்தில் காணப்படுகின்ற தொழில் திணைக்களத்திற்கான செயற்பாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தித் திட்டத்தில் காணப்படுகின்ற செயற்பாடுகளை யதார்த்தமாக ஆக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அடையப்பட வேண்டிய ஒரு பிரதான இலக்காகும். அதன்படி பின்வரும் செயற்பாடுகள் முதன்மையாகின்றன.

- திணைக்களத்தின் டிஜிட்டல்மயமாக்க நடவடிக்கைகள்

- பொதுமக்களுக்கு வசதியாக அமையக்கூடிய வகையில் தொழில் சட்டங்களை இலகுவான முறையில் தயாரித்தல்

- உரிய திருத்தங்களை உள்ளடக்கி தொழில் சட்டக் கோவையை (Labour Code) மீண்டும் தயாரித்தல்

- திணைக்களத்துக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கை முறையினை (Standard Operating Procedure) நடைமுறைப்படுத்துதல்

- தற்போது திணைக்களத்தினால் உள்ளக தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற மாதிரிப் படிவங்களையும் அறிக்கைகளையும் அத்தியாவசிய தகவல்களையும் வினைத்திறன்மிக்கதாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் திருத்துதல்.

- சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்களுக்காக தேவையானவாறு ஆதரவளித்தல்

- சிறுவர் தொழிலாளர்களை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

- திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கான முறையியலொன்றை (Incentive) உருவாக்குதல்

- திணைக்களத்தின் நற்பெயரை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- 2020 ஏப்ரல் மற்றும் மே மாத காலப்பகுதியில் தொழில் திணைக்களத்தினால் கோவிட் - 19 மற்றும் அதற்கு அப்பால் - இலங்கையின் தொழில் சந்தையின் மீதான தாக்கம்” எனும் பெயரில் மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல் மீளாய்வின் இரண்டாம் கட்டத்தினை மேற்கொள்ளுதல்.

# மூன்றாவது அத்தியாயம்

# 2020 டிசமப்ர் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான முழு நிதி செயல் திறன

## 3.1 அத்தியாயம் 2020ம் டிசம்பர் 31ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான முழு நிதி செயல் திறன் அறிக்கை

| வரவு செலவுத் திட்டம் 2020 | | உண்மை ரூ. 2020 | உண்மை ரூ. 2019 | |
|---|---|---|---|---|
| | **வருவாய் கிடைப்பவை** | | | |
| - | வருமான வரி | | | ACA-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி | | | ACA-1 |
| - | சர்வதேச வர்த்தக வரி | | | ACA-1 |
| - | வரி அல்லாத வருவாய் மற்றும் ஏனையவை | | | ACA-1 |
| - | மொத்த வருவாய் கிடைப்பவை (அ) | | | |
| | **வருவாய் அல்லாது கிடைப்பவை** | | | |
| - | திறைசேரி கட்டுநிதி | 2,030,323,025 | 2,389,348,000 | ACA-3 |
| - | வைப்பு | 1,873,175,455 | 2,484,111,832 | ACA-4 |
| - | முற்பண கணக்குகள் | 80,541,111 | 104,067,383 | ACA-5/5(A) |
| - | பிற வழிகளில் கிடைத்தவை | 845,788,211 | 730,944,376 | |
| - | மொத்த வருமானம் அல்லாது கிடைத்தவை (ஆ) | **4,829,827,803** | **5,708,471,591** | |
| - | மொத்த வருவாய் கிடைத்தவை மற்றும் வருவாய் அல்லாது கிடைத்தவை இ = (அ) + (ஆ) | **4,829,827,803** | **5,708,471,591** | |
| | குறைக்கப்பட்டது : செலவு | | | |
| | மீண்டுவரும் செலவுகள் | | | |
| 1,468,650,000 | சம்பளம் , படிகள் மற்றும் பிற பணியாளர் சலுகைகள் | 1,446,432,428 | 1,352,698,768 | ACA-2 (ii) |
| 558,550,025 | பிற பொருட்கள் மற்றும் சேவைகள் | 471,503,483 | 425,161,532 | ACA-2 (ii) |
| 2,382,320 | மானியங்கள் , மானியங்கள் மற்றும் இடமாற்றங்கள் | 2,382,316 | 2,087,515 | ACA-2 (ii) |
| 22,167,655 | வட்டி செலுத்துதல் | 20,705,058 | 21,802,449 | ACA-2 (ii) |
| - | பிற மீண்டுவரும் செலவுகள் | - | - | ACA-2 (ii) |
| **2,051,750,000** | **மொத்த மீண்டுவரும் செலவுகள் (ஈ)** | **1,941,023,284** | **1,801,750,264** | ACA-2 (ii) |
| | **மூலதனச் செலவு** | | | ACA-2 (ii) |
| 42,100,000 | மூலதனச் சொத்துக்கள் புனர்நிர்மான மேம்பாடுகள் | 37,054,504 | 41,965,155 | ACA-2 (ii) |
| 1,010,700,000 | மூலதனச்சொத்துக்களை கையகப்படுத்துதல் | 943,520,888 | 1,252,189,466 | ACA-2 (ii) |
| - | மூலதன மாற்றங்கள் | - | - | ACA-2 (ii) |
| - | நிதிச் சொத்துக்களை கையகப்படுத்துதல் | - | - | |
| 1,000,000 | திறன்மேம்பாடு | 985,119 | 8,432,242 | |
| - | பிற மூலதனச் செலவுகள் | - | 5,296,000 | |
| **1,053,800,000** | **மொத்த மூலதனச் செலவு (உ)** | **981,560,511** | **1,307,883,463** | |
| | **முக்கிய பேரேட்டுச் செலவு (ஊ)** | **1,889,676,410** | **2,579,784,812** | |
| | **வைப்புகள் கொடுப்பனவுகள்** | 1,803,429,515 | 2,470,142,804 | ACA-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | 86,246,895 | 109,642,008 | ACA-5/5 (A) |
| | **மொத்த செலவு எ = (இ + உ + ஊ)** | **4,812,260,205** | **5,689,418,539** | |
| | **31 டிசம்பர் 2020 நிலவரப்படி கட்டுநிதி இருப்பு ஏ = (இ- எ)** | **17,567,597** | **19,053,052** | |

### 3.2 நிதி நிலை அறிக்கை

2020.12.31 திகதிய
நிதிநிலைமை பற்றிய அறிக்கை

| | | உண்மை ரூ. | |
|---|---|---|---|
| | **Note** | **2020** | **2019** |
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து , உடமைகள் மற்றும் உபகரணங்கள் | ACA-6 | 17,049,392,907 | 16,106,635,234 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பண கணக்குகள் | ACA-5/5(A) | **253,610,987** | 247,920,953 |
| பணமும் பணத்துக்கு சமனானவையும் | ACA-3 | | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **17,303,003,894** | **16,354,556,187** |
| **நிகர சொத்துக்கள் / நிறை** | | - | - |
| நிகர சொத்துக்கள் | | (609,215,148) | (545,159,242) |
| சொத்து உடமைகள் மற்றும் உபகரணங்கள் குழாம் | | 17,049,392,907 | 16,106,635,234 |
| வாடகைக்கு மற்றும் வேலை முற்பண குழாம் | ACA-5(B) | - | - |
| **நடமாடும் பொறுப்புகள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ACA-4 | 862,826,135 | 793,080,195 |
| கட்டு-நிதி நிலுவை | ACA-3 | - | - |
| **முழுப் பொறுப்பு** | | **17,303,003,894** | **16,354,556,187** |

படிவங்கள் எண் 50 முதல் 51 வரை, ஏசிஏ 1 முதல் ஏசிஏ 6 வரையிலான கணக்கு விவரங்களும், பக்கம் 53 முதல் 54 வரையிலான குறிப்புகளும் இந்த இறுதிக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன. பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கண்ட இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள், தொடர்புடைய கணக்குகள் மற்றும் பிற கணக்குத் தகவல்கள் கருவூல கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளன என்பதையும் அவை அந்த புள்ளிவிவரங்களுடன் உடன்படுகின் றன என்பதையும் நாங்கள் இதன்மூலம் சான்றளிக்கிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர் :
பதவி :
திகதி : 2021.06.29

M P D U K Mapa Pathirana
Secretary
Ministry of Labour
7th Floor, "Mehewara Piyesa"
Narahenpita
Colombo - 05

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர் :
பதவி :
திகதி : 2021.06.29

B.K. Prabath Chandrakeerthi
(Attorney-at-Law)
Commissioner General of Labour
Department of Labour
Colombo 05.

பிரதான கணக்காளர்
பெயர்:
பதவி:
திகதி: 2021.06.29

P. Jeyabaskar
Chief Accountant
Department of Labour
Colombo - 05.

## 3.3 காசுப்பாய்ச்சல் அறிக்கை

31.12.2020 தேதியிட்ட கடைசி ஆண்டிற்கு
காசுப்பாய்ச்சல ் அறிக்கை

ACA-C

| | உண்மை ரூ. | |
|---|---|---|
| | **2020** | **2019** |
| **செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்படும் பணப்புழக்கங்கள்** | | |
| மொத்த வரி கிடைப்பவை | | - |
| கட்டணம் , கூடுதல் கட்டணம் , அபராதம் மற்றும் அனுமதிப் பத்திரம் | | - |
| இலாபம் | | - |
| வருவாய் அல்லாது கிடைப்பவை | 854,602,392 | - |
| பிற துறைகள் / அமைச்சகங்களால் வசூலிக்கப்படும் வருவாய் | - | 731,044,647 |
| கட்டுநிதி கிடைப்பவை | 2,030,298,025 | 2,389,348,000 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்படும் பணப்புழக்கம் (அ)** | **2,884,900,417** | **3,120,392,647** |
| **குறைக்கப்பட்டது : பணச்செலவு செய்தல்** | | |
| தனிப்பட்ட சம்பளம் மற்றும் நடைமுறைச் செலவுகள் | 1,916,265,110 | 1,798,873,369 |
| மானியங்கள் மற்றும் இடமாற்றங்கள் | 23,087,373 | |
| ஏனைய செலவு உப தலைப்புகளுக்காக ஏற்படும் செலவு | 39,640,977 | 28,274,332 |
| திரைசேரிக்கு நிரப்பும் கட்டுப்பணம் | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்ட பணப்புழக்கம் ( ஆ )** | **1,978,993,460** | **1,827,147,701** |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்படும் நிகர பணப்புழக்கம் ( இ ) = ( அ ) – ( ஆ )** | **905,906,957** | **1,293,244,946** |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான பணப்புழக்கம் | | |
| வட்டி | | - |
| இலாபம் | | - |
| உரிமையை நீக்கும் ஒதுக்கீடு மற்றும் பௌதீகச் சொத்துக்களின் விற்பனை | | - |
| சிறுகடன் அறவீடு செய்தல் | | - |
| முற்பணம் அறவீடு செய்தல் | 93,616,498 | 111,321,342 |
| முதலீட்டு செயற்பாடுகளுக்கான பணப்புழக்கம் (ஈ) | **93,616,498** | **111,321,342** |
| **குறைக்கப்பட்டது: பணம் செலவு செய்தல்** | | |
| பௌதீக சொத்துக்கள் கட்டுமாணம் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் வேறு முதலீடுகளை கையகப்படுத்தல்(உ) | 981,560,511 | 1,307,883,464 |
| முற்பணக் கொடுப்பனவு | 87,708,884 | 110,651,852 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்ட முழு பணப்புழக்கம் (உ) | **1,069,269,395** | **1,418,535,316** |

| | | |
|---|---|---|
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான நிகர பணப்புழக்கம் (ஊ = இ - ஈ) | **(975,652,897)** | **(1,307,213,974)** |
| நடைமுறை மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான நிகர பணப்புழக்கம் (எ = இ - ஊ) | **(69,745,940)** | **(13,969,028)** |
| **நிதிச் செயற்பாடுகளின் மூலம் உள்ள பணப்புழக்கம்** | | |
| உள்ளுர் கடன் பெறுகை | | - |
| வெளிநாட்டு கடன் பெறுகை | | - |
| அன்பளிப்புகளால் கிடைப்பவை | | - |
| வைப்புகளால் கிடைப்பவை | 1,873,175,788 | 2,484,093,602 |
| **நிதிச் செயற்பாடுகளின் மூலம் உள்ள பணப்புழக்கம் (ஏ)** | **1,873,175,788** | **2,484,093,602** |
| **குறைக்கப்பட்டது: பணம் செலவு செய்தல்** | | |
| உள்ளுர் கடன் மீளக் கொடுப்பனவு | | - |
| வெளிநாட்டு கடன் மீளக் கொடுப்பனவு | | - |
| வைப்பு கொடுப்பனவு | 1,803,429,848 | 2,470,124,574 |
| **நிதிச் செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்ட மொத்த பணப்புழக்கம் (ஐ)** | **1,803,429,848** | **2,470,124,574** |
| **நிதிச் செயற்பாடுகளின் மூலம் உள்ள பணப்புழக்கம் (ஏ - ஐ)** | **69,745,940** | **13,969,028** |
| **நிதியின் நிகர மாற்றம் (ஒள = எ + ஏ)** | | - |
| **ஜனவரி 01 ம் திகதியில் ஆரம்ப நிதி இருப்பு** | | - |
| **நிதி டிசம்பர் 31 ம் திகதயில் முடிவடைந்த நிதி இருப்பு** | | - |

## 3. 4 நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

1) **அறிக்கை காலம்**

2020 ஜனவரி 01ம் திகதியிலிருந்து 31 டிசம்பர் வரையுள்ள காலப் பகுதி இந்த நிதிநிலைஅறிக்கைகளுக்கு அறிக்கை காலம் ஆகும்.

2) **தயாரிப்பின் அடிப்படை**

நிதி அறிக்கைகள் வரலாற்று செலவில் தயாரிக்கப்படுகின்றன மற்றும் சில சொத்துக்களின் வரலாற்று செலவு மறு மதிப்பிடப்பட்ட மதிப்புக்கு மேம்படுத்தப்படுகிறது . வேறுவிதமாகக் கூறப்படாதபோது கணக்கு தயாரித்தல் மேம்பட்ட பண அடிப்படையில் செய்யப்படுகிறது.

நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாய்க்கு மிக நெருக்கமான ரூபாயில் வழங்கப்படுகின்றன.

3) **வருவாய் அடையாளம்**

மாற்றக் கூடிய அல்லாத மாற்றத்தக்க வருமானம் இதில் பணம் பெறப்படும் காலத்தில் வருமானம் கருதப்படுகிறது , பொருட்படுத்தாமல் காலம் இது அதை காரணமாக இருக்கிறது.

4) **சொத்து , உடமை மற்றும் உபகரணங்களை அடையாளம் கண்டு அளவிடவும்**

சொத்துக்கள் தொடர்பான எதிர்கால பொருளாதார நன்மைகளை நிறுவனம் பெறும் என்றும், அந்த சொத்துக்களை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியுமென்றால் , சொத்துக்கள் , தாவரங்கள் மற்றும் உபகரணங்கள் என சொத்துக்கள் அடையாளம் காணப்படுகின்றன.

சொத்து , உடமை மற்றும் உபகரண செலவுகள் அடையாளம் காணப்பட்டு செலவு மாதிரி பொருந்தாதபோது மறு மதிப்பீடு செய்யப்படுகின்றன.

5) **சொத்து , உடமை மற்றும் உபகரணங்கள் குழாம்**

இருப்பு கணக்கு என்பது சொத்து , உடமை மற்றும் உபகரணங்களின் தொடர்புடைய கணக்கு

6) **பணமும் பணத்திற்கு சமமானவையும்**

31 டிசம்பர் 2020 நிலவரப்படி உள்ளூர் நாணயத்தாள்கள் மற்றும் கையில் உள்ள பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை.

## 3.5 வருவாய் வசூல் செய்யும் செயற்றிறன்

| வருமான குறியீடு | வருவாய் குறியீட்டின் விபரம் | வருவாய் மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை(ரூ) | இறுதி வருவாய் மதிப்பீடு % |
| பொருந்தாது | | | | | |

## 3. 6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் பயன்பாட்டு செயற்றிறன்

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் தொகை % |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டுவரும் | 2,051,750,000 | 2,051,750,000 | 1,941,023,284 | 95% |
| மூலதனம் | 1,053,800,000 | 1,053,800,000 | 981,560,511 | 93% |

## 3.7 நி.பி 208 விதிமுறைகள், பிற அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதிகளால் இந்த திணைக்களத்திறகு வழங்கப்பட்ட ஒதுக்கீடு.

| தொடர். இல. | அமைச்சு \|திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ஒதுக்கீடு | | ஒதுக்கீட்டுக்கான நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டில் முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுத் தொகை % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆரம்பம் | இறுதி | | |
| 01 | தேர்தல் ஆணைக்குழு | 020-1-1-0-1409 | தேர்தல் கடமைகளுக்கான கொடுப்பனவுச் செலவுகள் | 493,515.00 | 493,515.00 | 493,515.00 | 100% |
| 02 | தேர்தல் ஆணைக்குழு | 020-1-1-4-1409 | தேர்தல் கடமைகளுக்கான கொடுப்பனவுச் செலவுகள | 3,444,564.00 | 10,272,787.00 | 10,272,787.00 | 100% |
| 03 | தொழில் அமைச்சு | 054-1-1-0-1403 | அமைச்சின் மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களுக்கான கொடுப்பனவு | 250,000.00 | 250,000.00 | 250,000.00 | 100% |
| 04 | தொழில் அமைச்சு | 054-1-2-0-1403 | அமைச்சின் மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களுக்கான கொடுப்பனவு | 963,467.00 | 963,467.00 | 963,467.00 | 100% |
| 05 | தொழில் அமைச்சு | 054-1-2-2-2509 | செம்மையான வேலை நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவுகள் | 38,600.00 | 1,416,170.00 | 324,344.00 | 23% |
| 06 | தேசிய கொள்கைகள்,பொருளாதார விவகாரங்கள்,மீள் குடியேற்றம் மற்றும புணர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு | 104-1-2-0-1003 | பட்டதாரிப் பயிற்சி உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு செலுத்துதல | 940,000.00 | 8,140,000.00 | 7,200,669.28 | 88% |
| 07 | பொதுச் சேவைகள்,மாகாணசபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச் | 130-1-14-0-1003 | பட்டதாரிப் பயிற்சி உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு செலுத்துதல | 3,600,000.00 | 3,600,000.00 | 3,465,096.73 | 96% |
| 08 | தொழில் அமைச்சு | 193-1-1-0-1403 | அமைச்சின் மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களுக்கான கொடுப்பனவு | 492,353.72 | 492,353.72 | 492,353.72 | 100% |
| 09 | தொழில் அமைச்சு | 193-1-1-0-1409 | மெஹவரபியெச வசதி முகாமைத்துவ கட்டணம் | 1,571,489.97 | 1,571,489.97 | 1,571,489.97 | 100% |
| 10 | தொழில் அமைச்சு | 193-1-2-0-1403 | அமைச்சின் மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களுக்கான கொடுப்பனவு | 8,932,195.29 | 8,932,195.29 | 8,932,195.29 | 100% |
| 12 | ஓய்ூதியங்கள் திணைக்களம | 253-1-2-4-1502 | இளைப்பாறிய அலுவலர்களின் கடன் நிலுவைகள் | 140,319.35 | 5,023,518.52 | 5,023,518.52 | 100% |

## 3.8.நிதி அல்லாத சொத்துகள் அறிக்கை செய்யும் செயற்றிறன்

| சொத்து குறியீடு | குறியீடு விபரம் | 31.12.2020 திகதியிட்ட பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி இருப்பு | 31.12.2020 நிதி தர அறிக்கையின் படி இருப்பு | எதிர்காலத்தில் கணக்கிடப்பட வேண்டியது | முன்னேற்றத்தை % என குறித்தல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிட கட்டமைப்புகள் | 1,387,088,800.00 | 1,387,088,800.00 | | 100% |
| 9152 | இயந்திரங்கள் | 617,880,905.30 | 617,880,905.30 | | 100% |
| 9153 | காணிகள் | 2,262,720,000.00 | 2,262,720,000.00 | | 100% |
| 9154 | புலனாகத சொத்துகளை | - | - | | - |
| 9155 | உயிரியல் பண்புகள் | - | - | | - |
| 9160 | செய்து கொண்டுக்கும் வேலை | 12,781,703,198.91 | 12,781,703,198.91 | | 100% |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | - | - | | - |

## 3.9. கணக்காய்வாளரின் அறிக்கை

2021 யூலை 27

எனது இலக்கம் : எல்ஈடப்ளியூ/ஏ/டீஓஎல்/2/2020/7

தொழில் ஆணையாளர் நாயகம்
தொழில் திணைக்களம்

**தொழில் திணைக்களத்தின் 2020 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சுருக்க அறிக்கை**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தொழில் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தொழில் திணைக்களத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழி செய்யப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியேகத்தரினதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த முறைமையின் செயற்திறன் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து, அதற்கமைய முறைமையினை பயனுள்ளதாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக உள்ள போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளதென்பதற்கான உறுதிப்படுத்தலல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக் கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படாதபோதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதல் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியிருப்பதும் வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுககளின் ஒட்டுமொத்த சமர்ப்பணமும் மதிப்பிடப்பட்டது.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1. நிதிச் செயலாற்றல் கூற்று

#### 1.6.1.1 வைப்பு வரவுகள் மற்றும் செலுத்தல்கள்

தொழில் திணைக்களத்தினால் 2020 டிசம்பர் 31ஆம் திகதியில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பொது வைப்புக் கணக்குகள் 02 இன் மீதிகளின் மொத்தம் 862,826,135 ரூபாவாக அமைந்திருந்தது. அதில் 267,767,361 ரூபா 2 -5 வருடங்களுக்கு இடையிலும், 104,571,143 ரூபா 5 - 8 வருடங்களுக்கு இடையிலும், 33,035,976 ரூபா 8 -10 வருடங்களுக்கு இடையிலுமான கால வீச்சுக்களில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் காலங்கடந்த வைப்புகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி.571(2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

#### 1.6.1.2 முற்பணக் கணக்கு

2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் திறைசேரிக் கூற்று மற்றும் நிதி செயலாற்றல் கூற்று ஒப்பிடப்படும்போது நிதி செயலாற்றல் கூற்றில் முற்பண வரவு 857,773 ரூபா குறைவாகவும் முற்பண செலுத்தல் 693,030 ரூபா குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.

#### 1.6.2 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

கட்டு நிதி சீராக்கல் கணக்கில் கழித்தல்களின் கீழ் காட்டப்பட்டிருந்த முற்பண "பீ" கணக்கின் வேறுபாடு 11,592,029 ரூபாவாக அமைந்துள்ள போதிலும் சரியாக நிலுவைகள் சீராக்கப்பட்டதன் பின்னர் அந்த வேறுபாடு 11,448,604 ரூபாவாக அமைந்ததால் 143,425 ரூபா அதிகமாக சீராக்கல் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 1.6.3 நிதிநிலை பற்றிய கூற்று

2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் திறைசேரிக் கூற்றின் பிரகாரம் முற்பணக் கணக்கின் மீதி 253,446,194 ரூபாவாக காணப்பட்ட போதிலும் நிதிநிலை பற்றிய கூற்றில் நிதிச் சொத்துக்களின் கீழ் அது 253,610,987 ரூபாவாக 164,793 ரூபா அதிகமாக காட்டப்பட்டிருந்தது. மேலும், அந்த மீதி நிதிநிலை பற்றிய கூற்றில் தேறிய சொத்துக்களின் கணிப்பீட்டின் போது கருத்திற் கொள்ளப்பட்டமையினால் தேறிய சொத்துக்களின் பெறுமதி 164,793 ரூபாவினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

#### 1.6.3.1 நிதி அல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிதி அல்லாத சொத்துக்கள் பற்றிய கூற்றில் (ஏ சிஏ 6) காட்டப்பட்டுள்ள வகையில் வருடத்தில் கொள்வனவுகள் மூலம் கைப்பற்றிக் கொள்ளப்பட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி 943,495,888 ரூபாவாக அமைந்திருந்தது. ஆயினும், நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் சாராம்சப் படுத்தப்பட்ட செலவினக் கூற்றுக்களின் (ஏசிஏ2(i)) பிரகாரம் அச் செலவினம் 943,520,888 ரூபாவாகும். அதன்படி(ஏசிஏ2(i)) கூற்றினை அடிப்படையாகக்கொண்ட நிதிநிலை கூற்றிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி 25,000 ரூபாவினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2020 டிசம்பர் 31ஆம் திகதியில் திணைக்களத்தின் ஐந்தொகையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் செலவுத் தலைப்பு இலக்கம் 221-1-2-2104 மற்றும் 221-2-4-2104 மெஹெவர பியச அலுவலக கட்டிடத் தொகுதி கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் 221-1-1-2104, கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுக்கான செலவினம் 940,730,168 ரூபாவாக அமைந்தது. ஆயினும், நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்த குறிப்பிட்ட பெறுமதி 931,870,210 ரூபாவாக

அமைந்திருந்தது. அதன் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்கள் பற்றிய கூற்றில் பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் பெறுமதி 8,859,958 ரூபா குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(இ) 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஐந்தொகையின் பிரகாரம் வருடத்தில் செலவுத் தலைப்பு இலக்கம் 221-1-1-2103 மற்றும் 221-2-3-2103 இன் கீழ் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கைப்பற்றிக் கொள்ளல்களின் பெறுமதி 1,296,347 ரூபாவாக அமைந்தது. ஆயினும், நிதி அல்லாத சொத்துக்கள் பற்றிய கூற்றில் வருடத்தில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கைப்பற்றிக் கொள்வதற்கான பெறுமதி 9,936,879 ரூபாவாக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்த செலவினை விட 8,640,532 ரூபா அதிகமாக இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கைப்பற்றிக்கொள்ளல்களாக நிதி அல்லாத சொத்துக்கள் பற்றிய கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

**1.6.4 நிதிப்பாய்ச்சல் கூற்று**

**1.6.4.1 வருமானம் அல்லாத வரவுகள்**

2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் ஐந்தொகையின் பிரகாரம் வருமானம் அல்லாத வரவுகளின் மொத்தம் 845,791,843 ரூபாவாக அமைந்த போதிலும் நிதிப்பாய்ச்சல் கூற்றின்படி வருடத்தில் கிடைத்த வருமானம் அல்லாத வரவுகள் 854,602,392 ரூபாவாக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக வருமானம் அல்லாத வரவுகளின் பெறுமதி 8,810,549 ரூபாவினால் அதிகமாக நிதிப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

கடந்த வருடத்தின் இறுதியில் திறைசேரிக்கு செலுத்தித் தீர்க்கப்பட வேண்டியிருந்த 8,810,549ரூபா நிலுவையை தீர்ப்பதற்காக தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பட்டிருந்த பணத்தை, பொது வைப்புக் கணக்கின் மூலம் தீர்க்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் இதர வருமான வரவுகளின் கீழ் காட்டப்பட்டிருத்தல் இதற்குக் காரணமாக அமைந்திருப்பது அவதானிக்கப்பட்டது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

**2.1.1 செலவினத் தலைப்புகளின் மீதிகள்**

(அ) மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவின தலைப்புகள் 20கான தேறிய ஒதுக்கீட்டுத் தொகையாகிய 43,200,000 ரூபாயிலிருந்து 16,274,745 ரூபா மீதப்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய பகுதி தேறிய ஒதுக்கீட்டுத் தொகையில் நூற்றுக்கு 37.6 ஆக அமைந்ததோடு அது ஒவ்வொரு செலவு தலைப்புக்களுக்கான ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 22 தொடக்கம் நூற்றுக்கு 100 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் மூலதன செலவினத் தலைப்புகள் 5கான தேறிய ஒதுக்கீட்டுத் தொகையாகிய 12,050,000 ரூபாயிலிருந்து 3,940,647ரூபா மீதப்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய பகுதி தேறிய ஒதுக்கீட்டுத் தொகையில் நூற்றுக்கு 32 ஆக அமைந்ததோடு அது ஒவ்வொரு செலவு தலைப்புக்களுக்கான ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 25 தொடக்கம் நூற்றுக்கு 67 வரையான வீச்சில் காணப்பட்டது.

**2.1.2 செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதின் குறைபாடுகள்**

செலவினத் தலைப்பு இலக்கம் 221-2-4-1-1404 வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வாடகைக்கான தேறிய ஒதுக்கீடு 65,300,000 ரூபா என்றபோதிலும் வருடத்தில் நூற்றுக்கு 49 வீதம் மட்டும் அதாவது 31,990,490 ரூபா மட்டும் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீதியாக 51 வீதம் அதாவது 33,269,461 ரூபா இருந்தது. இதன்படி மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி.50 இன் பிரகாரம் சரியான எதிர்வுகூறல் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் எட்டப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் திறைசேரிக் கூற்றில் (SA-92) உள்ளடக்கப்பட்டிருந்த 83,004,986 ரூபாவிலான பொறுப்புகள் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2,969,199 ரூபாவிலான பொறுப்புகள், கணக்குக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் திறைசேரிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த, செலவுத் தலைப்பிலக்கம் 221-1-1-0-1201 மற்றும் 221-1-1-0-1202 இன் கீழ் காட்டப்பட்டிருந்த 61,954 ரூபாவிலான பொறுப்புகள், பொறுப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தலைப்பு - 221 தொழில் திணைக்களத்தின் (கருத்திட்டம் 04) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 டிசம்பர் 31ஆம் திகதியில் 6 செலவுத் தலைப்புகளுக்கான பொறுப்புக்களின் பெறுமதி 2,368,236 ரூபாவாக காணப்பட்ட போதிலும் 2021 மார்ச் 31ஆம் திகதி வரை செலவுப் பேரேட்டினைப் பரிசோதிக்கும்போது கடந்த வருடத்திற்கான பொறுப்புகள் சார்பாக 2,967,746 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 மார்ச் 31 ஆம் திகதி வரை கடந்த வருடத்திற்கான பொறுப்புகள் சார்பாக 643,485 ரூபா அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(உ) ஊழியர் சேமலாப நிதியத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடுகையில் செலவுத் தலைப்பிலக்கம் 221-2-4-1-1301, 221-2-4-1-1404 மற்றும் 221-2-2-4-1-1409 இன் கீழ் காட்டப்பட வேண்டிய 6,637,421ரூபாவிான பொறுப்புகள் கணக்குக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய அரசாங்கக் கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 255/2017இன் 5 ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அல்லது வேலை ஒப்பந்தங்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் வெளித்தரப்புக்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகள் தொடர்பான ஒப்பந்தங்களின் பெறுமதி கடப்பாடுகளாக பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், தொழில் திணைக்களத்தினால் 2013ஆம் ஆண்டில் மெஹெவர பியச கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்திற்கு அமைவான கடப்பாடு 2021 ஆம் ஆண்டிலும் முடிவடையவில்லை. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் எஞ்சியிருந்த கடப்பாடுகளின் நிலுவை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

மேலும், 2020 ஆம் ஆண்டில் மெஹெவர பியச அலுவலக கட்டிடத் தொகுதி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவுத் தலைப்பு இலக்கம் 221-1-1-2104 இன் கீழ் 704,900,000 ரூபாவிலான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் 66,598,182 ரூபா எஞ்சியிருந்தது. அவ்வாறு எஞ்சியிருப்பதற்கான காரணம் இறுதிப் பட்டியல் செலுத்தல்களுக்கு முன்வைக்கப்படாதமையே எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் செலுத்தப்படவுள்ள பொறுப்புகள் தொடர்பாக பொறுப்புகள் பற்றிய கூற்றில் குறிப்பு ஒன்றை இடுவதன் மூலமேனும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை

**2.3 கணக்கீட்டு அலுவலரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்துதல்கள்**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு அலுவலரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள போதிலும், அதற்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) தொழில் திணைக்களம் நிதி நிர்வாகத்திற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணி வருவதாக பிரதான கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதன்படி முறைமையை பயனுள்ள வகையில் முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், மேற்படி மீளாய்வுகளை எழுத்தின் வாயிலாக மேற்கொண்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற போதிலும் அத்தகைய மீளாய்வு செய்யப்பட்டமை தொடர்பிலான கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. தொழிற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள்**

(அ) 2020 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தின் முன்னேற்றம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் மீளாய்வு செய்யப்படவில்லை என்பதோடு வருடத்தில் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பணிகளை நிறைவேற்றுவதற்காக 20,618,992 ரூபா செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2020 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டத்தின் மூலம் 450,000 ரூபா செலவிடப்பட்டு 30 நாற்காலிகள் மட்டும் கொள்வனவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வருடத்தில் 786 நாற்காலிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2021 ஜுன் 30 ஆம் திகதி வரை அதில் 494 நாற்காலிகள் பயன்பாட்டுக்கு எடுக்கப்படவில்லை.

மேலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நாற்காலிகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத 354,000 ரூபா பெறுமதியான நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான நாற்காலிகள்(Executive high back chair)20 கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.1.1. ஒப்பந்த பரிசோதனை**

(அ) மெஹெவர பியச கட்டிடத்தின் 12வது மாடியிலிருந்து 16வது மாடி வரை அலுவலக பிரிப்புக் கூறுகளை பொருத்துவதற்காக 135,3000,000 ரூபாவான செலவின மதிப்பீடு அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு இப்பணியினை மேற்கொள்வதற்காக பொருத்தமான நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்கு பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் விவரக்குறிப்பீடுகள் தயாரிக்கப்படுதல், விலைமனுக் கோரல் மற்றும் தொழில்நுட்பக் குழுவின் விதப்புரைகள் பெற்றுக்கொள்ளப்படாமல் பெறுகைக் குழுவினால் கட்டிடத் திணைக்களம் தயாரித்த மதிப்பீட்டுத் தொகை மீது அத்திணைக்களத்திற்கே ஒப்பந்தப் பணியினை நிறைவேற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

மேலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4(i) பந்தியின் பிரகாரம் ஒப்பந்தம் ஒன்றுக்காக முற்பணமாக மொத்தப் பெறுமதியில் நூற்றுக்கு 20 வீதம் மட்டுமே செலுத்த முடியும் என்றபோதிலும் அதற்கு முரணாக மொத்த மதிப்பீட்டுக் கிரயமாகிய 135,300,000 ரூபா முழுமையாக கட்டிடத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 மார்ச் மாதத்தில் ஒப்பந்தத்தின் கீழ் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏதேனும் பணி நிறைவேற்றப்படும் போது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து ஒரு தொகை முற்பணமாக வழங்கப்படுதல் அல்லது நிறைவேற்றப்பட்ட வேலை பகுதிக்காக செலுத்தப்படுதல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றபோதிலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் கட்டிடத் திணைக்களத்திற்கு மொத்த மதிப்பீட்டு கிரயமும் செலுத்தப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை 08 கட்டுமானப் பணிகளுக்காக பணிகளின் ஆரம்பத்தில் மொத்த மதிப்பீட்டு கிரயம் 120,239,994 ரூபா வழங்கப்பட்டிருந்தது.

(இ) கட்டிட திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் 2020 டிசம்பர் 23 ஆம் திகதி முன்வைத்துள்ள தகவல்களின் பிரகாரம் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் 2021 மார்ச் 31 ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தொழில் திணைக்களத்தில் கட்டுமானப் பணிகள் மற்றும் திருத்தப் பணிகள் 25காக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கட்டிடத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ள தொகை 320,106,499 ரூபாவாகும். 2021 மார்ச் 31 ஆம் திகதி அளவில் குறிப்பிட்ட பணிகளின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 90 வீதத்திற்கும் நூற்றுக்கு 100 வீதத்திற்கும் இடைப்பட்டதாக காணப்பட்டதோடு வழங்கப்பட்டிருந்த பணத் தொகையில் 41,519,249 ரூபா அதாவது நூற்றுக்கு 13 வீதம் எஞ்சியிருந்தது. குறிப்பிட்ட எஞ்சிய பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.2** ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

(அ) சியெரா ஜாயின்ட் வெஞ்சர் (Sierra joint venture pvt.Ltd) நிறுவனத்துடன் 2013 அக்டோபர் 3 ஆம் திகதி ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மெஹெவர பியச கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் 36 மாதங்களில் பூர்த்தி செய்யப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் 2019 ஜுன் 26 ஆம் திகதிய அவி/19/1638/ 101/046-1 இலக்கமுடைய அமைச்சவை தீர்மானத்தின் மூலம் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு உட்பட்ட வகையில் 2019 ஜுன் 30 ஆம் திகதி வரை காலத்தை நீடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆயினும், 2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதோடு ஒப்பந்தத்தின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 7,891 மில்லியன் ரூபாவாகிய மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் நூற்றுக்கு 39.3 அதாவது 3,099,921,236 ரூபா ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் இருந்து விடுபட்ட (Omissions) வேலைகள் என்பதோடு

நூற்றுக்கு 39.6 அதாவது 3,136,654,194 ரூபா சேர்க்கப்பட்ட மேலதிக (Additions) வேலைகளாக 46 வது செலுத்தல் சான்றிதழிலில் (payment certificate) உள்ளடக்கப்பட்டு இருந்தது. அதன்படி ஒப்பந்தம் கையளிக்கப்படும் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆரம்ப மதிப்பீடு நூற்றுக்கு 40 வீதத்தால் வித்தியாசம் அடைந்திருப்பது அவதானிக்கப்பட்டது. இந்த உருப்படிகளை இனங்காண்பதற்குத் தேவையான ஒப்பீட்டு அறிக்கைகள் (comparisons sheet) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) இடை செலுத்தல் சான்றிதழ்கள் (IPC) 13 சார்பில் தாமதக் கட்டணமாக 21,772,797 ரூபா (VAT வரி உள்ளடங்களாக) 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் சியெரா ஜாயின்ட் வெஞ்சர்(Sierra joint venture pvt.Ltd) நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இத்தொகையில் 8,837,002 ரூபா செலுத்துவதற்காக 2017 டிசம்பர் 29 மற்றும் 2018 செப்டம்பர் 21 ஆம் திகதிய கடிதங்களின் மூலமும், 11,324,990 ரூபா செலுத்துவதற்காக 2020 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் கட்டிடப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு தாமதக் கட்டணம் செலுத்துவதற்கு ஏதுவான விடயங்கள் கணக்காய்விற்கு வெளிக்கொணரப்படவில்லை.

**3.2 சொத்துகளுக்கான சோதனை**

(அ) தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமாக தொழில் அலுவலகங்கள் இயங்கிவந்த 03 கட்டிடங்கள் குறித்த அலுவலகங்கள் புதிய கட்டிடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டதன் காரணமாக 01 தொடக்கம் 09 வருடங்கள் வரை பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான மத்துகம, மஹியங்கனை, அம்பாந்தோட்டை மற்றும் கிளிநொச்சி ஆகிய 04 மாவட்ட அலுவலகங்களினதும் மாவட்ட கைத்தொழிற்சாலை ஆய்வு பொறியியல் அலுவலகத்தின் கட்டிடங்களினதும் பெறுமதிகளை மதிப்பிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. மனிதவள முகாமைத்துவம்**

**4.1** அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, தற்போதுள்ள பதவியணி மற்றும் தனிநபர் சம்பளத்திற்கான செலவு.

மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, தற்போதுள்ள பதவியணி மற்றும் காணப்படுகின்ற வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை** | **தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| **i.** | சிரேஸ்ட நிலை | 210 | 136 | 74 |
| **ii.** | மூன்றாம் நிலை | 668 | 495 | 173 |
| **iii.** | இரண்டாம் நிலை | 1,758 | 1,488 | 270 |
| **iv.** | ஆரம்ப நிலை | 489 | 438 | 51 |
| **v.** | ஏனைய(அமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 13 | 13 | 0 |
| | மொத்தம் | **3,138** | **2,570** | **568** |

இதன்படி 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 3138 என்றபோதிலும் தற்போது உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 2570 ஆகும். இதனடிப்படையில் 568 வெற்றிடங்கள் காணப்பட்டன. எவ்வாறாயினும், தொழில் ஆணையாளர் நாயகத்தின் பதிலின் பிரகாரம், 2021.04.30 ஆம் தேதியில் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 2651 எனவும் அத்திகதியில் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 487 எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**ரீ.ஜீ.ஐ. பத்மினி**
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக

# நான்காம் அத்தியாயம்

# செயலாற்றுகைச் சுட்டிகள்

# செயலாற்றுகைச் சுட்டிகள

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| விசேட சுட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த தொழில் பரிசோதனைகளில் தரத்தில் உயர்ந்த(A மற்றும் B) தொழில் பரிசோதனைகளுக்கான எண்ணிக்கையின் சதவீதம் | | 79% | |
| இலக்காகக் கொள்ளப்பட்ட தொழில் பரிசோதனைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்கான எண்ணிக்கையின் சதவீதம் | | | 57% * |
| சிறுவர் தொழிலாளர்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையின் சதவீதம் | | 79% | |
| சமூக உரையாடலின் பொருட்டு நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையானது இலக்கின் சதவீதமாக | 70% | | |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான அனுகூலங்கள் 14 நாட்களுக்குள் செலுத்தப்படுவதன் சதவீதம் | | | 68% |
| ஒட்டுமொத்த பணியாட்தொகுதியில் பயிற்சி பெற்ற எண்ணிக்கையின் சதவீதம் | 12% ** | | |
| திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடுகளில் பயன்படுத்தப்பட்ட சதவீதம் | 94% | | |

* குறிப்பு - வருடத்தில் நிலவிய கோவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக வெளிக்களப் பரிசோதனைகள் நடத்தப்படுவது சில மாதங்களில் முழுமையாகநிறுத்தப்பட்டிருத்தல் மற்றும் வெளிக்களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது வரையறுக்கப்படவேண்டியேற்பட்டதன் காரணமாக இலக்காகக் கொள்ளப்பட்ட தொழில் பரிசோதனைகளை மேற்கொள்வது சிரமமாக அமைந்தது.

** உத்தியோகத்தர்களை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒன்றுகூட்ட முடியாமல் சென்றதன் காரணமாகவும் வருடத்தில் ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ஆகக்குறைந்த நிதி ஏற்பாடுகளின் அளவு காரணமாகவும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதன் சதவீதத்தினை வருடத்தில் இலக்கு மட்டத்திற்குக் கொண்டுவர முடியவில்லை.

# ஐந்தாம் அத்தியாயம்

# நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDGs) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

# நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDGs) அடைந்து கொள்வதன் செயலாற்றுகை

### 5.1 இனங்காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

இலங்கை 2030 ஆம் ஆண்டளவில் அடைய வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கு மத்தியில் தொழில் திணைக்களத்தின் பணியின் பிரகாரம் திணைக்களத்திற்கு நேரடியாக ஏற்புடையதாக அமைவது 08 வது குறிக்கோளாகும். அதாவது, அனைவருக்கும் நிலையான, முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையான ஆக்கவிளைவுடன்கூடிய மற்றும் ஆரோக்கியமான தொழில் வாய்ப்புகளை ஊக்குவித்தல் எனும் குறிக்கோளாகும். அதன்படி தொழில் திணைக்களத்தின் நோக்கு மற்றும் பணி என்பன இந்த குறிக்கோளுடன் இசைவாக்கம் அடைவதோடு திணைக்களத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்குமான இறுதி வெளியீடு இந்தக் குறிக்கோளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதாகும். அவ்வகையில் நோக்கும்போது திணைக்களத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தின் மூலம் 08வது குறிக்கோளை அடைந்து கொள்வதன் முன்னேற்றம் தெளிவாகத்தெரிகின்றது.

இவற்றைத் தவிர 01 ஆம் குறிக்கோளாகிய அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற அனைத்து வகையான வறுமையையும் முடிவுக்குக் கொண்டு வருதல், 05வது குறிக்கோளாகிய பால்நிலை சமத்துவத்தை அடைந்து அனைத்துப் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுதல் மற்றும் 16 வது குறிக்கோளாகிய நிலைபேறான அபிவிருத்தியின் நிமித்தம் அமைதியானதும் முழுமையானதுமான சமூகங்களை உருவாக்குதல், நீதிக்கான வாய்ப்பினை சகலருக்கும் வழங்குதல் மற்றும் சகல மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புடன்கூடிய முழுமையான நிறுவனங்களை உருவாக்குதல் ஆகிய குறிக்கோள்களும் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு அமைய பொருத்தமானவாறு ஏற்புடையதாக அமையும்.

| இலக்கு / நோக்கம் | | இலக்குகள் | | வெற்றிச் சுட்டிகள் | | இதுவரை வெற்றிபெறுவதன் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற அனைத்து வகையான வறுமையையும் முடிவுக்குக் கொண்டு வருதல் | 1.1 | 2030 ஆம் ஆண்டளவில் உலகின் சகல இடங்களிலும் வாழ்கின்ற மக்களின் தீவிரமான வறுமையை இல்லாதொழித்தல். இன்றைய மதிப்பீட்டின் பிரகாரம் நாளொன்றுக்கு 1.25 டொலரை விடக் குறைந்த வருமானம் பெறும் மக்கள் தீவிரமான வறுமையைக் கொண்டுள்ள குழுவில் உள்ளடங்குவர். | 1.1.1 | பால்நிலை, வயது, தொழில் வாய்ப்பு மட்டம் மற்றும் புவியியல் அமைப்பு (நகர, கிராம) ஆகிய காரணிகளுக்கு ஏற்ப சர்வதேச வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களின் விகிதம் | தனியார் துறை ஊழியர்கள் பெற்றுக்கொண்ட ஆகக்குறைந்த மாதாந்த சம்பளமாகிய 10,000.00 ரூபா தொகையினை 2,500.00 ரூபாவினால் அதிகரிப்பதற்கு தேசிய ஆகக்குறைந்த சம்பள சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| 05 | பால்நிலை சமத்துவத்தை அடைந்து அனைத்துப் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுதல் | 5.1 | பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிராக சகல இடங்களிலும் இடம்பெறுகின்ற சகல விதமான பாகுபாடு காட்டப்படுதல்களையும் இல்லாதொழித்தல் | 5.1.1. | பால் நிலை சமத்துவம் மற்றும் பாகுபாடு காட்டப்படாமையை மேம்படுத்தப்படுவதனை வலுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான சட்டக் கட்டமைப்பு உள்ளதா இல்லையா என்பது. | 2020 ஆம் ஆண்டின் மகளிர் தினத்தை அடிப்படையாகக் கொண்டு தனியார் துறையின் பல்வேறுபட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்ற பெண் ஊழியர்களுக்கான பிரசவ விடுமுறை வழங்குதல் மற்றும் தாய்ப் பால் வழங்குவதற்கான ஓய்வு நேரம் உரிய வகையில் வழங்கப்படுகின்றதா என்பதை பரிசோதிப்பதற்காக ஒட்டுமொத்த நாடும் உள்வாங்கப்படுகின்ற வகையில் கூட்டு பரிசோதனைத் தொடரொன்று நடத்தப்பட்டது,<br><br>பெண்களுக்கான சேவை நிபந்தனைகள் தொடர்பாக பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய பிரிவுக்கு கிடைத்த 23 முறைப்பாடுகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் 06 விசாரணைகளை முடிவுறுத்துதல்,<br><br>607நிறுவனங்கள் உள்வாங்கப்படும் வகையில் பெண் தொழிலாளர்கள் |
| | | 5.2 | மனித வஞ்சக் கடத்தல் பாலியல் மற்றும் ஏனைய வகையிலான துஷ்பிரயோகங்கள் உள்ளடங்களாக பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிராக பொது மற்றும் தனிப்பட்ட இடங்களில் இடம்பெறுகின்ற அனைத்து வகையான வன்முறைகளையும் இல்லாதொழித்தல் | 5.2.1 | கடந்த 12 மாத காலப்பகுதியில், துன்புறுத்தலின் தன்மை மற்றும் வயதின் பிரகாரம் வாழ்க்கைத் துணை இருந்த/இருக்கின்ற, 15 வயதுக்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளுக்கு மத்தியில் உடல், பாலியல் அல்லது உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளான அளவு | |
| | | 5.3 | பால்நிலை சமத்துவம் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பெண்களையும் சிறுமிகளையும் வலுவூட்டுவதற்காக சாதகமான | 5.3.1 | பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதனை இனங் காண்பதற்காக மற்றும் அரச நிதி ஒதுக்கீடுகளை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | கொள்கைகளை பயன்படுத்துதல், வலுவூட்டுதல் மற்றும் சட்டத்தை செயல்படுத்துதல் | | கொண்ட முறைகள் காணப்படுகின்ற நாடுகளின் எண்ணிக்கை | தொடர்பில் விசேட குழுப் பரிசோதனைகள் நடத்தப்படுதல், கடற்றொழில் மற்றும் நீரக வள திணைக்களத்தின் நிறைவேற்றுப் பதவியணி, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு பெண்கள் மற்றும் சிறுவர்கள் சம்பந்தமான சட்டம் தொடர்பாக 02 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். |
| 8 | அனைவருக்கும் நிலையான, முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையான ஆக்கவிளைவுடன்கூடிய மற்றும் ஆரோக்கியமான தொழில் வாய்ப்புகளை ஊக்குவித்தல் | 8.5. | 2030 ஆம் ஆண்டளவில் அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளடங்களாக அணைத்துப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் பயனுள்ள மற்றும் கண்ணியமான தொழில் வாய்ப்புக்களை வழங்குதல் | 8.5.1 | தொழில், வயது மற்றும் அங்கவீனமுற்ற ஆட்கள் எனும் காரணிகளின் அடிப்படையில் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களின் ஒரு மணித்தியால சாதாரண வருமானத்தை ஈட்டுதல் | தொழில் சட்டங்களின் பிரகாரம் தனியார் மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் ஒரு மணித்தியால சாதாரண வருமானம் தொழில், வயது மற்றும் அங்கவீனமுற்ற ஆட்கள் எனும் காரணிகளின் அடிப்படையில் அல்லது பால்நிலை அடிப்படையில் மாற்றமடைய மாட்டாது. |
| | | | | 8.5.2 | பால்நிலை, வயது மற்றும் அங்கவீனமுற்ற ஆட்களுக்குரியதான தொழில் இன்மை விகிதம் | |
| | | 8.7 | பலாத்காரமாக தொழில் பெறுவதனை இல்லாதொழிப்பதற்காக உடனடியாக பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பெண்களை அடிமைத் தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் மனித வஞ்சக் கடத்தலை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் சிறுவர் போராளிகளாக ஆட்சேர்ப்பு செய்யப்படுதல் உள்ளடங்களாக மிகவும் மோசமான வகையில் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதனை தடைசெய்தல் மற்றும் இல்லாதொழித்தல் மற்றும் 2025 ஆம் ஆண்டளவில் அனைத்து வகையான சிறுவர் தொழிலாளர்களையும் பயன்படுத்துவதனை முடிவுறுத்துதல். | 8.7.1. | பால்நிலை மற்றும் வயது என்பவற்றின் அடிப்படையில் 5 -17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர் தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ள அளவு மற்றும் எண்ணிக்கை | “புதிய ஆபத்துமிகு தொழில்வாய்ப்பு ஒழுங்கு விதி”யை வரைபு செய்து அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு அதன் இறுதி வரைபு நகல் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து கிடைத்துள்ளது.<br><br>சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்தக்கூடிய வயதினை 14 தொடக்கம் 16 வரை அதிகரிப்பதற்கான திருத்தம் பாராளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்பு நிலையில் உள்ளது.<br><br>சிறுவர் செயற்பாட்டு ஆய்வு அறிக்கையின்(Child Activity Survey– 2016) பிரகாரம் இந்த நாட்டில் சிறுவர் தொழிலாளர்கள் என்பதோடு அதனை பூச்சிய நிலைக்குக் கொண்டுவருவதற்குத் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் ஆபத்து மிகு சிறுவர் தொழில் மற்றும் சிறுவர் தொழிலாளர்கள் பற்றிய விசேட குழு விசாரணைகளுக்காக 290 நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டன. |
| | | 8.8. | தொழிலாளர்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்தல், குறிப்பாக புலம்பெயர் பெண்களை உள்ளிட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் ஆபத்து மிக்க தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் உள்ளடங்கலாக பணிபுரியும் அனைவருக்காகவும் பாதுகாப்பான பணி இடங்களுடன் கூடிய சூழல்களை மேம்படுத்துதல் | 8.8.1. | பால்நிலை மற்றும் புலம்பெயர் தன்மையின் பிரகாரம் தொழில் சார்ந்ததாக மரணம் ஏற்படுத்தக்கூடிய மற்றும் மரணம் ஏற்படுத்தாத விபத்துக்கள் இடம்பெறும் விகிதங்கள் | தொழில் சார்ந்த மரணம் ஏற்படக்கூடிய மற்றும் மரணம் ஏற்படுத்தாத விபத்துக்களைக் குறைப்பதற்காக திணைக்களத்தினால் பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி விபத்துகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களை கைத்தொழிற்சாலை பரிசோதனைகளின் மூலம் இனங்காணுதல், கைத்தொழிற்சாலை தொழில் தருநர் தொழிலாளர் தரப்பினர்களை அறிவூட்டுதல், விபத்துக்களை தடுப்பது தொடர்பில் அறிவூட்டப்பட்ட கைத்தொழிற்சாலைகள் அவ்வாறு மேற்கொள்ளாமை தொடர்பாகவும் விபத்துக்களை அறிக்கையிடாமை தொடர்பாகவும் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் பால் நிலையின் பிரகாரமும் புலம்பெயர் நிலைமையின் பிரகாரமும் அறிக்கைகள் பேணப்படுவது தற்போது இடம்பெறுவதில்லை என்பதோடு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| | | | | 8.8.2. | பால்நிலை மற்றும் புலம்பெயர் மட்டத்தின் பிரகாரம் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆவண மூலங்கள் தேசிய அரசியலமைப்பு என்பவற்றின் அடிப்படையில் தொழிலாளர் உரிமைகள்(ஒன்று கூடுவதற்கான மற்றும் கூட்டு பேரம் பேசுவதற்கான சுதந்திரம்) தொடர்பாக உள்ள தேசிய இசைவாக்கத்தின் மட்டம். | ஒன்று கூடுவதற்கான மற்றும் பேரம் பேசுவதற்கான சுதந்திரம் காணப்படுவதோடு அதன்படி 2020.12.31 ஆம் திகதியில் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | இந்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1843 ஆகும். |
| 16 | நிலைபேறான அபிவிருத்தியின் நிமித்தம் அமைதியானதும் முழுமையானதுமான சமூகங்களை உருவாக்குதல், நீதிக்கான வாய்ப்பினை சகலருக்கும் வழங்குதல் மற்றும் சகல மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புடன்கூடிய முழுமையான நிறுவனங்களை உருவாக்குதல் | 16.2 | சிறுவர்கள் கொடூரமான சித்திரவதைகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் சுரண்டல்களுக்கும் வஞ்ச கடத்தலுக்கும் அனைத்து வகையான வன்முறைகளுக்கும் உள்ளாக்கப்படுவதை முடிவுக்குக் கொண்டு வருதல் | 16.2.3 | 18 வயதாகும்போது பாலியல் துன்புறுத்தலை அனுபவித்துள்ள 18 - 29 வயதுக் குழுவிலுள்ள இளம் பெண்களினதுவும் ஆண்களினதும் எண்ணிக்கை | "புதிய ஆபத்துமிகு தொழில்வாய்ப்பு ஒழுங்கு விதி" யை வரைபு செய்து அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு அதன் இறுதி வரைபு நகல் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து கிடைத்துள்ளது.<br><br>சிறுவர்களை சேவையில் ஈடுபடுத்தக்கூடிய வயதினை 14 தொடக்கம் 16 வரை அதிகரிப்பதற்கான திருத்தம் பாராளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்பு நிலையில் உள்ளது. |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் வெற்றிகளும் சவால்களும்

2020 ஆம் ஆண்டில் நிலவிய கோவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக மேற்கொள்வதற்கு இலக்காககொள்ளப்பட்ட செயற்பாடுகள் பலவற்றுக்கான இலக்குகளை அடைந்து கொள்வது சிரமமாக அமைந்தது.

# ஆறாம் அத்தியாயம்

# மனிதவள தோற்றப்பாடு

# மனிதவள தோற்றப்பாடு

## 6.1 மனிதவள முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | இருக்கின்ற பதவியணி | வெற்றிடங்கள் எண்ணிக்கை | வெற்றிடங்கள் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| சிரேஸ்ட | 210 | 136 | 74 | 35% |
| மூன்றாம் நிலை | 668 | 495 | 173 | 26% |
| இரண்டாம் நிலை | 1758 | 1488 | 270 | 15% |
| ஆரம்ப நிலை | 489 | 438 | 51 | 10% |
| மொத்தம் | **3125** | **2557** | **568** | **18%** |

### 6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையின்மீது மனித வள பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியுள்ள விதம்

திணைக்களத்தில் 2020.12.31 ஆம் திகதியில் சிரேஸ்ட மட்ட அலுவலர்களுக்கான வெற்றிடங்களின் சதவீதம் 35% என்பதோடு மூன்றாம் நிலை மட்ட அலுவலர்களுக்கானவெற்றிடங்களின் சதவீதம் 26% ஆகும். இவ்விரு மட்டங்களிலும் உள்ளவர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதில் பங்களிப்பு நல்கும் அலுவலர்கள் என்பதால் அந்த மட்டங்களில் வெற்றிடங்கள் எண்ணிக்கை அதிக சதவீதத்தைக் கொண்டிருப்பதன் மூலம் நிறுவன பதவி படிநிலையில் தீர்மானங்களை மேற்கொள்ளுதல், பொறுப்புகளை ஏற்றல் போலவே மேற்பார்வை மற்றும் வழிகாட்டல் போன்ற சந்தர்ப்பங்களில் நடைமுறை ரீதியான பல சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதன்மூலம் ஏனைய உத்தியோகத்தர்களின் கடமைகளை நிறைவேற்றும் ஆக்கவிளைவும் குறைவடையும். அதேவேளை உத்தியோகத்தர்கள் தமக்குரிய கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய வெற்றிடங்களாகவுள்ள பதவிகளின் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டிஏற்படுகின்ற பொழுது அவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டி ஏற்படுகின்ற வேலையின் அளவு அதிகரிப்பதன் மூலம் ஆக்கவிளைவு குறைவடைதல் மற்றும் அவர்கள் உடல் மற்றும் உள ரீதியான சோர்வடைதலுக்கு உள்ளாவதற்கும் வாய்ப்புள்ளது.

அதேவேளை திணைக்களத்தினால் தொழில்துறைக்குரிய சுமார் 14 சட்டங்களின் கடமைகள் நாளாந்தம் மேற்கொள்ளப்படுவதோடு ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படுதல் சம்பந்தமான நடவடிக்கைகள், முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்யும் நடவடிக்கைகள் போன்ற கடமைகளும் நாளாந்தம் நிறைவேற்றப்படுகின்றன. முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களின் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் காரணமாக இப்பணிகளை வினைத்திறன்மிக்க வகையில் மேற்கொள்வது கடினமாக அமைந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது போதியளவு உத்தியோகத்தர்களின்மை காரணமாக திணைக்களத்தின் நாளாந்த நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்க வகையில் மேற்கொள்வது சிரமமாக உள்ளது.

## 6.3 மனித வள அபிவிருத்தி

திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் அவர்களின் தொழில்சார் அறிவுஆற்றல் மற்றும் மனோபாவ விருத்தி போலவே அவர்களின் கடமைகளை நிறைவேற்றும் வினைத்திறன் மற்றும் ஆக்கவிளைவு என்பவற்றின் மேம்பாடு பிரதான நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. அதேவேளை, திணைக்களம் கொண்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் வளங்கள் என்பவற்றை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து நவீன தொழில்நுட்பத்தை தமது கடமைகளுக்காக பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களை தூண்டுவதற்கும் பொது மக்களுக்கு மிகவும் நெருக்கமான சேவையை வழங்குவதற்காக உத்தியோகத்தர்களின் மும்மொழி தேர்ச்சியினை மேம்படுத்துவதற்கும் திணைக்களத்தில் பயனுள்ள இடைத் தொடர்புகளை உருவாக்குவதற்கும் இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன. அதன் பிரகாரம் அரச சேவையில் அதிகளவு அனுபவமிக்க, வினைத்திறன் மிகு மற்றம் திருப்தியுடன்கூடிய உத்தியோகத்தர் குழுவொன்றை உருவாக்குவது இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இடம்பெறுகின்றது.

2020 ஆம் ஆண்டில் திணைக்கள உத்தியோகத்தர்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி பாடநெறிகளில் பங்கேற்பு பின்வருமாறு அமைகின்றது.

| தொடர். இல | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்’ணிக்கை | | நிகழ்ச்சித்திட்டத்தின் கால அளவு | ஒட்டு மொத்த முதலீடு (ரூபா.’000) | பயிற்ச்சியின்தன்மை (உள்நாடு/வெளிநாடு) | | வெளியீடு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பதவி | ஊழியர்களின் எண்’ணிக்கை | | உள்நாடு | உள்நாடு /வெளிநாடு | | |
| திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்ச்சி மற்றும் வெளியீட்டு பிரிவினால்நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் | | | | | | | | |
| 1 | புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கான ஆரம்ப பயிற்சித் திட்டம் | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் | 97 | 05 நாட்கள் | 103,800.00 | | உள்நாடு | புதிய உத்தியோகத்தர்ளுக்கு பயிற்சி வழங்குதல் |
| 2 | கௌரவ அமைச்சரின் அனுசரணையின் கீழ் நடுத்தீர்ப்பாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை | நடுத்தீர்ப்பாளர்கள் | 78 | 01 நாள் | 72,870.00 | | உள்நாடு | நடுத்தீர்ப்பாளர்களின் பணிகள் பற்றிய அறிவு மேம்படுத்தப்பட்டது |
| வெளியாளர் பயிற்சி நிறுவனங்களின் பயிற்சிகளுக்காக அலவலர்களுக்குக் குறிப்பிடல் | | | | | | | | |
| ' பயிற்சிப்பட்டறைகள் | | | | | | | | |
| 3 | அணுகல்கட்டுப்பாட்டுஅமைப்பு மீதானபயிற்சிப்பட்டறை | தொழில்நுட்ப லுவலர்கள் | 01 | 01 நாள் | 6,000.00 | | உள்நாடு | அலுவலர்களின்அறிவு மேம்படுத்தப்பட்டது.. |
| 4 | பொதுத்துறை நூலகர்களுக்கான இணைய அறிவு மற்றும்சமூகஊடகங்களின் பயன்பாடு | நூலகர்கள் | 02 | 01 நாள் | 4,000.00 | | உள்நாடு | அலுவலர்களின்அறிவு மேம்படுத்தப்பட்டது.. |
| 5. | பொதுஅலுவலர்களின் சம்பளங்கள் தயாரித்தல் | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள | 02 | 01 நாள் | 8,000.00 | | உள்நாடு | பொதுதிணைக்கள அலுவலர்களுக்கான சரியானசம்பளமாற்றிடு |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | கணக்காய்வுவிசார ணைகளுக்குபதில் அளித்தல் | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் | 03 | 03 நாட்கள் | 30,000.00 | | உள்நாடு | கணக்காய்வுவிசாரணை களுக்குபதில் அளித்தல்தொடர்பான அறிவுஅலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்டது. |
| 7 | பொதுத்துறைக்கு ஆட்சேர்ப்புச்செய்யு ம்கடமைகள் தொடர்பானவை | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் | 01 | 02 நாட்கள்; | 8,000.00 | | உள்நாடு | ஆட்சேர்ப்புச்செய்யும்கட மைகள்தொடர்பான அறிவுஅலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்டது. |
| 8 | கொள்வனவு நடைமுறை | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் | 01 | 02 நாட்கள் | 8,000.00 | | உள்நாடு | கொள்வனவு நடைமுறையை சரியாக நடாத்துதல் தொடர்பான அறிவை மேம்படுத்துதல் |
| டிப்லோமா, பட்டப்படிப்பு, முதுகலைமானிப்பட்டம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்குக் குறிபிடல் | | | | | | | | |
| 9 | சமூகவியல் முதுகலைமானிபட்ட ம் | உதவித் தொழில் ஆணையாளர் | 01 | | 102,500.00 | | உள்நாடு | அலுவலரகளின் கடமை தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டது |
| 10 | சட்டப் பட்டப் பின் படிப்பு | சட்ட அலவலர் | 01 | | 300,000.00 | | உள்நாடு | அலுவலரகளின் கடமை தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டது |
| 11 | பட்டப் பின் படிப்பு அபிவிருத்திக் கற்கைகள் | பிரதித் தொழில் ஆணையாளர் | 07 | | 550,000.00 | | உள்நாடு | அலுவலரகளின் கடமை தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டது |
| 12 | மனித வளங்கள் முகாமைத்துவம் | உதவித் தொழில் ஆணையாளர் | 01 | | 110,000.00 | | உள்நாடு | அலுவலரகளின் கடமை தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டது |
| 13 | பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் | உதவித் தொழில் ஆணையாளர் | 05 | | 550,000.00 | | உள்நாடு | அலுவலரகளின் கடமை தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டது |
| 14 | தொழில் உறவுகள் மற்றும் மனித வளங்கள் முகாமைத்துவம் பட்டப் பின் படிப்பு | பிரதித் தொழில் ஆணையாளர | 01 | | 98,500.00 | | உள்நாடு | அலுவலரகளின் கடமை தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டது |
| ஊ.சே.நி. ஆல் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள | | | | | | | | |
| 15 | ஊழியர் சேமலாப நிதியத்தால் அலுவலர்களுக்கா | ஊழியர் சேமலாப நிதிச் செயற்பாடு சம்பந்தமான | 68 | | 42,975.00 | | உள்நாடு l | அலுவலரகளின் கடமை தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டது |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ன பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நடவடிக்கைகளைக் கையாளும்அலுவலர்கள். | | | | | | |
| சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அனுசரணையின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சி செயலமர்வுகள் | | | | | | | | |
| 16 | பிணக்குகள் திர்மானம் மீதான பயிற்சி செயலமர்வுகள் | தொழில் ஆணையாளர்கள் / பிரதித் தொழில் ஆணையாளர்கள/உதவித் தொழில் ஆணையாளர்கள் | 40 | 10 நாட்கள் | | ILO இன்நிதி அனுசரணை | உள்நாடு | . பிணக்குகள் திர்மானம்இற்றைப்படுத்துதல்மீதான அலுவலர்களுக்கான அறிவு |
| 17 | சர்வதேச தொழில் தருநர்ளுடைய மற்றும் தொழிலாளர்களுடைய வலை வேலை (SGRA) ஊடாக அடிமட்ட செயற்பாடுகளுக்கான ஆதரவின் மீதான சர்வதேச முத்தரப்பு கூட்டம் | தொழில் ஆணையாளர் நாயகம் | 01 | 03 நாட்கள் | 40,275.00 | | வெளிநாடு (வியட்நாம்) | (SGRA) கருத்திட்டம்மீதான அனுபவங்களை பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளல் யப்பான் அரசாங்கத்தினால் அதற்கான நிதிஏற்பாடுகளைவிரிவுபடுத்தியுள்ளது. |

அட்டவணை 2.16 – 2020 இல் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடந்த நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியோர்

# ஏழாம் அத்தியாயம்

# இணக்க அறிக்கை

# இணக்க அறிக்கை

| இலக்கம் | ஏற்புடையதாக் கொள்ள வேண்டிய | இணக்க நிலை (இணங்குகின்றது/இணங்கவில் லை) | இணங்கவில்லையெனில் அதற்கான சுருக்கமான தெளிவுபடுத்தல் | இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காக முன்மொழியப்படும் சரியான தீர்மானங்கள் நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| 1 | பின்வரும் நிதிக்கூற்றுக்கள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | | |
| 1.1 | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | இணங்குகின்றது | | |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | இணங்குகின்றது | | |
| 1.3 | வியாபார மற்றும் உற்பத்தி முற்பண கணக்குகள (வணிக முற்பணக் கணக்குகள்) | ஏற்புடையதல்ல | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதல்ல | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்குகள் | ஏற்புடையதல்ல | | |
| 1.6 | ஏனைய | ஏற்புடையதல்ல | | |
| 2 | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படுதல் (நி.பி.445) | | | |
| 2.1 | பொதுநிர்வாக சுற்றறிக்கைகளின் படி 267/ 2018 நிலையான வைப்புக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |
| 2.2 | ஆட்களுக்கான சம்பளப் பதிவேடுகள் ஆட்களுக்கான சம்பள/ அட்டைகள் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |
| 2.3 | கணக்காய்வு விசாரணை பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்குச் சுருக்கம்(CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் பொதுத்திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் | இணங்குகின்றது | | |
| 2.6 | காசோலைகள் மற்றும் காசுக் கட்டளை பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |
| 2.7 | களஞ்சிய பொருட் பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |
| 2.8 | இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |
| 2.9 | சேத நட்ட பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.10 | பொறுப்புகள் பற்றிய பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |
| 2.11 | துணைப் பத்திர புத்தகப் பதிவேடு (GA-N20) இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் | இணங்குகின்றது | | |
| 03 | நிதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பகிர்ந்தளிக்கப்படுதல் (நி.பி.135) | இணங்குகின்றது | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்தில் சாட்டப்படுதல் | இணங்குகின்றது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் சாட்டப்படுதல் தொடர்பாக நிறுவனத்தில் விழிப்பூட்டல்களை மேற்கொள்ளுதல் | இணங்குகின்றது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக அங்கீகரிக்கப்படும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க சம்பள அட்டை மென்பொருள் கணக்கு பக்கேஜை பயன்படுத்தும்போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல் | இணங்குகின்றது | | |
| 4 | வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல் | இணங்குகின்றது | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல் | இணங்குகின்றது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல் | இணங்குகின்றது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தைத் தயாரித்தல் | இணங்குகின்றது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு (NBD) குறித்த தினத்தில் சமர்ப்பிக்கப்படுதல். | இணங்குகின்றது | | |
| 4.5 | வருடாந்த நிதிப் பாய்ச்சல் கூற்று குறித்த திகதியில் திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 5 | கணக்காய்வு விசாரணைகள் | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் வழங்கப்பட்டிருத்தல் | பெரும்பாலான சந்தரப்பங்களில் இணங்குகின்றது. | சில சந்தர்ப்பங்களில் தொடர்புடைய அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளிலிருந்து பதில்களைக் கோரும்போது உரிய தினத்தில் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை. | குறித்த திகதியில் பதில்கள் சமர்ப்பிக்கப்படுதல் தொடர்பாக தொடர்புடைய அலுவலகங்களும் பிரிவுகளும் விழிப்பூட்டப்பட்டுள்ளது. |
| 6 | உள்ளகக் கணக்காய்வு | | | |
| 6.1 | நி.பி.134 (2.DMA/1-2019) இன் படி வருடத்தின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல். | இணங்குகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.2 | ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்தில் பதில் வழங்கப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 6.3 | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகளை முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 7 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் | | | |
| 7.1 | DMA 2019 - 1 சுற்றறிக்கையின் படி ஆகக்குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 4 உரிய வருடத்தில் நடத்தப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 8 | சொத்துக்களுக்கான முகாமைத்துவம் | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்கமுடைய சொத்துக்களுக்கான முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் 07வது பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுதல் மற்றும் அகற்றப்படுதல் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோ நாயகம் அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 8.2 | மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் இணைப்பாக்கம் செய்வதற்காகவும் பொருத்தமான அலுவலர் நியமிக்கப்பட்டு அவர் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோ நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் படி பொருட் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு உரிய அறிக்கைகள் குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 8.4 | வருடாந்த பொருட் கணிப்பீட்டின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 8.5 | பாவனைக்கு உதவாத பொருட்களை அகற்றுதல் நி.பி.772 இன் படி மேற்கொள்ளப்படுதல் | இணங்குகின்றது | | |
| 9 | வாகன முகாமைத்துவம் | | | |
| 9.1 | ஒதுக்கத்தின் வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல். | இணங்குகின்றது | | |
| 9.2 | வாகனங்கள் பழுதடைந்து 06 மாதங்களுக்கும் | இணங்கவில்லை | அனைத்து மாவட்டங்களும் | இரண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறைவான காலப்பகுதியில் அகற்றப்பட்டிருத்தல் | | உள்வாங்கப்படுகின்ற வகையில் அமைந்துள்ள தொழில் அலுவலகங்களில் ஏதேனும் வாகனம் பழுதடைந்துள்ள போது அதனை அகற்றுவதற்கான செயன்முறையின் பொருட்டு குழுக்களை நியமித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காலம் செல்லுதல். | வருடங்களுக்கு ஒரு முறை அகற்றுவதற்கான குழுக்களை நியமித்து அகற்றுவதற்கான செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| 9.3 | வாகன லொக் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப் படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல் | இணங்குகின்றது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்துத் தொடர்பாகவும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | இணங்குகின்றது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்கமுடைய பொதுநிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிதல் தொடர்பாக மீண்டும் பரிசோதித்தல். | இணங்குகின்றது | | |
| 9.6 | குத்தகை காலப்பகுதியின் பின்னர் வாகன லொக் புத்தகங்களின் முழு உரிமையையும் சாட்டிக் கொண்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 10 | வங்கிக் கணக்குகளுக்கான முகாமைத்துவம் | | | |
| 10.1 | குறித்த திகதியில் வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து உறுதிப்படுத்தி அவற்றை கணக்காய்வு க்காக சமர்ப்பித்திருத்தல். | இணங்குகின்றது | | |
| 10.2 | மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முந்திய வருடங்களிலிருந்து முன்னெடுத்து வரப்பட்ட செயலிழந்த வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தில் | இணங்குகின்றது | | |
| 10.3 | வங்கி இணக்க கூற்றுக்களின் மூலம் வெளியாகிய மற்றும் சீராக்கப்பட வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த நிலுவைகள் ஒரு மாத காலப்பகுதியில் சீராக்கப்படுதல். | இணங்கவில்லை | | |
| 11 | நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு | | | |
| 11.1 | வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் அவற்றின் எல்லை மீறப்படாத வகையில் செலவு செய்யப்படுதல் | இணங்குகின்றது | | |
| 11.2 | நி.பி.94(1) பிரகாரம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் வருடத்தின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் | இணங்குகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | எல்லை விஞ்சிச் செல்லாத வகையில் பொறுப்புக்களை எட்டுதல் | | | |
| 12 | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் | | | |
| 12.1 | வரையறைகளுக்கு இசைவாக்கமடைதல் | இணங்குகின்றது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் மீதி தொடர்பாக காலபகுப்பாய்வு செய்யப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலத்திலிருந்து வருகின்ற நிலுவையிலுள்ள கடன் மீதி தீர்க்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக இருந்து வருகின்ற நிலுவையில் இருந்த கடன் மீதி ஓர் அளவினால் தீர்க்கப்பட்டுள்ளதோடு மேற்கொண்டும் தீர்க்கப்பட வேண்டிய நிலுவை கடன் மீதிகள் காணப்படுகின்றன. | |
| 13 | பொது வைப்புக் கணக்கு | இணங்குகின்றது | | |
| 13.1 | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி.571 இன் பிரகாரம் செயற்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல் | இணங்குகின்றது | | |
| 14 | கட்டு நிதிக் கணக்கு | | | |
| 14.1 | மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் நிலுவை திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 14.2 | நி.பி.371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட தனிநோக்கப் பணி துணை கட்டு நிதி அப்பணி முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 14.3 | நி.பி.371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையைக் கடந்து செல்லாத வகையில் தனிநோக்கப் பணி துணை கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 14.4 | கட்டுநிதி கணக்கின் நிலுவையை திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்பிடுதல் | இணங்குகின்றது | | |
| 15 | வருமானக் கணக்கு | திணைக்களத்திற்கென வருமானக் கணக்கொன்று இல்லை. | | |
| 15.1 | உரிய ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக ஒன்றுதிரட்டப்பட்ட வருமானத்தில் மீளச் செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருத்தல் | ஏற்புடையதல்ல | | |
| 15.2 | ஒன்றுதிரட்டப்பட்டிருந்த வருமான வைப்புக்கள் கணக்கில் வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருத்தல். | ஏற்புடையதல்ல | | |
| 15.3 | நி.பி.176 இன் படி நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் | ஏற்புடையதல்ல | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | | | |
| 16 | மனித வள முகாமைத்துவம் | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எல்லையில் பதவியணியைப் பேணிவருதல் | இணங்குகின்றது | | |
| 16.2 | பதவியணியைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்தின் வாயிலாக வழங்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 16.3 | 2017.09.20 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 2017/04 பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 17 | பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல் | | | |
| 17.1 | தகவல் அறிவதற்கான சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்குவதற்கான ஒரு பதிவேடு இற்றைப் படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல் | இணங்குகின்றது | | |
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் வலைதளம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதோடு வலைதளம் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக மக்களின் பாராட்டுக்களை/ குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கு வசதி வழங்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | | |
| 17.3 | தகவல் அறிவதற்கான சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |
| 18 | பிரஜைகள் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுதல் | | | |
| 18.1 | இலக்கம் (1)2018/05 மற்றும் 2008/05 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகளின் பிரகாரம் பிரஜைகள்/சேவைபெறுநர் சாசனமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல் | இணங்குகின்றது | பிரஜைகள் சாசனத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் மூலம் சகல அலுவலகங்களுக்கும் பிரிவுகளுக்குமுரிய தகவல்கள் ஒன்றுதிரட்டப்பட்டுள்ளதோடு இறுதிக் கட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| 18.2 | மேற்படி சுற்றறிக்கையின் 2.3 பந்தியின் பிரகாரம் பிரஜைகள்/சேவைபெறுநர் சாசனத்தைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான | இணங்குகின்றது | பிரஜைகள் சாசனத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியல் நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டிருத்தல். | | மூலம் அதனை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | |
| 19 | மனித வளத் திட்டம் தயாரிக்கப்படுதல் | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொதுநிர்வாக சுற்றறிக்கையின் அமைப்பு 02 மாதிரியை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | மனிதவளத் திட்டத்திற்கான அடிப்படை வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| 19.2 | பணியாட்தொகுதியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடமொன்றில் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பு மேற்படி மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படை வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| 19.3 | மேற்படி சுற்றறிக்கையின் இணைப்பு 01இல் தரப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பணியாட்தொகுதிக்கும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருத்தல். | இணங்குகின்றது | மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ளது | |
| 19.4 | மேற்படி சுற்றறிக்கையின்6.5 பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுதல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் பற்றிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருத்தல | இணங்குகின்றது | | |
| 20 | கணக்காய்வு பந்திகளுக்கு பதிலளித்தல் | | | |
| 20.1 | கடந்த வருடத்திற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருத்தல் | இணங்குகின்றது | | |

இறுதி.